# ஞானச்சுடர்

மார்கழி

2017


240 ஆவது மலர்




வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள் வழி



வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா
யாக்கை பொறுத்த நிலம்.

**பொருள்:** புகழில்லாதவனது உடலைச் சுமந்த நிலம் விளையாது.

(239)

வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
வாழ்வாரே வாழா தவர்.

**பொருள்:** தம்மிடத்தில் வசை உண்டாகாமல் வாழ்பவரே உயிர் வாழ்பவராவார்; புகழ் உண்டாகாமல் வாழ்பவரே இறந்தவராவர்.


(240)

# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

### முத்தி நல்குமே

### ஊதூது சங்கே ஊதூது – 2




ஊதூது சங்கே ஊதூது
ஒருபொல்லாப்பு மில்லையென் றூதூது
காது செவிடுபட ஊதூது
கங்குல்பகல் காணாமல் ஊதூது 01

நல்லூரான் திருமுன்புநின் றூதூது
நாமேநா மென்றுசொல்லி ஊதூது
எல்லாஞ்சிவன் செயலென் றூதூது
ஏகமன தாய்நின் றூதூது 02

அல்லும்ப கலுமற ஊதூது
ஆணவத்தை நீக்கிநின் றூதூது
வெல்லும் பகையொழிய ஊதூது
வேறுபொருள் இல்லையென் றூதூது 03

ஐம்பூதம்நா மல்லவென் றூதூது
ஐம்பொறிநா மல்லவென் றூதூது
ஐம்புலன்நா மல்லவென் றூதூது
அந்தக்கரணம் நாமல்லவென் றூதூது 04

# ஞானச்சுடர்



வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

உ

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் - 240

2017 பொருளடக்கம் மார்கழி


| | | |
|---|---|---|
| மனமே எங்கே செல்கின்றாய் | திருமதி ந. பரமேஸ்வரி | 01 -03 |
| திருச்சதகம் | சு. அருளம்பலவனார் | 04 -06 |
| ஆசாரமே நாவலரின்... | கே.எஸ். சிவஞானராஜா | 07 -08 |
| திருவருட்பயன் | ஆ. ஆனந்தராசன் | 09 -13 |
| சப்த விடங்கன் | அ. சுப்பிரமணியம் | 14 -18 |
| பகவத்கீதையின் உலகம்... | பூ. சோதிநாதன் | 19 -21 |
| இன்றைய காலத்தில்... | திருமதி ச. புனிதவதி | 22 -23 |
| 100 ஆண்டுகளாகச் சமய.. | வை. இரகுநாதமுதலியார் | 24 -27 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 28 -29 |
| தமிழ்மொழியின் அருமை... | பு. கதிரித்தம்பி | 30 -31 |
| நித்திய அன்னப்பணி... | சந்நிதியான் ஆச்சிரமம் | 32 -33 |
| ஈதல் அறம் | ஆர்.வீ. கந்தசுவாமி | 34 -35 |
| திருமுறை பாடிப் பணிவோம் | திருமதி சி. யோகேஸ்வரி | 36 -38 |
| மகான்களின் மகிமை | திருமதி த. வசந்தகுமாரி | 39 -40 |
| மன்னனின் ஐயங்களைத்... | திருமதி பொ. திலகவதி | 41 -43 |
| கண்டோம் கதிர்காமம் | அன்னைதாசன் | 44 -45 |
| மனிதனும் தெய்வ... | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 46 -47 |
| சமய வாழ்வு | இரா. செல்வவடிவேல் | 48 -50 |
| 2017இல் சந்நிதியான்... | தொகுப்பு | 51 -52 |
| சித்தர்களின் ஞானம் | சிவ. மகாலிங்கம் | 53 -58 |
| படங்கள் தரும் பதிவுகள் | சந்நிதியான் ஆச்சிரமம் | 59 -63 |
| வட இந்திய யாத்திரை | மோகனதாஸ் சுவாமிகள் | 64 -65 |



வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

# ஞானச்சுடர் கார்த்திகைமாத வெளியீடு

## வெளியீட்டுரை:-

கார்த்திகைமாத ஞானச்சுடர் மலருக்குரிய வெளியீட்டுரையினை இளைப்பாறிய அதிபரும் ஆச்சிரமத்தின் செயற்பாட்டோடு இணைந்த திரு ச. நவரத்தினராசவேல் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தம் உரையின் ஊடாக சந்நிதியான் ஆச்சிரமம் ஆரம்பகாலங்களில் ஆலயத்திற்கு வரும் அடியவர்களுக்கு அன்னம் வழங்கும் செயற்பாட்டில் ஆரம்பித்து காலத்தின் தேவை கருதி ஆலயத்தில் தங்கியுள்ள அடியவர்களின் பசிப்பிணியைப் போக்கும் வகையில் அன்னதானப்பணி நித்திய அன்னப்பணியாக வளர்ச்சிபெற்று அதன்மூலம் மேலதிகமாக வரும் நிதியினைக்கொண்டு இக்கால மக்களின் இடர்போக்கும் வண்ணம் பலவித சமய சமூகப் பணிகளில் ஈடுபட்டு வருவது யாவரும் அறிந்த விடயம்.

அதன் பகுதியாக சமய எழுச்சிக்காக ஆன்மீக தாகம் உள்ளவர்களின் தாகத்தைத் தீர்க்கும் முகமாக ஞானச்சுடர் என்னும் இம்மலரை 239 மாத காலமாகத் தொடராக வெளியிட்டு வருவது போற்றத்தக்கது. இம்மலர் வெளியீட்டின் நிமித்தம் நாமும் வருடம் ஒருமுறை கலந்துகொள்வது சந்நிதி வேலவனது பேரருள் என்று கூறி, தனது வெளியீட்டுரையினை நிறைவு செய்தார்.

## மதிப்பீட்டுரை:-

ஞானச்சுடர் 239ஆவது மலருக்குரிய மதிப்பீட்டுரையினை சந்நிதியான் ஆச்சிரமத்தின் செயற்பாட்டுக்கும், ஆச்சிரம பேரவையின் வளர்ச்சிக்கும் தன்னாலான பங்களிப்பை வழங்கிவருபவரும், சைவப்புலவரும் அதிபருமாகிய திரு செ. பரமேஸ்வரன் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

ஒவ்வொரு வருடமும் கார்த்திகை மாத மலருக்கு மதிப்பீட்டுரை ஆற்றும் பணியைச் செய்து வருபவர் இம்முறை மலரில் உள்ள ஆக்கங்களைப் பற்றி கருத்துக் கூறாமல் மலரின் உள்ளே உள்ள விடயதானங்களை மூன்றாக வகுத்து மூன்று பகுதிகளிலுள்ள சாராம்சங்கள் ஒன்றுக்கொன்று முரண்படாது உள்ளதை சபையில் உள்ள அடியார்களுக்கு விளக்கிக் கூறியதோடு மலரின் ஒவ்வொரு பக்க அடியில் போடப்படும் பொன்மொழிகள் கூட ஒழுங்காக அமைந்துள்ளதைப் பற்றியும் வியந்து கூறி ஒரு மாறுபாடான கோணத்தில் தனது மதிப்பீட்டுரையை ஆற்றினார்.

இறுதியாக வருடம் ஒருமுறை இம்மலர் வெளியீட்டின்போது மலருக்குரிய மதிப்பீட்டுரை ஆற்றுவதுகூட சந்நிதி வேலவனது பெருங்கருணை. அக்கருணை வெள்ள மானது சந்நிதியான் ஆச்சிரமத்தில் வியாபித்துள்ளது என்று கூறித் தனது மதிப்பீட்டுரை யினை நிறைவு செய்தார்.

# சுடர் தரும் தகவல்

அமரர் தியாகராசா மகேஸ்வரன் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்திலும் சரி, இந்து கலாசார அமைச்சராகப் பதவி வகித்த காலத்திலும் சரி "மக்கள் பணியே மகேசன் பணி" என்கிற நினைவோடு மக்கள் பணியாற்றி மறைந்த மாமனிதர் என்பது அனைவரும் அறிந்ததே. சமயம் - மொழி - இனம் - பிரதேசம் என்னும் எண்ணங்களுக்கு அப்பால் தமது சீரிய பணியினைத் தொடர்ந்த காரணத்தினாலேயே இன்றும் மக்கள் மனதில் நீங்காது நிலைபெற்று வாழ்கின்றார்.



காலம் முழுவதும் அவர் அணிந்திருந்த தூய வெண்மை நிற ஆடை போன்றே உள்ளமும் தூய்மையாக இருந்ததுவே அவரது அப்பழுக்கற்ற சேவையினை ஆற்றத் தூண்டியது.

அவர் அமைச்சராகப் பதிவி வகித்த காலம் போர்ச்சூழலினால் மக்கள் பல்வேறு சிரமங்களையும் எதிர்கொண்டிருந்த இடர் மிகுந்த காலம். ஆலயங்களில் விளக்கெரிக்க எண்ணைகூட கிடைக்காத காலம் அது. அவரது தீர்க்க தரிசனமான - திட்டமிட்ட சேவையினால் குடாநாட்டு ஆலயங்கள் ஒளிபெற்றுப் பிரகாசித்தன.

பொறுப்புமிக்க பல்வேறு பணிகளின் மத்தியிலும் சந்நிதியான் ஆச்சிரமத்தின்மீது அவர் கொண்டிருந்த ஈடுபாடும் ஆதரவும் தனித்துவமானது - மறக்கமுடியாதது.

தியாகராசா மகேஸ்வரன் மறைந்து ஆண்டுகள் ஒன்பது ஓடி மறைந்தாலும், அவரது பயனுள்ள பணிகள் பலகாலம் நிலைத்திருக்கும்.

# ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவகுப்பு

## 05. பெருத்த வசன வகுப்பு

அருக்க னுலவிய சகத்ர யமுமிசை
யதிற்கொள் சுவையென வனைத்து நிறைவதும்
அவஸ்தை பலவையு மடக்கி யகிலமு
மவிழ்ச்சி பெறவினி திருக்கு மவுனமும்
அசட்டு வெறுவழி வழக்கரறுவரு
மரற்று வனபொருள் விகற்ப மொழிவதும்
அழுக்கு மரவிருண் முழுக்கி னுழல்வதை
யடக்கி யவநெறி கடக்க விடுவதும்:,
எருக்கு மிதழியு முடிக்கு மிறைகுரு
வெமக்கு மிறையவ னெனத்தி கழுவதும்
இரட்டை வினைகொடு திரட்டு மலவுட
லிணக்க மறவொரு கணக்கை யருள்வதும்
இருக்கு முதலிய சமஸ்த கலைகளு
மிதற்கி தெதிரென வினைக்க வரியதும்
இறக்க வெனதெதிர் நடக்கும் யமபடர்
கடக்க விடுவதொ ரியற்கை யருள்வதும்:,

நெருக்கு வனவுப நிடத்தி னிறுதிகள்
நிரப்பு கடையினி லிருப்பை யுடையதும்
நெருப்பு நிலம்வெளி மருத்து வனமென
நிறைத்த நெறிமுறை கரக்கு முருவமும்
நினைப்பு நினைவது நினைப்ப வனுமறு
நிலத்தி நிலைபெற நிறுத்த வரியதும்
நிலைத்த வடியவர் மலைத்த லதுகெட
நிவர்த்தி யுறவரு பவிக்கு நிதியமும்:,
உருக்கு திருவருள் திளைத்து மகிழ்தர
வுளத்தொ டுரைசெய லொளித்து விடுவதும்
ஒளிக்கு மொளியென வெளிக்கும் வெளியென
உயிர்க்கு முயிரென நிகழ்ச்சி தருவதும்
உரத்த தனிமயி லுகைத்து நிசிசர
ரொளிக்க அமர்பொரு சமர்த்தனணிதனை
உடுத்த குறமகள் மணக்கும் அறுமுகன்
ஒருத்த னருளிய பெருத்த வசனமே.

# மார்கழி மாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

அ. தபேசன்
(இரசாயனவியற்துறை, யாழ். பல்கலைக்கழகம்)
மு. சுஸ்ருதன்
(சிறாம்பியடி வீதி, யாழ்ப்பாணம்)
வே. சம்பந்தநாதன்
(கிராமசேவகர், புன்னாலைக்கட்டுவன்)
சி. முஜீபன்
(இணுவில்)
செல்வி க. பாமதி
(கொக்குவில்)
திருமதி திருச்செல்வம் விஜிதா
(கூவில், புலோலி தெற்கு)
செ. சின்னத்துரை
(ஆசிரியர், மகாத்மாலேன், நெல்லியடி)
சி. வீரசிங்கம்
(நீதிமன்ற பதிவாளர், கரவெட்டி)
த. வயித்திலிங்கம்
(திருநெல்வேலி)
சி. சந்திரசேகரம்
(திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)
சி. தில்லைமணி
(வட்டுக்கோட்டை)
வ. அப்புத்துரை
(வல்வெட்டித்துறை)
மா. மகாலிங்கம்
(பழைய பொலிஸ் ரேசன் வீதி, ஆனைக்கோட்டை)
ச. தமிழ்ச்செல்வம்
(கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்)
திருமதி புனிதவதி சிவசுப்பிரமணியம்
(சுழிபுரம் மேற்கு)
S. சிவலிங்கராசா
(முதுநிலை விரிவுரையாளர், பல்கலைக்கழகம்)

கிருபைநாதன் அஜந்தன்
(இணுவில் மேற்கு)
வ. துரைராசலிங்கம்
(சுண்ணாகம் கிழக்கு)
கணேசராஜா நிர்மலராஜன்
(சண்டிலிப்பாய் மேற்கு, சண்டிலிப்பாய்)
திருமதி த. தவேந்திரன்
(ஆஸ்பத்திரி வீதி, சுண்டுக்குளி)
T. நாகராஜா
(கரந்தன், நீர்வேலி)
சுவாமிநாத இராஜேந்திரக்குருக்கள்
(நீர்வேலி)
அ. பஞ்சாபகேசசர்மா
(ஆவரங்கால்)
A.T. சிவனேசபிள்ளை
(ஞானத்தில்லை, இடைக்காடு)
சிதம்பரி சிவபாதம்
(மூத்தநயினார் கோயிலடி, ஆனைக்கோட்டை)
இ. வசந்தகுமார்
(மானிப்பாய் வடக்கு)
ச. சசிகரன்
(முருகமூர்த்தி வீதி, நெல்லியடி)
பொ. சந்திரமோகன்
(யாழ்ப்பாணம்)
சி. நீலையினார்
(இடைக்குறிச்சி, வரணி)
இராஜேந்திரம் கஜீபன்
(சண்டிலிப்பாய்)
நா. விக்னேஸ்வரன்
(கோகுலம், சுதுமலை)
தி. சிவபாதசுந்தரம்
(உயரப்புலம், ஆனைக்கோட்டை)
ந. சிவராஜா
(குமரக்கோட்டம், கோண்டாவில்)
சு. ஸ்ரீஸ்கந்தராசா
(பலாலி வீதி, திருநெல்வேலி)
நடராஜா சறோஜா
(குடும்பநலசேவை உத்தியோகத்தர், தெல்லிப்பழை)

சி. இரத்தினசபாபதி
(கன்னாதிட்டி ஒழுங்கை, யாழ்ப்பாணம்)
ஸ்ரீரஜனி அமரசிங்கம்
(அச்சுவேலி)
S.R. சரவணபவன்
(பிள்ளையார் கோயிலடி, தாவடி)
க. வாமதேவன்
(பஜனைச்சபை, வழக்கம்பரை)
திருமதி ச. செல்வறஞ்சனா
(சுண்ணாகம் கிழக்கு)
S. மனோகரன்
(மாதா கோயிலடி, கோப்பாய்)
த. ஜெயவதனா
(அல்வாய்)
கா.க. சிதம்பரநாதன்
(வட்டுக்கோட்டை)
த. சுகந்தன்
(நீர்வேலி வடக்கு, நீர்வேலி)
சி. சோமகுலசேகரம்
(கரவெட்டி)
சி. சரவணப்பெருமாள்
(மாணிக்கவளவு, கரணவாய்)
சிவலிங்கம் தேவமலர்
(அச்சுவேலி)
S. நவரெட்ணம்
(கெருடாவில் வடக்கு, தொண்டைமானாறு)
S. சத்தியமூர்த்தி
(காட்டுவளவு, வல்வெட்டித்துறை)
சு. சிவலிங்கம்
(குகன்குடிசை, பொலிகண்டி)
பா. பாலச்சந்திரன்
(சண்முகபவனம், மயிலணி)
செ. அரியானந்தம்
(வன்னியசிங்கம் வீதி, தாவடி வடக்கு)
N. குணரெட்ணம்
(புன்னாலைக்கட்டுவன் தெற்கு)
V. சிவனேசன்
(கமலை, மானிப்பாய் வீதி)

க. முருகானந்தன்
(கட்டுடைச்சந்தி, மானிப்பாய்)
செ. உலகநாதபிள்ளை
(வியாபாரிமூலை, பருத்தித்துறை)
செ. இராசதுரை
(வட்டுக்கோட்டை)
இ. பாஸ்கரன்
(சுதுமலை வடக்கு)
சே. புலேந்திரன்
(நீர்வேலி)
இ. நடராசா
(தாவடிச்சந்தி, கொக்குவில்)
பொ. செல்வகிருஷ்ணன்
(புலோலி தெற்கு, புலோலி)
சி. சிவசுப்பிரமணியம்
(ஆனந்தநிலையம், கரவெட்டி)
அ. பரமநாதன்
(தெல்லிப்பழை)
திருமதி கமலா குணரெத்தினம்
(வட்டுக்கோட்டை)
திருமதி சத்தியவாணி நந்தகுமார்
(நவாலி, மானிப்பாய்)
கந்தையா செல்வக்குமார்
(புத்தூர் கிழக்கு, புத்தூர்)
திருமதி அன்னலெட்சுமி
(சங்கானை)
சு. சண்முகரட்ணம்
(புத்தூர்)
சோமசுந்தரம் செல்வசுந்தரம்
(மீசாலை கிழக்கு)

**ஞானச்சுடர் வாசகர்களுக்கு எமது இதயங்கனிந்த புதுவருட நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

**2018**

# மனமே எங்கே ஓடுகின்றாய்

– திருமதி பரமேஸ்வரி நடராஜா அவர்கள் –

ஓடும் மனத்தை நிறுத்திடுவாய்
ஆடும் அம்பலத்தரசே நின்னருளால்
பாடு படுத்தும் பரியை அடக்கியே - நீ
நாடும் வழியில் நடத்திடுவாய்

மனம் என்பது மிகமிக நுண்ணிய தாகும். அதற்குப் பற்றுக்கோடு ஒன்று இல்லாமல் துலங்காது. ஆகவே எதையாவது பற்றிக்கொள்வதே அதன் இயல்பாகும். மனம் என்ற ஒன்று இருப்பதை உணர்பவன் மனிதன். இது முதலில் தான் என்ற உணர்விற்கு அடையாளமாயிருக்கும். உடம்பையே தான் என எண்ணி அதனைப் பற்றிக்கொள்கின்றது. நான் அழகாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் உருவாகின்றது. அதனால் உடம் பைப் பேணவேண்டுமென்ற எண்ணமுண்டாகி அதனைச் செயற்படுத்தும் வழியை நாடுகின் றது. அதன்பின் நான் புத்திசாலியாக இருக்க வேண்டுமென்ற எண்ணமுண்டாகின்றது. அதற் காகக் கல்வி கற்க வேண்டுமென்ற வேட்கை உண்டாகின்றது.

நான் அழகாக, புத்திசாலியாக இருப் பதால் என்னை எல்லாரும் பாராட்டவேண்டும் என்ற விருப்பு உண்டாகின்றது. இதற்காகத் தனக்கென்று ஓர் உறவைச் சுற்றத்தை மனம் நாடுகின்றது. "நான்" என்பது எனது தாய், தந்தை, சுற்றம் (கணவன்) மனைவி, பிள்ளை கள், நண்பர்கள் என விரிவடையும்போது எனது என்ற எண்ணம் தோன்றுகின்றது. இதன் பின் நான், எனது குடும்பம், சுற்றம், வாழத் தேவையான பொருளையீட்ட மனம் தூண்டப் படுகின்றது. இப்பொழுது நான், எனது, எனக்கு என்ற பற்றுக்கள் விருத்தியாகின்றன. இதுவே ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களாகும். ஆரம்பத்தில் இவை மனி தனை ஊக்குவிக்கும் காரணிகள் ஆகின்றன. இத்துடன் பற்று நின்றுவிட்டால் மனிதன் முன்னேறி மேலே செல்ல முடியாது. இந்தக் குடும்பச் சூழலுக்குள்ளே சுழன்று சுழன்று வரும்போது மனம் சலிப்படைகின்றது. புதி யதைப் பற்றிக்கொள்ள மனம் ஆசைப்படுகின் றது. ஆகவே இப்பற்றைச் சமூகப் பற்றாக விரித்துக்கொண்டால் சமூகத்திற்காக உழைக்க வேண்டும் என்ற எண்ணம் உதயமாகின்றது. இதனால் மனம் (எண்ணம்) விருத்தியடை கின்றது.

"நான்" என்ற நிலையில் கற்ற கல்வி நற்பண்புகளை விருத்தி செய்யும்போது மனித சிந்தனை உயர் சிந்தனையாக அமை கின்றது. யாம் பெற்ற செல்வம் (இன்பம்) எல்லோரும் பெறவேண்டுமென்ற உயர்ந்த சிந்தனை உருவாகின்றது. இந்நிலையில் மனம் ஆசை வயப்பட்டு கல்வியால் கிடைத்த பண்புகளை விட்டுப் பொருள், பதவி, புகழ் என்பவற்றில் மயங்கிவிடாதிருக்க விழிப்புடன் இருக்கவேண்டும். இப்படி விழிப்புடன் இருந்து செயற்படும்போது சமூகப்பற்று ஊர்ப்பற்றாக உயர்ந்து பின் நாட்டுப் பற்றாக மலர்கின்றது. நாம் பிறந்த நாடு தாய்நாடு என அழைக் கப்படுகின்றது. ஆகவே இந்நாட்டு மக்களெல் லாம் ஒருதாய் மக்கள் என்ற நல்லெண்ணம்

எவன் ஒருவன் பொறுமைசாலியாக இருக்கின்றானோ அவன் தான் நினைத்ததை அடைவான்.

தோன்றும்போது நாம் எல்லோரும் சகோதரர் கள் என்ற எண்ணம் உருவாகின்றது. இத னால் ஒற்றுமை விருத்தியாகின்றது. இப்படி விரிந்துகொண்டே செல்லும் மனம் சுயநலப் பற்றினின்றும் விடுபட்டுப் பொதுநலப் பற்றாக மாறுகின்றது.

பொதுநல வாழ்வில் வெற்றிபெற அநேக சோதனைகளைக் கடந்து வரவேண் டும். இச் சோதனைகளிற் சித்தியடைய வேண்டுமாயின் நாம் தெய்வீக சக்தியைப் பெறவேண்டும். இதற்காக மனம் எப்போதும் இறைவனைப் பற்றிக்கொள்ள வேண்டும். பொதுநல வாழ்வில் நமக்கு நேரிடும் இடை யூறுகள் பொதுச் சொத்தில் ஆசை வைத்துத் தனதாக்க முயற்சித்தல், பணப்பற்றில்லாத மனத்தை புகழ், ஆடம்பரம் என்பவற்றால் மயங்க வைத்தல், அதையும் வெல்லும்போது மாதரால் மயங்க வைத்தல், அதனாலும் மயங்காவிடத்து மது போதையால் அறிவை மயங்கச் செய்தல் போன்ற பல சோதனை களைக் கடந்து வெற்றிபெற இறைவன் ஒரு வனே துணை எனத் துணிவுடன் பற்றிக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு சோதனைகளில் வெற்றி பெற்ற மனம் உலக நலனுக்காக உழைக்க வேண்டும் என்று உந்தப்படுகின்றது. இப் போது மனம் உலகப் பற்றாக உயர்ந்து விரிவடைகின்றது. ஒரு தனி மனிதனால் உலக நலனுக்காக எவ்வாறு உழைக்க முடியும். தனிமனிதனின் இலட்சியம் ஈடேற இறையருள் பாலிக்கவேண்டும். இறைவனிடம் இடைவிடாத பிரார்த்தனை, கூட்டுப் பிரார்த் தனையாக மாறவேண்டும். மனித மனங்கள் இணைந்து ஒன்றுபட வேண்டும். மனம் கீழ் நோக்கிச் செல்லாமல் மேல்நோக்கி வளர மனத்தை இறைவனிடம் முற்றாக ஒப்படைக்க வேண்டும். இத்தகைய முயற்சி வெற்றிபெற வேண்டுமாயின் கூட்டு முயற்சி உருவாக வேண்டும். இளமையிலேயே வீட்டிலும், பாடசாலைகளிலும் ஒழுக்கப் பண்பாட்டோடு கல்வியும், இறை நம்பிக்கையும் ஊட்டி வளர்க்கப்பட வேண்டும். “ஆத்திசூடி, நல் வழி, கொன்றைவேந்தன் போன்ற நீதி நூல் களையும் அறநெறியோடு கூடிய சிறுகதை களையும் பிள்ளைகள் கற்றுணரத் தூண்டப் பட வேண்டும்.

“இளமையிற் கல்வி சிலையில் எழுத்து” என்பதற்கிணங்க பிள்ளைகளுக்குக் கற்பிப்பதோடு நின்றுவிடாமல் அவை மனத் தில் பதிய வைப்பதற்கு வீட்டுச் சூழல், சுற்றச் சூழல், சமுதாயச் சூழல் என்பன நன்றாக அமைய வேண்டும். இது பிள்ளைகளுக்கான நடைமுறைப் பயிற்சியாகும்.

பிள்ளைகள் நல்லதைப் பார்க்க, கேட்க, பயிற்சிபெற இறைவனின் லீலைகள், அற்புதங்கள் பெரியோர்கள், ஞானிகள், பக் தர்களின் வாழ்க்கை வரலாறுகள் இவற்றை அவர்களுக்கு நித்தம் நித்தம் பயிற்றுவிக்க வேண்டும்.

இதற்காக இன்றைய விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள், கருவிகள் பிள்ளைகளுக்கு நல்லவற்றைக் காட்சிப்படுத்த வேண்டும். பணத்தை மட்டும் நோக்காகக் கொள்ளாது பிள்ளைகளின் நல்வாழ்வைக் கருத்திற் கொண்டு பாடல்கள், கதைகள், நாடகங்கள் என்பவற்றை, வெளிப்படுத்தத் தொலைக் காட்சிகள், இணைய தளங்கள் என்பன வற்றை இயக்கும் இயக்குனர்கள் மனம் வைக்க வேண்டும். இன்றைய குழந்தைகள் நாளைய மனிதர்கள். ஆகவே நல்ல மனிதர் களை உருவாக்கி நல்லுலகத்தைப் படைத் தால் நாமும் வாழலாம் உலகமும் வாழும். வீரம், விவேகம், அறிவு, ஆற்றல், அன்பு மிகுந்த சமுதாயத்தை உருவாக்கி நாமும் நம் பிள்ளைகளும் வாழும் உலகம் அமைதி யாக இருக்க நம்மாலான பங்களிப்பை நம்

*உங்களை நீங்களே மதித்துக்கொள்வது ஆணவம்.*

உழைப்பின்மூலம் செய்வது ஒவ்வொரு மனிதனதும் கடமையாகும். ஆகவே எமது செயல்களை இறைவனுக்கு அர்ப்பணித்துச் செய்வதன்மூலம் உலகளாவிய ரீதியில் மனிதம் வாழும். எங்கிருந்தாலும் எமது பிள்ளைகள் புனிதமாக வளர்வர்.

ஓடுகின்ற மனத்தை இறைவனுக்கு அர்ப்பணித்து இறைவனைப் பற்றிக் கொண்டால் அவன் அதன் வேகத்தைக் கட்டுப்படுத்தி உலகிற்குப் பயன்படக்கூடிய சரியான பாதையிற் செலுத்துவான். ஆகவே மனமுள்ள ஒவ்வொரு மனிதனும் இதை உணர்ந்து செயற்பட்டால் வாழ்க்கைப் பாதை ஒளி நிறைந்ததாக அமையும். இதனால் வாழ்க்கைப் பயணம் சுகமாக அமைதி, ஆனந்தம் நிறைந்ததாக அமையும்.

மனமெனும் தோணிபற்றி
மதியெனும் கோலையூன்றிச்
சினமெனும் சரக்கையேற்றிச்
செறிகடல் ஓடும்போது
மனன் எனும் பாறை தாக்கி
மறியும்போது அறிய வொண்ணாது
உனையுனும் உணர்வை நல்காய்
ஒற்றியூர் உடைய கோவே.
(மனன்- மன்மதன்)

என்று இறைவனைப் பற்றிக்கொண்டு எமது வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்வோமாக. எல்லாம் வல்ல இறைவன் என்றும் அருள் புரிவான்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

## சைவத்தின் மகிமையும் பெருமையும்

சைவத்தின் முழுமுதல் சிவனே ஆவார்
சாந்த குணமே உடையவர் ஆவார்
சைவத்தின் தத்துவம் ஓங்கா ரமாமே
சகலதும் அதனுள் அடங்கி விடுமே
சைவத்தின் உட்பொருள் ஐந்தெழுத் தாகும்
தந்திடும் மந்திரம் சிவாய நமவே
சைவத்தின் கருவே லிங்க உருவே
தாங்கிய ஜோதி வடிவ தாமே
கைலயங் கிரியில் வீற்றிருப் பவராம்
கைலாய நாதன் அவனே யாவார்
உலகெலாம் உணர்ந்த உலக நாயகன்
உமையவள் தன்னையே சரிபாதி உடையவன்
பலவடி வாயினும் பரமன் ஒருவனே
பாரினைக் காத்துப் பரகதி அளிப்பவன்
நலமுடன் வாழ சிவனை நினைத்து
நற்கதி அடைவோம் சிவராத்திரியிலே.

-வ. யோகானந்தசிவம்-

*பிறரை விமர்சிக்கும் ஒருவன் தன் குறைகளை வெளிப்படுத்துகின்றான்.*

# திருச்சதகம் (தொடர்ச்சி...

## பத்திவைராக்கிய விசித்திரம்

(திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
– சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் –
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

## 05. கைம்மாறு கொடுத்தல்

49. போற்றி யென்றும் புரண்டும் புகழ்ந்துநின்
நாற்றல் மிக்கவன் பாலழைக் கின்றிலேன்
ஏற்று வந்தெதிர் தாமரைத் தாளுறும்
கூற்ற மன்னதொர் கொள்கையென் கொள்கையே.

**ப-ரை:** போற்றி என்றும்- நின் அருட்திரு மேனியைக் காணப் பெறாதயான் காத்தருள்க என்று வேண்டுதல் செய்தும், புரண்டும்- அங்கப்பிரதட்சணம் பண்ணியும், புகழ்ந்தும்- நின் பொய்யில் புகழைப் புகழ்ந்து பாடியும், நின்று- இந்நிலையில் அமைந்து ஆற்றல் மிக்க அன்பால் அழைக்கின்றிலேன்- உறுதிமிக்க மெய்யன்பினால் அழைத்தலும் செய்கின்றிலேன்; என் கொள்கை- இவ்வாறிருக்கின்ற எனது கொள்கை, எதிர் ஏற்று வந்து- முன்னிலையில் எதிர்த்து வந்து, தாமரை தாள் உறும் கூற்றம் அன்னது ஓர் கொள்கை- நின் தாமரை மலர் போன்ற திருவடியின் உதையினைப் பெற்ற கூற்றுவனது கொள்கையை ஒத்ததாகிய ஒருவகைக் கொள்கையேயாம்.

போற்றி என்றும் புரண்டும் புகழ்ந்தும் நின்று உறுதிமிக்க அன்பால் அழைத்தலும் செய்கின்றிலேன்; இவ்வாறிருக்கின்ற என் கொள்கை, முன்னிலையில் மாறுபட்டு வந்து நின் திருவடியின் தாக்குதலையடைந்த கூற்றுவனது கொள்கையை ஒத்ததாகிய ஒருவகைக் கொள்கையேயாம் என்பது.

அடிகள், திருவடியின்பம் நல்கிக் காத்தருள் என்று இறைவனை வேண்டுதல் செய்யவேண்டும் என்பார். 'போற்றி' என்றும், உடலாற் புரண்டு வலம்வந்து வழிபடல் வேண்டும் என்பார் 'புரண்டு' என்றும், அவன் பொய்யில் புகழைப் புகழ்ந்து பாடவேண்டும் என்பார் 'புகழ்ந்து' என்றும், மனமொழி மெய்கள் இங்ஙனம் இறைபணியில் நிற்க வேண்டும் என்பார். 'நின்று' என்றும் அருளினார். ஆற்றல்மிக்க அன்பு- திடமான அன்பு. அவ்வன்பினால் இறைவனை அழைத்தலே செயற்பாலதாகவும் அவ்வாறு செய்திலேன் என்பார். 'ஆற்றல் மிக்க அன்பால் அழைக் கின்றிலேன்' என்றார்.

ஏற்று வந்து எதிர் என்பதை எதிர் ஏற்றுவந்து என மாறிக் கூட்டிப் பொருள் கொள்க. எதிர்- முன்னிலை ஏற்றுவந்து- எதிர்த்து வந்து. தாமரைத்தாள்- சிவந்த தாமரை மலர்போன்ற தாள். "தாட்செய்ய தாமரைச் சைவனுக்கு" (குலாப்9) என அடிகள் பிறாண்டு அருளியமையுங் காண்க. என் கொள்கை முன்னிலையில் எதிர்த்து வந்து இறைவனது தாமரைமலர் போன்ற திருவடியின் தாக்குதலைப் பொருந்தி

இறந்துபட்டுச் செயலற்ற கூற்றுவனது கொள்கை போன்றதோர் கொள்கையாகும் என்பது பின் இரண்டடிகளின் கருத்தாகும்.

கூற்றுவன் மார்க்கண்டேயரின் உயிரைக் கொள்ள வந்து அவர் சிவபூசை செய்து கொண்டிருத்தலை மதியாது எதிரில் மாறுபட்டு வந்து அவரது உயிரைப் பாசம் வீசி இழுத்தலும் அவர் சிவலிங்கப் பெருமானை இறுகத் தழுவிக்கொள்ள அப்பாசம் சிவலிங்கப் பெருமானையும் சேர்த்துப் பற்றுவதாக அமைய, தம்மைச் சரணடைந்த மார்க்கண்டேயரைக் காத்தற்பொருட்டு இறைவன், சிவலிங்கத் திருமேனியினின்றும் வெளிப்பட்டுக் கூற்றுவனை உதைத்தலும் அவன் வீழ்ந்து செயலற்றனன். ஆனால் யானோ மாறுபாடின்றி முன்னிலைக்கண் வந்து தாமரை மலர் போன்ற திருவடி சூட்டப்பெற்று ஆட்கொள்ளப் பெற்றிருந்தும் இப்போது அத்திருவடிக் காட்சி கிடைக்கப்பெறாமையின் போற்றியென்றும் புரண்டும் புகழ்ந்து நின்று ஆற்றல்மிக்க அன்பால் அழைத்தல் முதலியன செய்யமாட்டாது செயலற்றுக் கிடக்கின்றேன். எனவே செயலற்றுக் கிடக்கும் அளவில் கூற்றுவனது கொள்கையும் என் கொள்கையும் ஒத்தன என்பது கருத்து. கூற்றுவனது செயலறுதி இறந்துபாட்டால் ஏற்பட்டது; எனது செயலறுதி உயிர் வாழ்ந்திருந்தும் இறைபணி நில்லாமையால் ஏற்பட்டதாகும்.

இதண்கண், "ஆற்றல்மிக்க அன்பால் அழைக்கின்றிலேன்" என்பதனால் அழைக்க மாட்டாமையும், அதனால் காட்சிபெற மாட்டாமையும்.

50. கொள்ளுங் கில்லெனை யன்பரிற் கூய்ப்பணி
கள்ளும் வண்டும் அறாமலர்க் கொன்றையான்
நள்ளுங் கீழுளு மேலுளும் யாவுளும்
எள்ளும் எண்ணெயும் போல்நின்ற எந்தையே.

**ப-ரை:**

நள்ளும்- நடுவின்கணுள்ள பூவுலகத்தினுள்ளும், கீழ் உளும்- அப்பூவுலகத்திற்குக் கீழுள்ள உலகங்களினுள்ளும், மேல் உளும்- பூவுலகத்திற்கு மேலேயுள்ள உலகங்களினுள்ளும், யா உளும்- எல்லாப் பொருள்களுளுள்ளும், எள்ளும் எண்ணெயும் போல் நின்ற எந்தை எள்ளும் அதனுள் கலந்துள்ள எண்ணெயும் போல எங்கும் நிறைந்திருக்கின்ற எங்கள் தந்தையும், கள்ளும் வண்டும் அறா மலர்க் கொன்றையான்- தேனும் அதனை நுகரும் வண்டும் நீங்காத கொன்றைமலர் மாலையுடையவனுமாகிய இறைவன், எனை அன்பரில் கூய் பணிகொள்ளும் கில்- என்னை அடியார் நடுவுள் அழைத்துக் கூட்டித் தொண்டனாகக் கொள்ளுதல் செய்வானோ?

நள்ளும் கீழுளும் மேலுளும் யாவுளும் எள்ளும் எண்ணெயும் போல எங்கும் நிறைந்துள்ள எங்கள் தந்தையும் கொன்றை மலர் மாலையை உடையவனுமாகிய இறைவன் என்னை அடியார் நடுவுள் அழைத்துக் கூட்டித் தொண்டனாகக் கொள்ளுதல் செய்வானோ? அங்ஙனம் செய்யின் எனது துயர் ஒழியும் என்பதாம்.

கொள்ளுங் கில் என்புழிக் கில் என்பது வினாப் பொருளில் வந்தது. கில் என்பதனை எனை என்பதனோடு கூட்டிக் கில்லேனை என்பது கில்லெனைக் எனக் குறுகி நின்றது எனக் கொண்டு ஆற்றல் இல்லாத என்னை எனப் பொருள் கொள்ளுதல் அமையாதோவெனின், கொள்ளும் என்னும் செய்யுமென்னும் முற்றிற்குக் கொள்வானோ எனப் பொருள் கொள்ள வேண்டி

இருத்தலின் அமையாதென்க. அன்பரிற் கூய்- அன்பர் நடுவுள் அழைத்து, பணி- தொண்டு.

கள்ளும் வண்டும் அறாமலர்க் கொன்றை என்றது தேனும் அதனை யுண்ணும் வண்டும் நீங்காத கொன்றைமலர் என்றவாறு. "நறைக்கண் மலிக்கொன்றையோன்" (258) "கள்ளின மார்த்துண்ணும் வண்கொன்றையோன்" (295) "தேன் வண்டுறைதரு கொன்றையன்" (380) என அடிகள் திருக் கோவையாரில் அருளியமையுங் காண்க. கள்- தேன். "கட்கமழு நறுநெய்தல்" (மதுரைக் 250) என்புழிப்போல. வண்டினுளொரு சாதியெனினும்மையும் 'கள்வண்டினுளொரு சாதியென்பாருமுளர்' எனப் பேராசிரியர் உரைத்தமையும் (திருக்கோவை 295 வரை) காண்க. கள்ளும் வண்டுமறா என்னும் அடை இறைவனிடத்துத் திருவருளமுதம் உண்மையையும், அதனை நுகரும்பொருட்டு பக்குவான்மாக்கள் நீங்காதிருத்தலையும் குறிப்பிற் புலப்படுத்துகின்றது, மலர்க்கொன்றை- கொன்றை மலர்மாலை இது இறைவனுக் குரிய அடையாள மாலையாகும்.

நள்ளுளும் என்பது நள்ளும் என நின்றது. நள்- நடு. "நள்ளிராவும் நண்பகலும்" (திவ். திருவாய் (4)7:2) என்புழியும் இப் பொருட்டாதல் காண்க. நள் கீழ் மேல் என்பன நடுவுலகம் கீழுலகம் மேலுலகங்களைக் குறித்தன. உள்ளும் உம்மும் இடப்பொருளையும் எண்ணுப் பொருளையும் குறித்தன. நள்ளும் கீழுளும் மேலுளும் என்றபின் யாவுளும் என்றது அவ்வுலகங்களிலுள்ள இயங்கு திணை நிலத்திணையான எல்லாப் பொருள்களையும் குறித்தது. எள்ளும் எண்ணெயும் போல்நின்ற என்றது எள்ளின் கண் எண்ணெய் எங்குங் கலந்து மறைந்து நிற்றல்போல் இறைவன் எங்கும் வியாபித்து மறைந்திருத் தலைக் குறித்தது.

**"விறகிற் றீயினன் பாலிற்படு நெய்போல்**
**மறைய நின்றுளன் மாமறைச் சோதியான்"**
(தே.204:10)

என்ற ஆளுடையரசர் வாக்கும் ஈண்டு கருதத்தக்கது.

எந்தை கொன்றையான் அன்பரிற் கூய் எனைப்பணி கொள்ளும் கில் என முடிக்க.

இதன்கண், இறைவன் என்னைக் கூய்ப்பணி கொள்ளுமாயின் கைம்மாறு கொடுக்கப் பெறலாமே என்னும் ஆதாரம் தோன்றுதலால் கைம்மாறு கொடுத்தல் என்னும் ஐந்தாம்பத்து நுதலிய பொருள் போந்தவாறு காண்க. 46.

(தொடரும்...

## ஒருவிரல் ரகசியம்

**குழந்தை கிருஷ்ணர் தன் கால் பெருவிரலை சுவைத்த விஷயம், என்றும் பதினாறு வயதுகொண்ட மார்க்கண்டேய மகரிஷிக்கு தெரியவந்தது. "ஏன் இப்படிச் செய்கிறார்?" என்று அறியும் ஆசையில் அவரைப் பார்க்கப் புறப்பட்டார். ஆனால், மாயக்கிருஷ்ணன் பலத்த மழை பெய்யச் செய்தார். ஆஸ்ரமத்தைச் சுற்றி கடும் வெள்ளம் சூழ்ந்தது. ஆனால், மார்க்கண்டேயருக்குத்தான் மரணம் கிடையாதே! எனவே அவர் தண்ணீரில் குதித்தார். நீரில் மிதந்தார். வேறு வழியின்றி கிருஷ்ணர் ஒரு ஆலிலையில் சயனித்தபடியே அங்கு மிதந்து வந்தார். கட்டைவிரல் வாயில் இருந்தது. "கிருஷ்ணா! உன் கட்டை விரலை சுவைக்க என்ன காரணம் எனத் தெரிந்துகொள்ளலாமா?" என்றார். "மகரிஷியே! என் பக்தர்களில் பலரும் எனது திருவடிகளை அடையவேண்டும் என்றே பிரார்த்திக்கின்றனர். அப்படி அந்தத் திருவடிகளில் என்னதான் விஷேசம் இருக்கிறது என்று அறியும் ஆர்வம் எனக்கும் வந்துவிட்டது. அதனால்த்தான் கால் பெருவிரலை சுவைத்துப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்றார் குழந்தை கிருஷ்ணர்.**

*வாழ்க்கை என்பது நீ சாகும்வரை அல்ல, நீ மற்றவர்கள் மனதில் வாழும்வரை.*

# ஆசாரமே நாவலரின் கலாசாரம்

– திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள் –



இலங்கையின் ஜாதகத்தில், 1822.12.18ஆம் திகதியிலே அவதரித்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் வரலாறு நீடித்த புகழையீட்டித் தந்ததெனலாம். கந்தப்பிள்ளை சிவகாமி தம்பதியினருக்கு, ஆறாவது மகனாகப் பிறந்த இவர் முதலில் குருகுல வாசமாகக் கல்வி பயின்று, வேதாகமம், தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளோடு ஆங்கில மொழியை யாழ்ப்பாணம் வெஸ்லியன் மிசன் கல்லூரியில் ஐயம் திரிபறக் கற்றுத் தேறினார். இளம் வயதிலேயே தமிழில் பாண்டித்தியம் பெற்றார். அதிபரான பீற்றர் பார்சிவல் நாவலரிடம் தமிழில் கற்பதற்காக விருப்பம் கொண்டார். தமிழ் அன்னையும் பார்சிவலை தமிழில் மேன்மையுறச் செய்தார். ஆதலால் தமிழும், ஆங்கிலமும் மிசன் கல்லூரியை ஜொலிக்க வைத்தது. நாவலரின் சைவ சமய அதீத நம்பிக்கையை மெச்சிய பார்சிவல், நாவலரின் பயபக்தியைத் தம்வசமாக்கி விவிலிய நூலைத் தமிழில் மொழிபெயர்க்குமாறு வேண்டிக்கொள்ள, அப்பணியைச் செவ்வனே நிறைவேற்றிக் கிறீஸ்தவ மதப் பாராட்டினைப் பெற்றுக் கொண்டார். இருந்தபோதும் தனது சொந்த மதத்தினையும், அதன் பண்புகளையும் எந்தச் சந்தர்ப்பத்திலும் விட்டுக்கொடுத்தாரில்லை. இதனால் அவர்களுடன் பல சந்தர்ப்பங்களில் முரண்பட்டு, சைவ சமய அனுகூலங்களுக்காக அயராது பாடுபட்டார்.

## திருவருட்பேறு

எல்லாம் வல்ல சிவபெருமானும் உமாதேவியார் சகிதம் நாவலர் பெருமானின் நெஞ்சத்தில் குடிபுகுந்து திருவருளும், அற்புதமும் நிகழ்ந்திடவும், பொலிந்திடவும் வழிபுரிந்தார். சைவ சமயத்தின் முழுமுதற் கடவுள் சிவபெருமானே என்பதன் பேறாக, சிவ சிவ, சிவ மயம், சிற்றம்பலம், திருச்சிற்றம்பலம், அரோகரா, நமப்பார்பதி பதயே, அரகரமகாதேவா, நமசிவாய, சிவாயநம, வேதம், ஆகமம், சைவசித்தாந்தம், திருமுறை, திருநீறு, உருத்திராக்கமாலை, தீட்சை, புராணபடனம், பிரசங்கம், கூட்டுப்பிரார்த்தனை, சரியை- கிரியை- யோகம்- ஞான- ஒழுக்கம், தூய சைவ உணவு, கந்தபுராணம்- பெரியபுராணம் படிப்பு, சந்தியாவந்தனம், காலை மாலை வழிபாடு, நடை உடை பாவனை, ஒருவனுக்கு ஒருத்தி, இல்லறத்தான் ஒழுக்கம், துறவறத்தான் ஒழுக்கம், பிரமச்சாரிய ஒழுக்கம், சைவசமயியாக வாழ்தல், புலால் மறுத்தல், அழுக்காறு அவா வெகுளி, ஆசை வெறுத்தல், வேள்வி- துன்புறுத்தல்- வதை செய்தலை இல்லாதொழித்தல், காம மோக குரோத வழி செல்லாமை, பிறர் மனை புகாமை, வீண் வார்த்தை பேசாமை, வேட்டி சால்வையோடு பிரசன்னமாதல், மேலங்கியைக் கழற்றி வழிபாடாற்றல், மந்திரங்களையும் பாராயணங்களையும், பிரசங்கங்களையும் ஆலயங்களுக்குள்ளேயே செறிய விடுதல்- போன்ற சைவ சமய ஆசாரங்கள் இந்த மண்ணின் கலாசாரமாகப் பரிணமித்தது.

*வெற்றி என்பது நிரந்தரமல்ல. தோல்வி என்பது இறுதியானதுமல்ல.*

மேலும், ஒவ்வொரு சைவ சமயியும், ஆலயத்திற்குச் சென்று கூட்டுதல், கழுவுதல், மெழுகுதல், கோலம் போடுதல், பூந்தோட்டம் பராமரித்தல், பூப்பறித்து மாலை கட்டுதல், பூசை விளக்குகள் மினுக்குதல், விளக்கேற்றுதல், மணி அடித்தல், குப்பைகளை அகற்றுதல், ஆலவட்டம், குடை பிடித்தல், சாமரை வீசுதல், கற்பூரம் எரித்தல், தூப தீபமேற்றுதல், தேவார பாராயணம் செய்தல், துடக்குடன் புகாதிருத்தல், பிரேத நடவடிக்கைகளில் ஈடுபடாதிருத்தல், மது, மாமிசம் புசிக்காதிருத்தல், கோமாதா பூசையிலீடுபடுதல், பஞ்சகௌவியம் சேர்த்தல், திருநீறு செய்தல், சந்தனம் அரைத்தல், நீர்ப்பாய்ச்சுதல், நீர் தெளித்தல், அந்தணப் பெரு மக்களுக்குத் தொண்டாற்றுதல், பசுமாடு வளர்த்தல், பசுவுக்குத் தீனி போடுதல், பசுக்களைப் பராமரித்தல், பசுமாடத்தைத் துப்பரவு செய்தல் மற்றும் சமய நூல்களைப் பதிப்பித்தல், அதனூடாகத் தமிழையும், சைவத்தையும் வளர்த்தல், எழுத்துப் பிழையின்றித் தமிழ் வெளிவரத் துணைபுரிதல், செவ்வை பார்த்தல், நூல்களைப் பாதுகாத்தல், பசித்தோர்களுக்கு அன்னசத்திரம் அமைத்தல், அன்னசத்திரத்தில் அன்னத்தைச் சிந்திக் கொட்டாதிருத்தல், அன்னத்தை அளவாக வைத்தல், ஏடு தொடக்குதல், எல்லா அம்சங்களையும் சிவன் சொத் தாகப் பேணுதல், பெண்களைத் தாயாகப் போற்றுதல், போதை தரும் உணவுகளைத் தவிர்த்தல் போன்ற இன்னோரன்ன ஆசாரங்கள் நாவலரால் பேணப்பட்டு. நமக்காக என்றும் ஒப்படைக்கப்பட்டு வருகிறது.

## தலைமை

சைவசமயத்தின் தலைமைப் பொறுப்பில் உள்ளவர்கள் மேற்போந்த ஆசாரங்களைத் தகைமைகளாகக் கொண்டிருக்கவேண்டுமென நாவலர் பெருமான் சிலைகள் தோறும், சிவ சின்னங்களோடு பொலிவுறக் காட்சி தருகின்றார். இவற்றை மீறுவது சைவசமயிக்கும், கந்தபுராணக் கலாசாரத்திற்கும் ஏற்புடையதல்ல. இன்றுவரை நாவலர் கனவுகண்ட ஆசாரம் மிக்க ஒரு தலைமை கருவாக வேண்டும் என இந்த மண் பிரார்த்திக்கின்றது. சிவபூஜையும், சிவ அனுட்டானங்களும், ஆசார சீலமும், திருநீறு, சந்தனம், உருத்திராக்கம் ஆதியாம் சிவசின்னங்களும், மற்றும் அரசியல் கலக்காத, ஜீவகாருண்யம் பொலிந்த மனிதமும், புகழ் பட்டம் பதவிகளை விளம்பரப்படுத்தாத தனித்துவமும், புராணபடனம், திருமுறை ஓதவும் படிக்கவும் வல்ல ஒரு புண்ணியவான் எமது சமயத்திற்கு வாய்க்குமாக இருந்தால் 108 தரம் விழுந்து வணங்க என்னால் முடியும். மூவரை இனம் கண்டுள்ளேன்!

## வரம்

31.12.1847இல் ஆரம்பித்த நாவலரின் முதற் பிரசங்கந்தான் அன்றைய மக்களுக்கு மட்டுமல்ல, இன்றுவரை போதனையாக மக்களிடம் நின்று நிலைக்கின்றது. குறிப்பாக நல்லூர் சகல பேறுகளுடன் வரமாகிறது. கஞ்சித்தொட்டி, கரையூர் புரட்சி, விதைநெல் விநியோகம், விவிலிய நூல் மொழி பெயர்ப்பு, திருவாவடுதுறை ஆதீனம் வழங்கிய நாவலர் பட்டம் (1849), அச்சுயந்திரம் நிறுவியமை, பதிப்பித்தல், சைவ சமய வினாவிடை, பாலபாடம், பெரியபுராணம், கந்தபுராண- வசனநடை உரை வெளியீடு, பண்ணிசையுடன் கூடிய பாடசாலை நிறுவி, வண்ணார்பண்ணை, கோப்பாய், கொழும்புத்துறை, இணுவில், மாதகல், சிதம்பரம் ஆகிய இடங்களை மகிமையோடு பேறாக்கி சைவ சமய ஆசாரத்தை யாழ்ப்பாண மண் வாசனையோடு, சைவசமய உலகிற்கு வரமாக்கினார் நாவலர் பெருமான். அவர் பணியில் இனி யாருளர்?

*நேரத்தைத் தள்ளிப்போடாதே தாமதத்தால் அபாயமான முடிவே ஏற்படும்.*

(தொடர்ச்சி...)

# உமாபதி சிவம் அருளிய திருவருட்பயன்

(விரிவான பொருளுரையும் தெளிவுரையும்)

முனைவர் ஆ. ஆனந்தராசன்



69. கருவிகளும் உயிரறிவும் அறியா

ஐம்புலனால் தாம் கண்டது என்றால் அது ஒழிய
ஐம்புலன் ஆர்? தாம் ஆர்? அதற்கு.

பொருள்:

உயிர் ஐம்பொறி முதலிய கருவிகளைக் கொண்டு அறிந்து வந்ததெல்லாம் மெய்ப் பொருளாகிய சிவம் நீங்கலாக ஏனையவற்றையேயாம். அப்படியிருக்க, முத்திக் காலத்தில் அம்மெய்ப்பொருளை அறிவதற்கு அக்கருவிகள் துணையாதற்கு என்ன உரிமையுடையன, இனி, அக்கருவிகள் இன்றி ஒன்றையும் அறியமாட்டாத உயிர்களும் தனியாய் நின்று அம் மெய்ப்பொருளை அறிதற்கு என்ன உரிமையுடையன.

சொற்பொருள்:

தாம் ஐம்புலனால் கண்டது- உயிர் ஐம்பொறி முதலிய கருவிகளைக் கொண்டு அறிந்து வந்தது, அது ஒழிய என்றால்- மெய்ப்பொருளாகிய சிவம் நீங்கலாக ஏனைய வற்றையேயென்றால், அதற்கு- அம் மெய்ப்பொருளை அறிதற்கு, ஐம்புலன் ஆர்- ஐம்பொறி முதலிய அக்கருவிகளுக்கு என்ன உரிமை இருக்கிறது?, தாம் ஆர்- இனி, அக்கருவிகளின் துணையின்றி ஒன்றையும் அறிய மாட்டாத உயிர்களும் தனித்து நின்று அம் மெய்ப்பொருளை அறிதற்கு என்ன உரிமையுடையன?

விளக்கம்:

கருவிகள் துணையாக மாட்டா:

கருவி கரணங்களால் சிவத்தையறிதல் இயலும் என்பது சைவரில் ஒரு சாரார் கொள்கை. அவர்கள் பின்வருமாறு கூறுவர். பெத்த காலத்தில் கருவிகள் சீவகரணம் எனப் பெயர் பெற்று இருளாய் நின்று உயிரை மயக்குதலின் அப்பொழுது அவை மெய்ப்பொருளைக் காணுதற்குத் துணை செய்யா என்பது பொருந்தும். ஆயின் முத்தி காலத்தில் அக்கருவிகள் அத்தன்மை நீங்கிச் சீவகரணம் எனப் பெயர் பெற்று ஒளியாய் நிற்றலின், அவை மெய்ப்பொருளை அறிதற்குத் துணை செய்யும் என்று கூறுவர். இக்கொள் கையை முதலில் எடுத்துக் கொண்டு மறுக்கிறார் ஆசிரியர். இன்று வரையிலும் இறைவனைக்

காட்டமாட்டாத இக்கருவி கரணங்கள் இனிமேல் அவனைக் கண்டு காட்டும் என்றல், பேதைமையாம் என்கிறார். முத்தி நிலையில் இக்கருவிகள் சிவனது கலப்பால் சிவத்தன் மையை உடையனவாயினும் அவை சுட்டுணர்வையன்றி வியாபக உணர்வைத் தரமாட்டா. சுட்டுணர்வினால் அறியப்படுபவை அழியக்கூடிய உலகப் பொருள்களேயாகும். இறைவன் சுட்டுணர்வுக்கு அப்பாற்பட்டவன். எனவே அவனை அறிதற்கு அக்கருவி கரணங்கள் என்ன உரிமையுடையன என்று கேட்கிறார்.

உயிரறிவு தனித்து நின்று அறிய மாட்டாது:

இனி, சிவசமவாத சைவர் என்பார் பின்வருமாறு கூறுவர். பெத்த காலத்தில் ஆன்ம அறிவு மலத்திற் கட்டுண்டு சிற்றறிவாய் நிற்பதனால் அப்பொழுது அது மெய்ப்பொருளாகிய சிவத்தைத் தனித்து நின்று அறியமாட்டாது என்பது உண்மையே. ஆனால் முத்தி காலத்தில் ஆன்ம அறிவு மலம் முழுவதும் நீங்கிப் பேரறிவாய் சிவனது அறிவுக்குச் சமமாய் நிற்கும். ஆதலால் அப்பொழுது அது மெய்ப்பொருளைத் தனித்து நின்று அறியவல்லதாகும் எனக் கூறுவர்.

இவ்வாறு கூறுவது சிவநெறிக்குப் பெரிதும் புறம்பானதாகும். உயிரறிவு எக்காலத்திலும் சிவனது அறிவுக்குச் சமமாக முடியாது. உயிரினது சிறப்புத் தன்மை வேறு. சிவனது சிறப்புத் தன்மை வேறு. உயிரினது சிறப்புத் தன்மை அறிவிக்க அறிவது. சிவனது சிறப்புத் தன்மை தானே அறிவது. பொருளினது சிறப்புத் தன்மை எக்காலத்திலும் மாறாது. எனவே, உயிரானது அறிவிக்க அறிவதாகிய தனது சிறப்புத் தன்மை மாறித் தானே அறிவதாகிய சிவனது சிறப்புத் தன்மையைப் பெறும் என்பது எக்காலத்திலும் நடவாது.

உயிரினது அறிவு முன்பு சிற்றறிவாய் இருந்து பின் மலம் முழுவதும் நீங்கிய நிலையில் முழுமையாக விளங்கிப் பேரறிவு எனப்படுமாயினும், அப்பொழுதும் அது சிவனது முற்றறிவை நோக்கச் சிற்றறிவேயாம். அந்நிலையிலும் அது தானே அறியமாட்டாது. சிவனது அறிவு உடனின்று அறிவிக்கவே அறிவதாகும்.

நாழி என்ன முகத்தற் கருவியைக் கொண்டு கடல் நீரில் பலமுறை ஆழமாக அமுக்கி முகந்தாலும் அந்த நாழி எங்கேயாவது நான்கு நாழி நீரை முகந்து கொள்ள முடியுமா? அது தன்னளவுக்கு உரிய நீரை மட்டுமே முகக்க இயலும். அதுபோல மலம் நீங்கிய முத்திநிலையிலும் உயிரறிவு உயிரறிவாகவே இருக்கும். அது சிவனறிவுக்குச் சமமாக மாட்டாது. அப்பொழுதும் உயிர் சிவனது அறிவாகிய திருவருள் காட்டவே தன்னையும் சிவத்தையும் காண்பதாகும்.

ஆதலால் முத்தி நிலையில் ஆன்ம அறிவு சிவனறிவை ஒப்பதாகும் என்றும், மெய்ப்பொருளாகிய சிவத்தைத் தனித்து நின்று அறியும் என்றும் சிவசமவாதிகள் கூறுவது உண்மைக்குப் புறம்பானதாகும். "சிவனோடு ஒப்ப யாமும் எல்லாம் அறிந்து, எல்லா வல்லமையும் பெற்று வாழ்வோம்" என்று அவர்கள் ஆசைப்பட்டு இப்படிக் கூறுகிறார்கள். மலைமேல் உள்ள தேனுக்கு ஆசைப்பட்டு முடவன் வாயூறி நின்றாற் போன்றது அவர்கள் நிலை!

சிவசமவாத சைவரை நோக்கித் "தாம் ஆர் அதற்கு" என வினவுகிறார் ஆசிரியர் உமாபதிசிவம். சிவத்தை அருள் வழியாக அன்றித் தனியாய் நின்று அறிவதற்கு அவர்கள் என்ன உரிமையுடையவர்கள் என்பது இவ்வினாவில் அமைந்துள்ள குறிப்பு.

*நம்பிக்கை மட்டும் இருந்தால் போதாது. சிந்திக்கவும் தெரிய வேண்டும்.*

மூன்று ஞானங்கள்:

ஞானங்கள் மூன்றாகும். அவை பாச ஞானம், பசு ஞானம், பதி ஞானம் என்பன. பாச ஞானம் என்பது கருவிகளால் வரும் அறிவாகும். பாசம் என்பது மாயையைக் குறிக்கும். ஐம்பொறி முதலிய கருவிகள் பாசமாகிய மாயையின் காரியங்கள். அக்கருவிகளால் அறியப்படுகின்ற உலகமும் பாசமாகிய மாயையின் காரியமாகும். இதனால் கருவிகளும் உலகமும் ஆகிய எல்லாம் பாசமே என்பது விளங்கும். இது பற்றியே, பாசமாகிய கருவிகளைக் கொண்டு பாசமாகிய உலகத்தை அறிகின்ற அறிவு பாச ஞானம் எனப்படுவதாயிற்று.

இனி, அக்கருவிகளை வேறாகக் கண்டு நீங்கிய விடத்து உயிருக்கு விரிந்த அறிவு உண்டாகும். அந்நிலையில் உயிர் தன்னை சிவத்திற்குச் சமமாக மயங்கி உணரும். சிவனைப்போல எல்லாச் செயலும் செய்தல் கூடும் என உணரும். அப்பொழுதும் திருவருள்தான் செய்விக்கிறது என்பதை அது உணர்வதில்லை. இது பசுத்துவம் எனப்படுகிற ஆணவ மலத்தின் வாசனை நீங்காத நிலையாகும். இவ்வாறு பசுவாகிய தன்னையே பொருளாக மதிக்கின்ற இந்த ஞானம் பசு ஞானம் எனப்படுவதாயிற்று.

மூன்றாவதாகிய பதி ஞானம் என்பது இறைவனது பேரறிவாகும். பதியினது ஞானம் பதி ஞானமாயிற்று. பதி சிவமேயாதலின் பதி ஞானம் சிவ ஞானம் என்றும் சொல்லப்படும். திருவருள் என்பதும் இதுவே.

இவற்றுள் பாச ஞானமும், பசு ஞானமும் சிவனை அறிய மாட்டா. இதனையே இச் செய்யுளில் குறிப்பிட்டார் ஆசிரியர். "ஐம்புலன் ஆர் அதற்கு?" என்று கூறிக் கருவியறிவாகிய பாச ஞானம் இறைவனை அறியத் துணை செய்யாது என விலக்கினார். "தாம் ஆர் அதற்கு?" என்று கூறிப் பசு ஞானமும் தனித்து நின்று இறைவனை உணரமாட்டாது என விலக்கினார். இவ்வாறு இரண்டு ஞானங்களை விலக்கி, எஞ்சியுள்ள பதி ஞானமாகிய திருவருளைத் துணைக்கொண்டே பதியாகிய மெய்ப்பொருளை அறியமுடியும் என்ற கருத்தைப் பெற வைத்தார் ஆசிரியர்.

மூன்று பொருள்கள் உள்ள இடத்தில் இரண்டினை விலக்கி எஞ்சியுள்ள மூன்றாவது பொருளைத் துணிதல் பாரிசேடம் (ஒழிபு) என்னும் முறையாகும் என முன்னே கூறியுள்ளோம். (செ-33) அம் முறைமையை இச்செய்யுளிலும் நாம் காண்கிறோம்.

### 70. உயிர் தனது வலிமையால் பெற முடியாது

தாமேதரும் அவரைத் தம்வலியினால் கருதல்
ஆமே? இவன் ஆர் அதற்கு?

பொருள்:

முதல்வன் தானே தனது கருணையினால் உயிருக்கு ஞானத்தைத் தந்து தன்னை உணர்த்தி நிற்கிறான். அங்ஙனமாக, அம்முதல்வனை உயிர் தானே தன் முயற்சியினால் அடைந்ததாகக் கருதுவது பொருந்துமோ? முதல்வனை இவ்வுயிர் தனது வலிமையால் பெறுவதற்கு என்ன உரிமையுடையது?

சொற்பொருள்:

தாமேதரும் அவரை- தானே தனது கருணையினால் உயிருக்கு ஞானத்தைத் தந்து தன்னை உணர்த்தி நிற்கும் முதல்வனை, தம் வலியினால் கருதல் ஆமே?- உயிர்

தானே தன் வலிமையினால் உணர்ந்ததாகக் கருதுதல் பொருந்துமோ?, அதற்கு இவன் ஆர்?- அம் முதல்வனை உயிர் தனது முயற்சியால் பெறுவதற்கு என்ன உரிமையுடையது?

**விளக்கம்:**

**உடம்பு என்னும் தேர்:**

நிலையற்றதாகிய இந்த உடம்பை ஒரு தேர் என்று சொல்லலாம். இந்தத் தேரில் அமர்ந்துகொண்டு பயணம் செய்பவன் ஆன்மா. ஐந்து இந்திரியங்கள்தாம் இத் தேரை இழுத்துச் செல்லும் குதிரைகள். மனம் தான் அவற்றைச் செலுத்துகிற தேர்ப்பாகன்.

இந்திரியங்கள் பொதுவாகத் தீய வழிகளில் செல்பவை. அவற்றை அவை போகும் போக்கில் விடக்கூடாது. விட்டால் அவை தேரையும், தேரில் செல்லும் ஆன்மாவையும் படு குழியில் தள்ளிவிடும். ஆகவே மனமாகிய தேர்ப்பாகன் நல்லுணர்வு என்ற கடிவாளத்தைக் கொண்டு இந்திரியங்களைக் கட்டுப்படுத்த வேண்டும். அவன் திசை தெரியாத பாகனாக இருந்தால் தேரைக் கண்ட இடத்திற்குச் செலுத்தி விடலாம். எனவே ஆன்மா தான் போய்ச் சேரவேண்டிய இடத்தைச் சென்றடைய வேண்டுமானால் இந்திரியங்களாகிய பரிகளும் சரியாக இருக்கவேண்டும்; மனமாகிய பாகனும் செம்மையாக ஓட்டத் தெரிந்தவனாக இருக்கவேண்டும். இவற்றுக்கெல்லாம் மேலாக, இவற்றுக்கெல்லாம் அடிப்படையாக, இறைவனது திருவருள் துணை நிற்கவேண்டும்.

**பற்றுறுதி:**

உலகப் பற்று என்பது தவறான பாதை. தவநெறி என்பதே ஆன்மா மேற்கொள்ள வேண்டிய சரியான பாதை. உலகப் பற்றில் செல்லாமல் இருப்பது என்பது எளிதான செயலா? இல்லை கண்ட கண்ட பொருளையெல்லாம் அனுபவிக்க வேண்டும் என்ற ஆசை இருந்து கொண்டே இருக்கிறது. எத்தனை எத்தனை ஆசைகள்! இந்த ஆசைகளுக்குத்தான் ஓர் எல்லை உண்டா? உலக ஆசைகளை விடுவது எப்படி?

வைராக்கியம் ஒன்றே அதற்கு வழியாகும். வைராக்கியத்தைத் தமிழில் பற்றுறுதி என்பர். பற்றற்று இருத்தலாகிய வைராக்கியம் எப்படி ஏற்படும்? உலகப் பொருள்களிலுள்ள குற்றங்களைப் பார்க்கத் தெரிந்துகொண்டு விட்டால் வைராக்கியம் ஏற்படும். உலகப் பொருள்கள் நிலையற்றவை; இடையில் நீங்கக் கூடியவை; முதலில் இன்பமாகத் தோன்றிக் கடைசியில் துன்பத்தைத் தருபவை என்று தெரிந்துகொண்டால் வைராக்கியம் தானே ஏற்படும்; உலகப் பற்றுப் போய்விடும்; இறைவன்மீது பற்று ஏற்பட்டு விடும். இந்த நிலை வருவதற்கும் இறைவனது அருளே காரணம். இதைத்தான் திருவருள் பதிதல் என்கிறோம்.

**எதையும் மலர்ச்சியுடன் ஏற்றல்:**

எந்தப் பொருளும், எந்தச் சூழ்நிலையும் தன்னிடத்தில் இன்பத்தையோ, துன்பத்தையோ கொண்டிருக்கவில்லை. ஒருவருக்குத் துன்பமாகத் தோன்றும் அதே பொருளும், அதே சூழ்நிலையும் இன்னொருவருக்கு இன்பமாகத் தோன்றுகிறது. நமக்கே ஒரு சமயத்தில்

*சந்தோஷமான வாழ்க்கை என்பது மனதின் அமைதித் தன்மையைப் பொறுத்தது.*

இன்பமாகத் தோன்றும் பொருள் மற்றொரு சமயத்தில் துன்பமாகத் தோன்றுகிறது. எனவே இன்பமும் துன்பமும் பொருளிலோ, சூழ்நிலையிலோ இல்லை என்பது தெளிவு. அவரவர் அணுகும் முறையில்தான் இன்பமோ துன்பமோ உள்ளது.

நோய் வந்தால் மருந்து கசப்பாக இருந்தாலும் இனிப்பாக இருந்தாலும் அதை ஏற்றுக்கொண்டு உட்கொள்ளுகிறோம். அதுபோல, வேண்டியது வேண்டாதது என்று கருதாமல், எது வந்தாலும் அதை முகமலர்ச்சியுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும். இன்பத்தையும் துன்பத்தையும், இகழையும் புகழையும், வெற்றியையும், தோல்வியையும் சமமாகக் கருதும் இந்த மனநிலை வருவதற்கு இறைவனது அருளே காரணம். இதைத்தான் இருவினையொப்பு என்று சொல்லுகிறோம்.

**ஞானக் கண்ணைத் தருதல்:**

மேற்கூறிய பக்குவநிலைகளை இறைவன்தான் உயிரின்கண் வருவிக்கின்றான். வருவித்து உயிருக்கு ஞானத்தைத் தருகின்றான். அந்த ஞானக் கண்ணால் உள்நோக்கித் தன்னை உணரும்படியாகச் செய்கின்றான். எனவே முதல்வனை உயிர் அவனது அருளால் உணர்ந்ததேயன்றித் தனது முயற்சியால் அன்று என்பது விளங்கும்.

**உயிரின் முயற்சியால் ஆகாமை:**

ஆனால், சைவரில் ஒரு சாரர் பின்வருமாறு கூறுவர். "மரத்தின் நிழல் இருந்தபடியே இருக்கும். அதுபோய் வழிப்போக்கனை அழைத்துத் தன்னிடம் தங்க வைக்காது. வெயிலை விட்டு நீங்கி நிழலை அடைதல் வழிப்போக்கன் செயலேயன்றி, மரத்தின் செயல் அன்று. அதுபோல மலத்தின் நீங்கி இறைவன் திருவடியை அடைதல் உயிரின் செயலேயன்றி இறைவன் செயல் அன்று. மலத்தை நீக்குதல், உயிர்களைத் தனது திருவடியிற் சேர்த்தல் ஆகிய செயல்களை இறைவன் செய்தால் அவன் தனது நிலையில் வேறுபட்டவன் ஆகிவிடு வான் என்றும் ஒரு தன்மையன் என்ற இலக்கணத்திற்கு இ∴து இழுக்காகிவிடும் என்று கூறுவர்.

உயிரே தனது முயற்சியினால் தானே இறைவனைச் சென்று அடையும் என்பார் கூற்றை இச்செய்யுளில் மறுத்துள்ளார் நம் ஆசிரியர். எல்லாம் இறைவன் செயலாய் இருக்க, உயிர் அவனைத் தனது முயற்சியால் உணர்ந்ததாகக் கருதுமாயின் அது மயக்க உணர்வாகும் என்பது இச்செய்யுளின் கருத்தாகும். "காண்பார் ஆர் கண்ணுதலாய் காட்டாக் காலே" என்று திருமுறை கூறுவதும் அறியத்தக்கது.

இறைவன் உயிர்களிடத்தில் பெருங் கருணையுடையவன். இரும்பைக் காந்தம் ஈர்த்துத் தன்வசப்படுத்துகிறது. அச் செயலால் காந்தம் எந்த மாற்றமும் அடைவதில்லை. அதுபோல இறைவன் உயிர்களை ஈர்த்துத் தன்வசப்படுத்தி ஆட்கொள்கிறான். அச் செயலை அவன் தன் நினைப்பு மாத்திரத்தால் செய்தலின், அவன் தன் நிலையில் திரியான்; அவன் என்றும் ஒரு தன்மையனே என்பது சைவ சித்தாந்த நிலையாகும்.

(தொடரும்...

*கட்டளையிட விரும்புபவன் முதலில் பணிவதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும்.*

# சப்த விடங்கள்

– திரு அ. சுப்பிரமணியம் அவர்கள் –

சப்தம் என்பது ஏழு. டங்கம் என்பது உளி. விடங்கம் என்றால் உளி படாத- உளி கொண்டு செதுக்கப்படாத ஏழு மூர்த்தங்கள் என்பது பொருள். இந்த மூர்த்தங்கள் ஏழும் தேவேந்திரனால் முசுகுந்தச் சக்கரவர்த்திக் குக் கொடுக்கப்பட்டு அவனால் பூவுலகில் ஸ்தாபிக்கப்பெற்று வழிபடப்பட்டு வருவன வாகும். இவை வீதி விடங்கர், ஆதி விடங்கர், அவனி விடங்கர், நீல விடங்கர், புவனி விடங் கர், சுந்தர விடங்கர், நக விடங்கரென ஏழு மூர்த்தங்களாகும். தம்மையடைந்து உள்ளன் புடன் வழிபடும் அடியார்களின் துயர் நீக்கி அருளும் சப்த விடங்க தியாகேச மூர்த்தங் கள் முசுகுந்தச் சக்கரவர்த்திக்கு எவ்வாறு கிடைத்தது என்பதை முதலில் பார்ப்போம். அதற்கு முன்பு முசுகுந்தச் சக்கரவர்த்தியின் வரலாற்றை நோக்குவோம்.

அது ஒரு காடு. அங்கு ஒரு வில்வ மரம். அதன்மேல் ஒரு குரங்கு. மரத்தின் அடியில் சிவலிங்கம். அருகே தேவி பார்வதி. மரத்தின் மேலிருந்த குரங்கு வில்வம் இலை களைப் பறித்துச் சிவலிங்கத் திருமேனிமீது போட்டது. வில்வம் சிவனாருக்குரிய அர்ச் சனைத் தளிராகும். அதனால் சிவன் பெரிதும் மகிழ்ச்சி கொண்டார். அண்ணாந்து பார்த்த பார்வதிதேவிக்குச் சிறிது வருத்தம் இருந்தது. குரங்கின் செயலால் மகிழ்ச்சியடைந்த சிவன் அதனை மரத்தைவிட்டுக் கீழே இறங்கிவரப் பணித்து அதனை ஆசீர்வதித்துப் "பூலோ கத்தில் மகா பெரும் சக்கரவர்த்தியாகப் பிறப் பாய்" என்று வரமருளினார். நான் விளையாட் டாகச் செய்த செயலுக்கு வரமா? அப்படி யெனில் எனக்கு இன்னொரு வரமும் வேண் டும். தங்களைத் தினமும் தரிசித்தது எனது இந்தக் குரங்கு முகம் அல்லவா? ஆகவே இந்த நினைவு என்றும் அகலாதிருக்க மானி டப் பிறப்பிலும் இதே குரங்கு முகம் இருக்க அருள்புரிய வேண்டும்" என்றது. "அப்படியே ஆகட்டும்" என்று வரம் தந்து வாழ்த்தி ஆசீர் வதித்தார் பரமசிவன்.

இதன்பின்பு பூவுலகில் குரங்கு முகத் துடன் மகா சக்கரவர்த்தியாகப் பிறப்பெடுத்து வசிஷ்ட மகாரிஷியிடம் ஞான உபதேசம் பெற்று நாட்டு மக்களின் நலம்பேணி நல்லாட்சி புரிந்து வந்தான். இதுகண்டு மகிழ்ந்த மக்கள் சக்கரவர்த்தியை இறை வடிவில் வைத்து நாவரசர் திருமுறை பாடிப் போற்றினர்.

"நின்னாவார் பிறரின்றி நீயே யானாய்
நினைப்பவர்கள் மனத்துக்கோர் வித்து மானாய்
மன்னானாய் மன்னவர்க்கோ ரமுத மானாய்
மறை நான்கு மானாய் ஆறங்க மானாய்
பொன் னானாய் மணி யானாய் போக மானாய்
பூமிமேல் புகழ்த்தக்க பொருளே யுன்னை
என்னவாய் என்னானாய் எண்ணில்லெல்
ஏழையேன் என் சொல்லி யேத்துகேனே"

-திருமுறை 6. பதிகம் 7189.

நம்பிக்கை நிறைந்த ஒருவர் யார் முன்னேயும் எப்போதுமே மண்டியிடுவது இல்லை.

இதையே திருவள்ளுவரும்,

**"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறை என்று வைக்கப்படும்"** என்கிறார்.

-குறள் 188.

தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் தீராத பகை. ஒருவர் மற்றவரை அடித்துத் துன்புறுத்துவர். சூழ்ச்சியினால் தேவர்களும் வர வலிமையினால் அசுரர்களும் மாறி மாறி வெற்றியும் தோல்வியும் அடைவர். கடுந்தவம் செய்து கடவுளரிடம் வரம்பெறும் அசுரர் வரம் கேட்பதில் வாய் தடுமாறுவதால் மரணம் அடைவதும் உண்டு. "நான் கடித்தவுடன் சாகவேண்டுமென்று" கறையானும் முசுறும் கடவுளிடம் வரம் கேட்டன. "அப்படியே ஆகட்டும்" என்றார் கடவுள். மனிதனைக் கடித்தவுடன் இரண்டுமே இறக்கின்றன. இங்கே மனிதன் சாகவேண்டும் என்று கேட்க மறந்தது பிராணிகளின் மறதியா? அல்லது பிரானது விளையாட்டா? என்பது கேள்வி. பக்த பிரகலாதனைக் காப்பாற்றுவதற்காகக் கிருஷ்ணர் நரசிம்ம அவதாரம் எடுத்தமை நாமறிவோம். அது மனித உடலும் சிங்கத் தலையும் கொண்டது. அவ்வாறான உருவத்தால் இறப்பு நிகழாது என்று இரணியன் எண்ணமிட்ட மறதி கிருஷ்ணரின் அரிய பெரிய சூழ்ச்சி.

இங்கே வலம் என்னும் அசுரன் தேவேந்திரனை அழிக்கக் கடவுளரிடம் வரம் பெற்றான். அப்போது தேவராலும் மனிதராலும் மற்றும் மிருகம், பறவை முதலிய ஜீவராசிகளாலும் சாவு நேரக்கூடாதெனக் கேட்டிருந்தான். "அப்படியே தந்தேன்" என்றார். இறைவன். வரம் பெற்ற மகிழ்வில் மமதையும் அகங்காரமும் கொண்டு உடனடியாகவே இந்திரன் மீது போர் தொடுத்தான். துன்பம் தாங்க முடியாத தேவர்கள் பரமசிவனிடம் சரண் அடைந்தனர். தம்மிடம் சரணடைந்த தேவர்களையும் தேவேந்திரனையும் காத்தருளும் பொருட்டுக் குரங்கு முகமும் மனித உடலும் கொண்ட முசுகுந்தச் சக்கரவர்த்தியைச் சிவபெருமான் அனுப்பினார். (இவ்வாறொரு தேவை ஏற்படுமென்றுதான் முசுகுந்தன் குரங்கு முகம் கேட்டுப்பெற்றுக் கொண்டதாகவுமிருக்கலாம்.) சிவனருள் பெற்று வல அசுரனைக் கொன்று தேவரையும் தேவேந்திரனையும் காத்த பெருமை முசுகுந்தச் சக்கரவர்த்திக்கே உரியது.

இதனால் மகிழ்ச்சியடைந்த இந்திரன் "எது வேண்டுமானாலும் கேள்" தருகிறேன் என்றான். அதுவே இந்திரனுக்குத் தர்மசங்கடத்தை விளைவித்து விட்டது. சக்கரவர்த்தியின் செயலுக்குப் பரிகாரமாகப் பொன்னோ, பொருளோ கொடுத்தனுப்பிவிட்டால் அத்தோடு கதை முடிந்திருக்கும். ஆனால் அவனை "விரும்பியதைக் கேள்" என்று சொன்னது தவறாய்ப் போச்சு. இங்கு முசுகுந்தன் தலையிட்டிருக்காவிட்டால் இந்திராதி தேவர்களது துயரம் தீர்ந்தபாடுமில்லை. ஒருவேளை விடங்கம் அசுரன் கையில் அகப்பட்டும் இருக்கலாம். அவற்றையெல்லாம் தீர்த்தவன் முசுகுந்தன். அவனிடம் "எதுவேண்டுமானாலும் கேள்" என்று சொன்னது தப்பாய்ப் போச்சு என இந்திரன் அங்கலாய்த்தான். இருக்க இடம் கொடுக்க மடம் புடுங்கிய மாதிரி எனது வணக்கத்துக்குரிய தியாகேசரையல்லவா? இவன் கேட்கிறான். என்ன துணிச்சல் குரங்கனுக்கு தியாகேசர்தான் சாமானியரா? அல்லது அதை எனக்குத் தந்தவர் தான் சாமானியரா? என்று பலவாறு பிதற்றினான். முசுகுந்தன் செய்தது செயற்கரும் செயல்தான். அதற்காக இப்படியா கேட்பது? தரமுடியாது என்று சொல்லவும் முடியவில்லை. எனவே ஏதும் சூழ்ச்சி வாயிலாகவே இவற்றை மேற்கொள்வேன் என்று முசுகுந்தனை மறுநாள் வருமாறு கூறி அனுப்பிவிட்டு விஷ்ணு கொடுத்த தியாகேசரைப் போன்று

அச்சொட்டாக ஆறு திருவுருவங்களை இந்திரன் செய்தான். இதற்கு முன்னர் இந்தத் தியாகேசர் விஷ்ணுவிடம் மனம் பதிந்த தன்மையையும் இந்திரனிடம் கொடுத்த வரலாற்றினைச் சற்று நோக்குவோம்.

காத்தற் கடவுளான மகாவிஷ்ணு பிள்ளைவரம் வேண்டிக் கடும் தவம் இருந்த போது அவரை மகிழ்விக்க எண்ணிப் பரம சிவனும் பார்வதி தேவியும் தங்கள் மைந்தன் முருகப் பெருமானுடன் அழகு மிளிரக் காட்சி தந்தருளியதை அப்படியே மனதில் பதித்துக் கொண்டார். அக்காட்சியை நினைக்க மனம் பூரித்துப் போனது. மனதில் பதிந்த தியாகேசரின் அழகு உருவத்தையே "தேவர் குலம் தழைக்கவும் தினமும் பூஜை செய்யவும்" இந்திரனிடம் தந்தார்.

இப்போது இந்திரனிடம் ஏழு தியாகேச மூர்த்தங்கள் இருக்கின்றன. மறுநாள் முசுகுந்தன் சபைக்கு வந்தான். சபை கூடியது. ஏழு தியாகேச மூர்த்திகள் அவன் முன் வைக்கப்பட்டன. "எங்கே இந்த ஏழு தியாகேசர்களில் தினமும் நான் வழிபட்ட தியாகேசரைச் சரியாகச் சுட்டிக்காட்டு பார்க்கலாம். அப்படி நீ சரியாகக் கண்டுபிடித்து விட்டால் அவரை உனக்குத் தருவதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை" என்றான் இந்திரன். முசுகுந்தனால் தான் வழிபட்டுப் பூஜித்த தியாகேச மூர்த்தத்தைக் கண்டுபிடிக்க முடியாது என்பதே இந்திரனது சூழ்ச்சித் திட்டம். முசுகுந்தன் ஏமாறப் போகிறான் என்பது இந்திரனது அசைக்க முடியாத நம்பிக்கை.

முசுகுந்தச் சக்கரவர்த்தி சம்மணம் கொட்டி இருந்தார். கண்களை மூடினார். கைகளை மார்பிலே வைத்துக் கொண்டார். தென்னாடுடைய சிவனை, தன்னைப் பூவுலகை ஆளப் பணித்த பரமசிவனை மனம் குவித்து வேண்டுதல் செய்தார். "வேண்டுவார் வேண்டுவதை ஈந்தருளும் சிவனை வேண்ட உள்ளே ஜோதி ஒன்று சுடர்விட்டுப் பிரகாசித்தது. அச்சுடர் இடமும் வலமுமாகவும் மேலும் கீழுமாகவும் அசைந்தது. அந்த அசைவில் தியாகேசப் பெருமானது நடராஜப் பெருமானின் திருநடனம் நிகழ மனதை உற்றுக் கவனித்தார். அங்கே தியாகேசரின் திருமேனியைத் தெளிவாகக் கண்டான். உடல் சிலிர்த்தான். "திருச்சிற்றம்பலம்" என்று மூன்றுமுறை உரக்கச் சொல்லிக்கொண்டே கண் திறந்தான். எதிரில் ஏழு தியாகேசர் திருமேனிகளிருந்தன. மெல்ல அருகே சென்றான். சந்தேகமோ தயக்கமோ இன்றி அச்சொட்டாக மகா விஷ்ணு இந்திரனுக்களித்த தியாகேசர் விக்கிரகத்தைச் சரியாக எடுத்துக் கண்ணில் ஒற்றித் தலைமீது சுமந்தான்.

இதுகண்ட இந்திரன் அதிர்ச்சியும் ஆச்சரியமும் ஆனந்தமும் அடைந்தான். முன்பு தியாகேசர் திருமேனியைக் கேட்டு விட்டானேயென்று கோபம் கொண்டவன் அதனை மறந்து அவன் இறைவன்மீது கொண்டுள்ள பக்தியை வியந்து அப்படியே அவனை ஆரத் தழுவிக்கொண்டான் இந்திரன். மிகச் சிவபக்தன் நீ; இப்பேர்ப்பட்ட சிவனடியாரிடம் தியாகேசர் இருப்பதுதான் சரி; இதை நீயே வைத்துக் கொள். அதுமட்டுமல்ல. மற்ற ஆறு தியாகேசர்களையும் கூட நீயே வைத்து வழிபடு" என்று கூறி அனைத்துத் தியாகேசர் உருவங்களையும் முசுகுந்தனிடம் இந்திரன் வழங்கினான். இதனால் இந்திரன் "வலாரி" என்னும் திருநாமம் பெற்றான். மனம் கொள்ளாத மகிழ்ச்சியுடன் ஏழு தியாகேசர் திருவுருவங்களையும் பெற்றுக் கொண்ட சக்கரவர்த்தி ஆரூருக்கு வந்து ஏழு தியாகேசர் திருவுருவங்களையும் ஓரிடமாக வைத்துச் சிறப்புப் பூஜை செய்து வழிபட்டான். அதுவே சப்தவிடங்கத் தலமாகும். சப்த விடங்கத் தலங்களைப் பூலோகம் கொண்டுவரப்

*கடினமான உழைப்பு தெய்வ வழிபாட்டுக்குச் சமம்.*

பரமசிவன் முசுகுந்தச் சக்கரவர்த்திமூலம் காய் நகர்த்திய திருவிளையாடல் என்பதே உண்மை.

திருமால் நெஞ்சில் பதிந்திருந்து இந்திரனிடம் கொடுத்திருந்த தியாகேச மூர்த்தத்தைத் திருவாரூர் தலத்தில் பிரதிஷ்டை செய்தான். அடுத்து ஆறு தியாகேச மூர்த்தங்களையும் ஆறு தலங்களில் பிரதிஷ்டை செய்து தானும் வழிபட்டதோடு மக்களையும் வழிபட வைத்தான். இந்த ஏழு இடங்களிலும் ஆடல்வல்லான் வெவ்வேறு வகையான திரு நடனத்தை ஆடிக் காட்டிப் பூவுலகத்தவருக்குக் களிப்பூட்டி வருகிறார். தமிழகத்திலே திருவாரூரிலும் அதனைச் சுற்றியுள்ள இடங்களிலும் சப்தவிடங்க தலங்கள் அமைந்துள்ளன. இவ்விடங்கட்குச் சென்று வழிபாடாற்றுவது விசேடம். பாவங்கள் நீங்கிப் புண்ணியம் பெருகும் என்பது ஐதீகம்.

திருவாரூரில் வீதிவிடங்கர் திருக்கோளிலியில் அவனி விடங்கரும், திருநள்ளாறில் நாக விடங்கரும், நாகபட்டினத்தில் சுந்தர விடங்கரும், திருக்காறை வாசலில் ஆதி விடங்கரும் திருவாமூரில் நீல விடங்கரும், வேதாரணியத்தில் பவனி விடங்கருமாக அமர்ந்து சிவபெருமான் ஒருவரே அருள் பாலிக்கிறார். திருவாரூரில் ஸ்ரீ தியாகராஜ சுவாமி திருக்கோவில் உள்ளது. அம்பிகை ஸ்ரீ கமலாம்பிகை. எதிர்ப்புறமாக கமலாலய தீர்த்தக் குளம் உள்ளது. இங்கு நீராடினால் வந்த வினையும் வல்வினையும் போகும் என்கின்றனர் பக்தர்கள். இத்தலத்தில் அஜபா நடனமாடி வீதி விடங்கராகச் சிவபெருமான் காட்சி தருகிறார். திருக்காறாயிலில் ஸ்ரீ கண்ணாயிரநாத சுவாமியாகவும் அம்பாள் ஸ்ரீ கைலாய நாயகியாகவும் அமர்ந்து அருள் பாலிக்கும் இங்கே சிவன் ஆதிவிடங்கராக "குக்குட" நடன நாயகராகத் தியாகேசர் காட்சி தருகிறார். "குக்குடம்" என்பது சேவலின் நடையை ஒத்த நடனம் ஆகும். திருக்கோளிலி பிரமனால் வழிபடப்பெற்ற திருத்தலமாகும். சுவாமி ஸ்ரீ பிரம்மபுரீஸ்வரர் என்றும் அம்பாள் ஸ்ரீ வண்டார் பூங்குழலி எனவும் அழைக்கப்படுவர். இங்கு அவனி விடங்கராகக் காட்சிதந்த சிவனார் பிரம்மர நடனம் ஆடுகிறார். பிரம்மரம் என்றால் வண்டு. அதாவது வண்டு பறப்பது போன்று ஆடப்படுவது.

திருவாய்மூர் திருத்தலத்தில் கோயில் கொண்டருள்பவர் ஸ்ரீ வாய்மூர்நாதர். இவருக்கு ஸ்ரீ வேதாரணியேஸ்வரர் என்னும் திருநாமமும் உண்டு. அம்பாள் ஸ்ரீ பாலினும் மென்மொழியாள். கோவிலின் எதிரே பாப மேக பிரசண்ட தீர்த்தம் உள்ளது. தேவர்கள் வந்து நீராடியதாகத் தலவரலாறு கூறுகிறது. இங்கே நீல விடங்கராகத் தியாகேசர் அருள்வார். தண்ணீரில் மிதக்கும் தாமரைபோன்று மெதுவாக ஆடும் நடனமாதலால் கமல நடனம் எனப் போற்றப்படுகிறது. வேதாரணியம் என்பது வேதங்கள் சிவபூஜை செய்த பழைமை வாய்ந்த கோவில். இறைவன் ஸ்ரீ வேதபுரீஸ்வரர். அம்பாள் ஸ்ரீ யாழைப் பழித்த மொழியாள். இங்கு புவனி விடங்கராக ஹம்ச பாத நடனம் அதாவது அன்னப் பறவையின் நடையினை ஒத்த நடனம் ஆடுகிறார்.

திருநாகைக் காரோணம் எனப் புராணங்கள் சிறப்பித்துக் கூறும் நாகபட்டினத்தில் ஸ்ரீ காயாரோகணேஸ்வரர் திருக்கோயில் அமைந்துள்ளது. அம்பாள் ஸ்ரீ நீலாயதாட்சி. இந்த ஆலயத்தில் சுந்தரவிடங்கராக வீசி நடனமாடி அருள்பாலிக்கிறார் தியாகேசப் பெருமான். இந்த ஆலயம் தமிழகத்தின் நடுவண் இருப்பதும் ஒரு சிறப்பு. நாலாபுறமிருந்தும் போக்குவரத்து வசதிகளும் உண்டு.

திருநள்ளாறு ஸ்ரீ தர்ப்பாரண்யேஸ்வரர் கோவில் சனி தோஷம் நீக்கும் விசேட திருத்தலமாகும். இங்கிருந்து திருவருள்

*எனக்கு வேண்டும் என்பது ஆசை, எனக்கு மட்டும் வேண்டும் என்பது பேராசை.*

பாலிக்கும் அம்பாள் ஸ்ரீ போகமார்ந்த பூண் முலையாள். இத்தலத்தில் நக விடங்கராக நடனமாடி ஸ்ரீ தியாகேசப் பெருமான் காட்சி தருகிறார். பாவம் போக்கும் புண்ணிய தலமாகப் பக்தர்கள் போற்றி வழிபடுகிறார்கள். இந்தத் தலங்களுக்கு நாமும் சென்று வழிபட்டு நற்கதியடைவோமாக.

தலவரிசையாக,

“சீரார் திருவாரூர் வெள்ளானை நள்ளா
காரார் மறைக்காடு காறாயில் பேரான்று
ஒத்த திருவாய்மூர் உவந்திரு கோளிலி
சப்த விடங்க தலம்”

ஓம் சப்த விடங்க நமக”

## இது தவறல்ல!

திருவனந்தபுரம் பத்மநாபசுவாமிமீது பக்திகொண்ட ஒரு பக்தர், “பத்மநாபோ அமரப்பிரபு” என்று மந்திரம் சொல்வதற்குப் பதிலாக, “பத்மநாபோ மரப்பிரபு” என்று சொல்லி வணங்கி வந்தார்.

“பத்மநாப சுவாமியே தேவர்களின் தலைவன்” என்பது இதன் பொருள். ஆனால் அந்தப் பக்தரோ “பத்மநாபன் மரங்களுக்குத் தலைவனாக இருக்கிறான்” என்பதுதான், இந்த மந்திரத்தின் பொருள்போலும் என்று நினைத்துக்கொண்டு, ஒரு அரசமரத்தை தினமும் சுற்றி வந்தார். பண்டிதர் ஒருவர் இதைக் கவனித்து விட்டார்.

“ஐயா! நீங்கள் உச்சரிப்பது தவறு. பத்மநாபோ அமரப்பிரபு என்றுதான் சொல்ல வேண்டும்” எனக் கூறி விளக்கம் அளித்தார்.

இதுநாள் வரை தவறாக உச்சரித்து விட்டதை எண்ணிய பக்தர் வருந்தினார். அதன்பின் திருத்திச் சொல்லத் தொடங்கினார்.

அன்று இரவு பண்டிதரின் கனவில் வந்த பெருமாள், “வனானி விஷ்ணு” (காடுகளில் உள்ள மரம், செடி, கொடி அனைத்தும் விஷ்ணுவின் வடிவம்) என்று பராசரர் சொன்னது உமக்குத் தெரியாதா? மரங்களுக்கும் நானே தலைவன். பக்தியோடு அரசமரத்தைப் பூஜித்த பக்தரின் மேன்மையை நீ உணரவில்லையே” என்று கோபமாகச் சொன்னார்.

தவறாக மந்திரம் சொன்னாலும், தூய பக்தி இருக்குமானால் குழந்தையின் மழலை கேட்டு மகிழும் தாய்போல, கடவுள் நம் அன்பை முழுமையாக ஏற்றுக்கொள்வார்.

*இன்பத்தைப் பங்குபோட்டால் இரட்டிப்பாகும். துன்பத்தைப் பங்குபோட்டால் பாதியாகும்.*

# பகவத்கீதையின் உலகம் தழுவிய பரந்த நோக்கு

(தொடர்ச்சி...

– சுவாமி கிருஷ்ணானந்தா –

தமிழில்: திரு பூ. சோதிநாதன் அவர்கள் –

## அத்தியாயம் – 07

## சரியாகப் புரிந்துகொள்ளும் தன்மை

### 06. துக்கப்படக் காரணம் இல்லை.

சாராம்சம் அழியாது, நாமரூப மாற்றம் தவிர்க்க முடியாது என்னும் இரண்டு வழிகளிலும் துக்கப்படுவதற்கு எவ்வித காரணமும் கிடையாது. எது தவிர்க்க முடியாததோ அதனை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும். அத்துடன் தவிர்க்க முடியாததற்காக அழுவதும் முற்றும் அர்த்தமில்லாத ஒரு செயலாகும். மேலும், அதனால் எந்தவிதமான ஆதாயமும் கிடைக்கப்போவதில்லை. கால- இட- காரண உறவு நிலையில் ஓர் எல்லைக் குட்பட்ட வஸ்து உள்ளவரை அப்படியான வஸ்துவின் மாறும் சாத்தியப்பாட்டை எவரும் விலக்க முடியாது. ஆனால் நீ அழிவதாகக் கருதுவது ஆன்மா என்றால் அது அழிவற்றது அன்றோ? ஆன்மா அழியாதது என்பது ஓர் உயர்ந்த தத்துவக் கருத்தாகும். அர்ச்சுனனது வினாவுக்குக் கிருஷ்ணனின் பதில் அந்தத் தத்துவமே ஆகும். ஆனால், அவனது பிரச்சினைக்கு அது ஒன்று மட்டும் விடையன்று.

### 07. சூழல்.

ஒருவர் சாராம்சத்தில் அழியாத வஸ்துவாக இருந்தாலும் அவர் அதுமட்டும் அன்று. ஒருவர் சமூக அங்கத்தவர் என்பதையும் எமது முந்திய ஆய்வில் நாம் கண்டிருக்கின்றோம். எந்தவேளையிலும் ஒரு தீர்மானம் எடுக்கப்படும்போது பலர் உள்ள பெரிய சமூகம் ஒன்றின் சூழலில் ஒருவரின் பொருத்தப்பாட்டையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு வருக்கும் அவரவர் உள்ள சமூகச் சூழ்நிலையைப் பொறுத்தவரையில் ஒரு கடமை உண்டு. இது சமூகத்தைப் பொறுத்தவரையில் தர்மம் என்று அழைக்கப்படுகின்றது. சுவதர்மம் என்பது ஒருவர் தனது சமூகத்துக்குச் செய்யும் கடப்பாடு என்று வழமையாகக் கருதப்பெறு கின்றது. சமூகம் என்றால் என்ன என்பதை நாம் முன்னரே அவதானித்துள்ளோம். ஒரு சமூகம் என்று குறிப்பிடும்போது அது மனித சூழ்நிலையோடு மட்டுப்படுவது அன்று. மனித உலகத்தால் மட்டும் அடக்க முடியாத எம்மைச் சூழ உள்ள எல்லாவற்றையும் சமூகம் என்ற வார்த்தை குறிக்கின்றது. இதனால் முழுப் பிரபஞ்சமுமே ஒரு சமூகச் சூழலாக அமைகிறது. எனவே இந்தப் பரந்த பிரபஞ்சத்துக்கும் நாம் ஒரு கடமை செய்யவேண்டியவர் களாக இருக்கின்றோம். மனித உறவுகள் உட்பட பிரபஞ்சம் தனது நிலையில் எம்முடன் பலவிதமாகத் தொடர்புபடுகின்றது.

*வேகமாக முடிவெடுப்பதைவிட விவேகமாக முடிவெடுப்பதே நன்மை தரும்.*

**08. கடமை.**

இறுதி உண்மையின் தன்மை குறித்த நிலையில் இருந்து பார்த்தாலும், சுற்றியுள்ள சமூகத்தோடு ஒருவருக்கு உள்ள தொடர்பு நிலையில் இருந்து பார்த்தாலும், ஒருவர் தனது சொந்த ஈடுபாட்டு நிலையில் இருந்து பார்த்தாலும், வேறு எந்தக் கோணத்தில் இருந்து பார்த்தாலும் ஏதோ ஒருவகையான கடமையில் இருந்து எவரும் விடுபட்டவர் அல்லர். எனவே செயல் இன்மையைப் பற்றிச் சிந்திப்பதற்கே இடமில்லை. அதுமட்டுமன்றிச் செயலாற்றுவதில்லை என்ற தீர்மானமும் கூட ஒரு செயலே ஆகும். உலகத்தினால் தளைப்படுத்தப்படும் செயல் ஒவ்வொருவரையும் ஏதோ ஒரு வழியில் செயலாற்ற வைக்கின்றது. ஆனால் ஒருவர் தான் இணைந்துள்ள எல்லாவற்றையும் அடக்கியுள்ள முழுமையோடு தனது செயலைத் தொடர்புபடுத்தும் செய்முறையைப் புரிந்து கொள்வதில் ஞானம் அடங்கி உள்ளது. ஒருவர் ஒரு செயலில் தன்னை ஈடுபடுத்தும் செய்முறையில் எவ்வித சுயநலமோ, எல்லைக்கு உட்பட்ட தன்மையோ ஒரு யோகமாக ஆகமுடியாது. சுயநலத்தோடு எல்லைக்கு உட்பட்டுச் செயலாற்றினால் ஒருவர் தன்னைத் தளைப்படுத்தும் வழியாகவே அது அமையும்.

**09. தளையும் யோகமும்.**

ஒருவர் தான் சேர்ந்துள்ள முழுமையோடு தனது பிரதான தொடர்பைப் புரிந்து கொள்ளாமையின் விளைவே தளை ஆகும். அத்துடன் அதற்கு எதிரானதே விடுதலை ஆகும். எனவே செயல் என்பது இறுதியில் ஒருவர் தானே ஆரம்பிப்பதோடு மட்டும் நின்று விடுவதில்லை. அச்செயல் முழுப் பிரபஞ்சத்தின் ஒட்டுமொத்த நோக்கத்தின் ஒரு பகுதியாகவும் அமையும். இதனைப் புரிந்துகொள்ளாமையே அறிவின்மை அல்லது சாங்கியமின்மை எனப்படும். கீதையின் இரண்டாவது அத்தியாயத்தில் சாங்கியம் பற்றிய விபரம் தரப்படுகின்றது. அதனாலேயே "சாங்கியம் என்றால் என்ன என்று இதுவரை விளக்கி உள்ளேன்" என்று கிருஷ்ணன் அர்ச்சுனனுக்குக் கூறுகின்றான். எனவே கிருஷ்ணன் கூறும் சாங்கியம் எப்படிப் பட்டது என்பதை விளக்க ஒரு சிறிய அறிமுகம் தேவை. அத்தோடு அச்சாங்கியத்தை நாளாந்த நடைமுறை வாழ்க்கையில் நாம் உபயோகிக்க வேண்டும். நாளாந்த வாழ்க்கையில் சாங்கிய அறிவை நடைமுறைப்படுத்துவதே யோகம் என அழைக்கப்பெறுகின்றது. முதலில் சாங்கியத்தைப் பற்றிக் கூறியபின் யோகத்தை எடுத்துக்கொள்வோம்.

**10. கோட்பாடும் செயல்முறையும்.**

செயல் செய்வதற்கு முன்னர் அச்செயலைச் செய்வதற்கான அறிவு இருக்கவேண்டும். அறிவின் அடிப்படையிலேயே இவ்வுலகில் நாம் நடந்துகொள்ளும் முறையும், செயல்களைச் செய்யும் முறையும் அமைகின்றன. செயலுக்குத் தேவையான அறிவைக் கோட்பாடு என்று அழைக்கப்படும். கோட்பாட்டின் அடிப்படையிலேயே செயல்முறை அமைவதனால் கோட்பாடும், செயல்முறையும் ஒன்றோடொன்று தொடர்புபட்டே இயங்குகின்றன. கோட்பாடு, செயல்முறை என்ற இரண்டையும் வேறுபடுத்தித் தனித்தனியாகப் பிரிக்க முடியாது. யோகம் என்பது சாதாரண அர்த்தத்தில் வழங்கப்படும் செயலோடு நின்றுவிடுவது இல்லை. ஒருவனது இருப்பில் இருந்தே அவனது செயல் உருவாகின்றது. யோகப் பயிற்சியினால் மனித இருப்புப் படிப்படியாக விருத்தி அடைந்து வருகின்றது. அவ்வாறு இருப்பு விருத்தி அடைந்து வரும் போது செயல் மேலும் மேலும் முழுமையுடையதாகவும், எல்லாவற்றையும் அடக்கியதாகவும்

அமைகின்றது. "இந்தப் பயிற்சியில் ஒரு சிறிதளவையேனும் நீ செய்வாயாகில் அது உனக்குப் பெரும் பலனைக் கொண்டுவந்து தரும்" என்று கீதையில் கிருஷ்ணன் அர்ச்சுனனுக்குக் கூறுகின்றான். அந்தப் பயிற்சியில்தான் ஆன்மா இறைவனைச் சந்திக்கின்றது. அந்த அரிய சந்திப்பின் விளைவாகவே அப்பயிற்சியினால் எவ்வகையான இழப்பும் ஒருவருக்கு ஏற்படுவதில்லை. இந்த யோகப் பயிற்சிக்காகச் சரியான வழியில் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு சிறிய முயற்சியும் அதனைச் செய்பவனுக்கு நன்மையையே பெற்றுத் தரும். அப்படி ஒரு செயலை யோகமாகச் செய்பவன்தான் நல்ல செயலைச் செய்வதாக எண்ணி மகிழ்ச்சி அடைகிறான்.

**11. பலனை எதிர்பார்ப்பது தவறு.**

சாங்கியத்தைப் புரிந்துகொண்டு செய்யப்படும் எல்லாச் செயல்களுமே சிறப்பானவை ஆகும். அந்தச் சாங்கிய அறிவு இல்லாமல் செய்யப்படும் செயல்கள் யாவும் நல்லன அல்லாதவையாக அவற்றைச் செய்பவனைத் தளைப்படுத்தி விடும். எமக்குச் செயல்புரிய மட்டுமே உரிமை உண்டு. அச்செயலை நிறைவேற்றுவதனால் வரக்கூடிய பலனை எதிர்பார்ப்பதற்கு எமக்கு எவ்வித உரிமையும் இல்லை. இக் கருத்தே பகவத்கீதைப் போதனை முழுவதிலும் ஒலித்துக் கொண்டிருக்கும் மாபெரும் விடயமாகும். ஆனால் இன்றுள்ள மனித மனங்களால் இக்கருத்தை இலகுவாகப் புரிந்துகொள்ள முடியாமல் இருக்கிறது. வயலில் விதையை விதைக்குமுன்பே அறுவடையை எதிர்பார்ப்பது போன்றதே இந்த மன நிலை ஆகும். இவ்வுலகில் நாம் எப்போதும் எமது கடமைகளைப் புறக்கணித்துவிட்டு எமது உரிமைகளைத் தேடி ஓடிக்கொண்டு இருக்கின்றோம். ஆனால் நாம் வாழுகின்ற சமூகத்துக்கு நாம் ஆற்றவேண்டிய கடமைகளைப் பற்றிச் சிறிதும் கவலைப்படுவதில்லை. ஒருவன் தனது செயல்களின் பலனை எதிர்பார்ப்பது தவறானது. அந்த எதிர்பார்ப்பு சாத்தியமான ஒருவிடயம் அன்று. ஏனெனில், செயல் செய்பவனுக்குக் கடமையானதாகவும், அவனது கைகளில் அதற்கான பலன் இல்லாமலும் இருப்பதனால் ஆகும். (தொடரும்...

## ஆண்டவன் விரும்பும் வழிபாடு

பண்டரிபுரத்தில் சில சாதுக்கள் 'ஏகாதசி விரதம் இருந்துவிட்டு அடுத்தநாள் துவாதசிப் பாரணைக்காக சமையல் செய்துகொண்டிருந்தார்கள். அப்பொழுது ஒரு கருப்பு நாய் அங்கு வந்தது. அது சாதுக்கள் தயாரித்த ரொட்டி மாவை முகர்ந்து பார்த்து எச்சில் படுத்திக்கொண்டிருந்தது. அதைக் கண்ட சாதுக்கள் அதை அடித்துத் துரத்தினார்கள். அது அவர்கள் செய்திருந்த ரொட்டியை வாயில் கவ்விக்கொண்டு ஓடியது. நாமதேவர் அதன் பின்னாலேயே நெய்ப் பாத்திரத்தைத் தூக்கிக்கொண்டு ஓடினார். "வெறும் ரொட்டியைத் தின்னாதே! தொண்டையில் சிக்கும். இந்த நெய்யில் தோய்த்துத் தருகிறேன் சாப்பிடு" என்று சொல்லிக்கொண்டே ஓடினார். சிறிது தூரத்தில் நாய் நிற்கவே அவர் அதன் வாயிலிருந்த ரொட்டியை வாங்கி, தன் கையிலிருந்த நெய்யில் தோய்த்து அதற்கு சாப்பிடக் கொடுத்தார். அதைக் கண்ட மற்ற சாதுக்கள் சிரித்தனர். நாமதேவருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது என்றனர். அப்போது அந்த நாய் மனிதக் குரலில் "நாமதேவா! பகவானாகிய நான் உங்களைப் பரிசோதிக்கவே வந்தேன். உனக்கு மட்டுமே எல்லாப் பிராணிகளையும் ஒரே நோக்கில் பார்க்கும் சம திருஷ்டி இருக்கிறது. பிற உயிர்களுக்குச் செய்யும் சேவையே ஆண்டவன் விரும்பும் வழிபாடு! உனக்கு என் ஆசிகள்" என்று சொல்லி மறைந்தார். அதைக்கண்ட மற்ற சாதுக்கள், பகவான் நேரில் வந்தும் அவருக்கு சேவை செய்யக் கொடுத்து வைக்கவில்லையே என்றும் மிகவும் வருத்தப்பட்டார்கள்.

*இதயத்தில் பெருந்தன்மை இருந்தால் அது நற்பண்புகளின் அழகாகப் பிரகாசிக்கும்.*

# இன்றைய காலத்தில் அறநெறிக் கல்வியின் அவசியம்

– திருமதி புனிதவதி சண்முகலிங்கம் அவர்கள் –

இன்றைய நவீன உலகம் பூகோளமயமாகி விட்டது. விஞ்ஞான தொழில்நுட்ப வசதிகள் உலகத்தைச் சுருக்கி விட்டன. உலகம் நம் உள்ளங்கையில் என விஞ்ஞானிகள் மார் தட்டுகின்றனர். பூகோள கிராமமாகியுள்ள இந் நவீன உலகில் பல இன, மத, கலா சார, பண்பாடுகள் ஒன்றுடன் ஒன்று கலந்து ஐக்கியமாகி விட்டன. இதனால் நன்மையும் உண்டு. தீமையும் உண்டு. திக்குத் தெரியாத காட்டில் அலைவதுபோல் மக்கள் தத்தம் கலாசார பண்பாடுகளைத் தொலைத்து அல்லாடுகின்றனர். தமது வேர்களையே மறந்து உலக மயமாக்கல் எனும் சுனாமி அலையில் அள்ளுண்டு தவிக்கின்றனர்.

இத்தகைய சூழல் முற்றும் முழுதாக லௌகீக நோக்குடன் அமைகிறது. எல்லாம் பொருளாதாரக் கண்கொண்டே நோக்கப்படுகின்றன. இதனால் போட்டி, பொறாமை, கொலை, களவு, நயவஞ்சகம், நம்பிக்கைத் துரோகம் என நச்சு மரமாய் பல கிளைகள் கொண்டதாக சமூகம் உருவாகின்றது. மனிதனை மனிதன் மதிக்காது, நாம் என்ற பொதுநோக்கு இன்றி நானே எல்லாம் எனும் ஆணவத்துடன் மனிதன் செயற்படத் தொடங்குகிறான். மனிதத்தைத் தொலைத்து அசுரனாகி ஆர்ப்பரிக்கிறான். இத்தகைய அவல நிலையில் இருந்து அவனை மீட்டெடுக்க அறச் சிந்தனைகள், அற விழுமியங்கள் கைகொடுக்கின்றன.

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற.

என்றார் தெய்வப்புலவர் திருவள்ளுவர்.

மனம் தூய்மையாக இருத்தலே உண்மையான அறநெறி வாழ்வாகும். தூய்மையற்ற மனத்தினனாய் செய்யும் மற்றைய செயல்கள் எல்லாம் வெளி வேடங்கள். இன்றைய காலகட்டத்திலே மனிதன் தூய்மையான மனத்தினனாகச் செயற்பட அவன் மனம் செழுமை உடையதாக, பண்பட்டதாக நன்மை தீமைகளைப் பகுத்தறியக் கூடியதாக அமைதல் வேண்டும். இத்தகைய உயிரச் செழுமையை மனப்பக்குவத்தை அறநெறிக் கல்வி அளிக்கிறது. பாடசாலை கல்வி பெருமளவு பரீட்சை நோக்கு உடையதாக லௌகீக நோக்குடையதாக அமைந்து விடுகிறது. வாரத்தில் இரு பாட வேளைகள் சமயம், அறம் சார்ந்த பாடங்கள் கற்பிக்கப்படுகின்றனதான். எனினும் அது போதியதன்று. இப் போதாமையை அறநெறிப் பாடசாலைகள் நிறைவு செய்கின்றன.

அறநெறிப் பாடசாலைகளில் சமயம் சார்ந்த கற்றலும், ஒழுக்க விழுமியங்கள் சார்ந்த போதனைகளும் இடம்பெறுகின்றன. போட்டி மனப்பான்மையின்றி, பணநோக்கு இன்றி மனித மனங்களை செழுமைப்படுத்துவனவாக இக் கல்விமுறை அமைகிறது. பண்டுதொட்டே கடைப்பிடிக்கப்படும் அறக்கருத்துக்களை கதைகள் ஊடாகவும் பாடல்கள் ஊடாகவும், நாடகங்கள் போன்ற கட்புல சாதனங்கள் ஊடாகவும் எடுத்துக்காட்டப்படுகிறது.

*மகிழ்ச்சியாய் நீ வீணாக்கிய தருணங்கள் எல்லாம் வீணானவையல்ல.*

இப் பாடசாலைகளின் அறநெறிக்கீதம் தனது கொள்கைகளை இலக்குகளை துலாம்பரமாக வெளிப்படுத்துகிறது. "அன்புடன் அருளும் நிறைந்த நல் வாழ்வை அறநெறி வழியில் அமைப்போமே" என இக்கீதத்தின் முதற் பந்தியில் கூறப்படுகிறது.

அறநெறிப் பாடசாலைகளில் காலத்திற்குக் காலம் இடம்பெறும் குருபூசைகள் அருளாளரின், ஞானிகளின் வாழ்வை, அவர்களின் செம்மையான நெறிகளை அறிய வழிகோலுகின்றது. இதன்மூலம் மாணவர் மனம் பண்படுத்தப்பட்டு சிறந்த சமூகப் பிரஜையாக உருவாக வழி ஏற்படுகிறது.

அறநெறிக் கல்வி தூய்மையையும், தியானத்தையும் போதிக்கிறது. எமது வாழ்விற்கு இவை இரண்டும் மிக அவசியம். மன ஒன்றித்தலோடு கல்வி கற்பதற்கு, மன ஒருமைப்பாட்டுக்கு தியானம், யோகாசனம் என்பவை மிக அவசியம் என்பது இன்று எல்லோராலும் ஒருமுகமாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. எனவே மாணவன் தனது பாடசாலைக் கல்வியை திறம்பட கற்று வெற்றி பெறவும் அறநெறிக் கல்வி வழிவகுக்கின்றது. கல்வியைக் கசடறக் கற்கவேண்டும். கற்றபடி ஒழுக வேண்டும். தீயவற்றை விலக்கி நன்மை தரும் செயற்பாட்டில் ஒழுக வேண்டும். இதனால் நாமும் பயன்பெறுவோம். உலகமும் பயன்பெறும். இதனையே

நாளை உலகின் நல்லவர் என்றிடும்
நாமம் பெற்றிட பயில்வோமே
தீதும் நன்றும் யாதெனத் தேறும்
திறமைகள் அனைத்தும் பெறுவோமே

என்ற அறநெறிக் கீத வரிகள் எடுத்துக் கூறுகின்றன.

இன்று நாடளாவிய ரீதியில் உலகளாவிய ரீதியில் இனத்தின் பெயரில் சண்டை, மதத்தின் பேரில் சண்டை, மொழியின் பெயரில் சண்டை இன்னும் எத்தனையோ எத்தனையோ வழிகளில் சண்டை. அப்பப்பா சொல்லி மாளாது. இதற்கெல்லாம் என்ன காரணம்? "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற உயரிய, சீரிய சிந்தனை நம்மிடையே இல்லாது போய்விட்டது. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற பரந்த நோக்கை நாம் மறந்து விட்டோமா? மறுத்து விட்டோமா? இயந்திர தனத்துடன் இயந்திர மனிதனாக வாழும் இவ் அவல நிலையில் இருந்து மீட்கும் தேவனாக அமைவது அறநெறிக் கல்வியேயாகும்.

"அறம் செய விரும்பு" என்று சிறுபராயத்திலேயே எமக்குச் சொல்லித் தரப்படுகிறது. மிக இளம் பருவத்திலே பதிய வைத்த இக்கருத்துக்களை வளர்த்தெடுக்கும் பாரிய வேலையை அறநெறிப் பாடசாலைகள் செய்கின்றன.

அறநெறியில் வாழ்வதே இறை பணியாகும் என்ற புனிதமான புதுமையான கருத்தையும் அறநெறிக் கல்வி புகட்டுகிறது.

ஒட்டுமொத்தமாகக் கூறுவதானால் இன்றைய காலத்தின் தேவையாக இக்கல்வி அமைந்துள்ளது. அறநெறிக் கல்வியால் திரிகரண சுத்தியுடன் இயங்கும் ஆற்றல் கைகூடுகிறது. இதனால் எடுத்த காரியம் யாவும் சித்திக்கும். சகலரும் சாந்தியுடன், சகோதரத்துவத்துடன் சுபீட்சமாக வாழ வழி சமைக்கிறது. நாம் அனைவரும் அறவழியில் ஒழுகி மகாத்மா காந்தி கனவு கண்ட ராம் ராஜ்யத்தை உருவாக்குவோம்.

"அறம் வாழ்க!; அறம் வெல்க!"

*உன் துன்பத்திற்கு எது காரணமாய் இருந்தாலும் இன்னொருவரைப் புண்படுத்தாதே.*

# 100 ஆண்டுகளாகச் சமயப்பணி புரியும் சைவ பரிபாலன சபை 1989

– திரு வை. இரகுநாதமுதலியார் அவர்கள் –

சைவ சமயமே சமயம் சமயாதீதத் பழம் பொருளைக்
கைவந்திடவே மன்றுள் வெளிக்காட்டு மிந்தக் கருத்தை விட்டுப்
பொய் வந்துழலுஞ் சமய நெறி புகுத வேண்டா முத்திதருந்
தெய்வ சபையைக் காண்பதற்குச் சேரவாருஞ் செகத்தீரே.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் வளர்த்த வேத சிவாகமங்களையும் சித்தாந்த சாத்திரங்களையும் அடிப்படையாகக் கொண்ட சைவ சமயத்தை அதன் தூய நிலையில் சைவ மக்களுக்கு வழங்க வேண்டும் என்ற கொள்கையை நோக்கமாகக்கொண்டு அமைக்கப்பட்டதே சைவபரிபாலன சபை. சைவ சமய பண்பாட்டுச் சூழலில் சைவப் பிள்ளைகட்கு ஆங்கில தமிழ்க் கல்வியை ஊட்டுவதற்குச் சைவப் பாடசாலைகளையும், "வேத நெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க" ஆங்கில தமிழ்ப் பத்திரிகைகளையும் நடத்தவேண்டும் என்பதே நாவலர் அவர்களுடைய பிரதான நோக்கம். அவர் 1872ஆம் ஆண்டு சைவ ஆங்கில வித்தியாசாலையை வண்ணார் பண்ணையில் ஸ்தாபித்தார்.

கிறிஸ்தவப் பாதிரிமார்கள் கிறிஸ்தவப் பாடசாலைகளை ஆரம்பித்ததுடன் நின்றுவிடாது மதமாற்றம் செய்யவும், கிறிஸ்தவ சமயத்தை ஜனரஞ்சகம் செய்யவும், சைவசமய கண்டனங்களைச் செய்யவும், "உதயதாரகை" (1841), "சத்திய வேத பாது காவலன்" (1876) பத்திரிகைகளை ஆரம்பித்தனர்.

1877இல் திரு சின்னத்தம்பி அவர்கள் சைவ சமய நெறி பரப்ப "இலங்கை நேசன்" பத்திரிகையை ஆரம்பித்தார். இப் பத்திரிகையில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களுடைய சைவ சமயப் பணிகள் பெரிதும் இடம்பெற்றன.

நாவலர் காலத்தின் பின் நாவலரின் அபிமானிகள் "சைவப்பிரகாச சாமஜீயம்" என்னும் சபையை ஸ்தாபித்தனர். அதன் முதற் தலைவர் வித்துவசிரோமணி ந.ச. பொன்னம்பலபிள்ளை "சைவ உதயபானு" பத்திரிகையை 16.8.1880இல் ஆரம்பித்தனர். அது மிகக் குறுகிய காலமே வெளிவந்தது.

சர்வதாரி வருடம் சித்திரை மாதம் 19ம் தேதி (29.4.1888) ஞாயிற்றுக்கிழமையும், கிருஷ்ணபட்சத்துச் சதுர்த்தசியும், மூல நட்சத்திரமும், சித்தயோகமும், கௌலவ சரணமும் கூடிய சுப தினத்திலே வண்ணார் பண்ணையில் உள்ள ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை மண்டபத்திலே, வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரர் கோயிலில் விசேட அபிடேக ஆராதனைகள் செய்யப்பெற்று, அங்கிருந்து மங்கல குத்து விளக்கு ஏற்றிக் கொணர்ந்து "சைவசமய பரிபாலன சபை" சைவப்பெருமக்களால் தோற்றுவிக்கப்பட்டது. இச்சபை இலங்கை வாழ் சைவ மக்களின் பாதுகாவலனாக விளங்கவேண்டும் என்பதே ஸ்தாபகர்களது

நோக்கமாகும். "சைவ சமய பரிபாலன சபை" நாவலரின் மருகரும், நன் மாணாக்கரும் ஆகிய வித்துவ சிரோமணி திரு ந.ச. பொன்னம்பலபிள்ளை அவர்களைத் தலைவராகவும், நாவலர் அவர்களுடைய தமையனார் மகன் திரு த. கைலாசபிள்ளை அவர்களைக் காரியதரிசியாகவும் கொண்டிருந்தது.

## சைவ சமய பரிபாலன சபையின் நோக்கங்கள்:

1) சைவ சமயத்தை வளர்த்தல், சைவ மக்கள் அந்நிய சமயத்தில் பிரவேசியாது பாதுகாத்தல்.
2) சைவ முறைப்படி சைவப் பிள்ளைகள் ஆங்கிலத்தையும் தமிழையும் பயில வித்தியா சாலைகளை ஊர்கள்தோறும் ஸ்தாபித்து நடாத்துதல்.
3) கல்வி அறிவு ஒழுக்கங்களில் சிறந்த பெரியார்களைக் கொண்டு எங்கும் சென்று சைவப் பிரசங்கங்கள் செய்வித்தல்.
4) சைவ மக்களுக்கும் தமிழருக்கும் பயன்தரக்கூடிய பத்திரிகைகளைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் தொடங்கி நடாத்துதல்.
5) சேதமடைந்த சைவாலயங்கள், மடங்கள் முதலிய பழைய தரும ஸ்தாபனங்களைப் புதுப்பித்து கிரமமாகத் தருமம் நடைபெறச் செய்தல். கோயில், மடங்களுக்குரிய சொத்துக்களை பிறர் துர்ப்பிரயோகம் செய்யாமல் தாமே பொறுப்பேற்றுப் பாதுகாத்தல், சேரவேண்டிய தரும ஸ்தாபனத்துக்குச் சேர்ப்பித்தல்.
6) வாசிகசாலையை ஸ்தாபித்து நடாத்துதல்.
7) சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதற்கான செயல்களை மேற்கொள்ளல்.

இந்நோக்கங்களுக்கு ஏற்பப் பறங்கித் தெருவில் இயங்கிவந்த 'Native Town High School' பாடசாலையை 29.8.1890 சபை கையேற்று அதை 'Hindu High School' எனப் பெயர் மாற்றினார்கள். திரு எஸ். நாகலிங்கம் அவர்கள் அதன் முதல் முகாமையாளராகவும், திரு எஸ். அப்பாப்பிள்ளை அதன் முதல் தலைமை ஆசிரியருமாக நியமிக்கப்பட்டார்கள். இதுவே இன்றைய யாழ்ப்பாண இந்துக் கல்லூரி.

அதேபோன்று நான்கு வருடங்களாக நடைபெற்று நின்றுவிட்ட "உதயபானு" பத்திரிகை அச்சு யந்திரம் வாங்கப்பெற்று "சைவப்பிரகாச அச்சுயந்திரசாலை" சைவ பரிபாலன சபையாரால் ஸ்தாபிக்கப்பட்டது.

நீராவியடி சைவப்பிரபு திரு ஆறுமுகம் பிள்ளை அவர்கள் நாவலருடைய மாணவர். அவர் நாவலரிடம் பெருமதிப்பு உள்ளவர். அவர் நாவலர் காலத்திலேயே "கந்த புராணம்" போன்ற நூல்களை மலிவு விலையில் அச்சிட விரும்பினார். அதற்காக அச்சகம் ஒன்றை வாங்கி வண்ணார்பண்ணைச் சிவன் கோயில் வடக்கு வீதியில் சைவப்பிரகாச அச்சுயந்திர சாலை என்ற பெயரில் நடத்தினார். இங்குதான் உதயபானு பத்திரிகை அச்சிடப்பட்டது. கொக்குவில் சோதிட பரிபாலனம் இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் ஆரம்பத்தில் கைப்பிரதிகளாகவே வெளிவந்தது. பின்னர் இங்குதான் முதல் சில ஆண்டுகட்கு அச்சிடப் பெற்றது. கந்தபுராணம் போன்ற சில நூல்களும் இங்கு அச்சிடப்பட்டன. 1888 ஆண்டு ஆறுமுகம்பிள்ளை இப்பூவுலக வாழ்வை நீத்ததும் அச்சகம் மூடப்பட்டது. சைவ சமய பரிபாலன சபையின்

முக்கிய ஸ்தாபகர்களுள் ஒருவரான பிறக்ரர் காசிப்பிள்ளை அவர்கள் ஆறுமுகம்பிள்ளை குடும்பத்தின் பிறக்ரரும் ஆவர். அவரே 13 நிபந்தனைகளை ஏற்படுத்தி, சைவப்பிரகாச அச்சுயந்திரசாலையை சைவ சமய பரிபாலன சபையிடம் கையளிக்க உதவினார். அவற்றுள் ஒன்று "சைவப்பிரகாச அச்சுயந்திரசாலை" என்ற பெயரிலேயே இவ் அச்சகம் இயங்கவேண்டும் என்பதாகும்.

பின்னர் இவ் அச்சுயந்திரசாலை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் தென் பாகத்தில் காங்கேசன்துறை வீதியை நோக்கியவாறு அமைந்துள்ள கட்டடத்திற்கு மாற்றப்பட்டு 1928ம் ஆண்டு புதிய கட்டடத்திற்குப் போகும்வரை இயங்கி வந்தது.

சைவப் பிரகாச அச்சுயந்திர சாலையில் விரோதி வருடம் ஆவணிமாதம் 28ம் திகதி (11.9.1889) புதன்கிழமை, கிருஸ்ண பக்கத் துதியையும் உத்தரட்டாதி நாளுங் கூடிய சுப தினத்திலே தமிழில் "இந்து சாதனம்" என்றும் ஆங்கிலத்தில் (Hindu Organ) என்றும் நாமம் இட்டுப், புறத்தே ஆங்கிலமும் அகத்தே தமிழுங் கொண்ட பத்திரிகை, பட்சத்திற்கு ஒரு முறை (இரு கிழமைகட்கு ஒருமுறை) புதன்கிழமை, டெமி அளவில் வெளியிடப்பட்டது.

"Hindu Organ" ஆங்கிலப் பத்திரிகைக்குத் திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் ஓய்வுபெற்ற பிரதம நீதிபதி திரு தா. செல்லப்பாபிள்ளை அவர்களும், "இந்து சாதனம்" தமிழ்ப் பத்திரிகைக்குத் திரு த. கைலாச பிள்ளை அவர்களும் முதற் பத்திராதிபர்களாகக் கடமை ஆற்றினார்கள்.

1889ம் ஆண்டு விரோதி வருடம் ஆடி மாதம் 7ம் திகதி "சைவ சமய பரிபாலன சபை" என்ற பெயர் சைவ பரிபாலன சபை என மாற்றப்பட்டது. பின்னர் 'Hindu Organ' 'இந்து சாதனம்' பத்திரிகைகள் தனித் தனிப் பத்திரிகைகளாக வெளிவந்தன. 1906 ஆடி முதல் இவ் இரு பிரசுரங்களும் அளவில் பெரிதாகி 'றோயல்' பிரமாண அளவில் வெளிவந்தன.

1913 ஆடி முதல் 'Hindu Organ' வாரம் இருமுறை திங்கட்கிழமை, வியாழக் கிழமைகளிலும் 'இந்துசாதனம்' வியாழக் கிழமை மாத்திரமும் வெளிவந்தன.

1915 'Hindu Organ' 'இந்து சாதனம்' பத்திரிகைகளின் 25 ஆண்டுகள் சேவை நினைவாக விசேட மலர்கள் அச்சிடப்பெற்று வெள்ளி விழாக் கொண்டாட்டம் நடைபெற்றது.

1923 ஆடி முதல் 'இந்துசாதனம்' பத்திரிகையும் வாரந்தோறும் இருமுறை திங்கட்கிழமை வியாழக்கிழமைகளில் வெளி வந்தன.

1928 விபவ வருடம் கார்த்திகை 12 (23.11.28) இந்துக் கல்லூரிக்குத் தென்பால் அமைக்கப்பெற்ற புதிய கட்டடத்தில் சைவப் பிரகாச அச்சுயந்திர சாலையினதும், 'Hindu Organ' 'இந்து சாதனம்' பத்திரிகைகளினதும் பிரவேசம் இனிது நடைபெற்றன.

1931 சைவபரிபாலன சபை சட்ட அங்கீகாரம் பெற்றது. இலங்கை சட்ட சபையில் 1931ம் ஆண்டு, 5ம் பிரிவு, அத்தியாயம் 345, சைவ பரிபாலனசபை Ordinance 17 மூலம் சட்ட அங்கீகாரம் பெற்ற சபையாக அங்கீகரிக்கப்பட்டது.

1938 சிதம்பரம் அம்பலவாண சுவாமி புண்ணியநாச்சி மட தரும பரிபாலனத்தோடு சேர்ந்த சைவ பரிபாலனத்தைச் சைவ பரிபாலன சபையார் பொறுப்பேற்றனர்.

1939 ஐப்பசி 'Hindu Organ' 'இந்து சாதனம்' பத்திரிகைகளின் 50 ஆண்டுகள் சேவையை நினைவு கூர்ந்து தனித்தனியே மலர்கள் அச்சிடப்பெற்று 'பொன்விழா' கொண்டாடப்பட்டது.

*ஏமாற்றி வாழலாம் என்று எண்ணாதே. வாழ்க்கை உன்னை ஏமாற்றிவிடும்.*

1946 கல்லூரி வீதியில் 10 பரப்பு காணி சைவ பரிபாலன சபையாரால் வாங்கப் பட்டது.

1947 இக் காணியில் சமயப் பணி கள் புரிவதற்கு நாவலர் ஆச்சிரம மண்டபம் நிறுவப்பட்டது.

1949 'Hindu Organ' 'இந்து சாதனம்' பத்திரிகைகளின் வைர விழா, 60 ஆண்டுகள் சேவையை முன்னிட்டு தனித்தனியே மலர் கள் வெளியிடப்பட்டன.

(தொடரும்...

## வைகுண்ட ஏகாதசி விரதத்தின் மகிமை

ஏகாதசி விரதமானது எல்லா விரதங்களுள் மிகவும் சக்தி வாய்ந்தது. ஒன்றையும் உண்ணாமலிருப்பதே உபவாசம். அன்னம், பால், தீர்த்தம் இவற்றில் ஒன்றையாவது உட்கொண்டால் அது விரதமாகாது.

புராண காலத்தில் மாபெரும் மன்னனான ருக்குமாங்கதன் அனைவரும் ஏகாதசி விரதம் அனுஷ்டிக்க வேண்டுமென ஆணையிட்டான். விரதம் அனுஷ்டித்த அனைவரும் பூரண ஆரோக்கியத்துடன் நீண்டகாலம் வாழ்ந்தனர். இதனால் யமனுக்கு வேலை குறைந்துவிட்டது. இதற்காகத் தேவர்கள் மோகினியை அனுப்பினார்கள். காட்டுக்கு வேட்டைக்குச் சென்ற ருக்குமாங்கதன் அவள்மீது மோகம் கொண்டு அவளைத் திருமணம் செய்துகொண்டான்.

ஏகாதசி தினத்தில் அதிகாலை எழுந்த மன்னன் மோகினியை ஸ்நானம் செய்து பூஜை அறைக்கு வருமாறு உபவாசமிருந்து "பகவத் கதாசிவரணம்" கேட்கலாம் எனக் கூறினான். இவையெல்லாம் தேவையில்லாததொன்று என்று மோகினி கூறினாள். அப்பொழுது மன்னனுக்குத் தான் செய்த தவறு தெரிந்தது. தன் சொல்லை மீறினால் அருமை மைந்தன் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்த வேண்டியிருக்கும் என்றாள் மோகினி. மோகினி வார்த்தையால் சினமுற்ற மன்னன் தன் மைந்தனை வெட்டி உனக்குப் பலியாக்கிவிட்டு ஏகாதசி விரத பங்கம் இல்லாமல் செய்கிறேன். என்று கூறி மன்னன் வாளை வீசவே அது ருக்மாங்கதன் கழுத்தில் பூமாலையாக வீழ்ந்தது. அந்தத் தருணத்தில் மன்னனாகிய தங்களது மன உறுதியைப் பரீட்சிக்கவே தான் மோகினி வடிவாக வந்ததாகவும் கூறி, தர்ம தேவதை மறைந்தார்.

ஏகாதசியில் உபவாசமிருக்காதவர்களுக்கு பாரணை பலன் தராது. துவாதசியில் எத்தனை நாள் இருக்கின்றீர்களோ அதில் எட்டில் ஒரு பாகத்திற்கு "ஹரிவாஸம்" என்று பெயர். அந்த சமயம் பூசை முடித்து உண்பது பகவானுக்கு அன்னமிடுவதாகும். பகல் தூக்கம், எண்ணை ஸ்நானம், ஸ்திரிபோகம், ஏகாதசி விரதத்தின் புனிதத் தன்மையை அகற்றி விடும்.

மகாவிஷ்ணுவிற்கு பிரியமான ஏகாதசி நோன்பை இந்துக்கள் முக்கிய நோன்பாக அனுஷ்டிப்பது வழமை. வளர்பிறையில் ஒன்றும் தேய்பிறையில் ஒன்றும் மாதம் இருமுறை உபவாசமிருப்பது உடல் நலத்திற்கு நன்மை பயப்பதாக அமையும். மார்கழி மாதங்களில் சிறந்த மார்கழித் திங்களில் வரும் வளர்பிறை ஏகாதசி இறையன்பிற்கு முக்கியமானதாக அமையும்.

விஷ்ணு ஆலயங்களில் வைகுண்ட ஏகாதசியன்று திறக்கப்படும் வைகுண்ட வாசல் வழியாக சென்று திருமாலை தரிசனம் செய்தால் பிறப்பு இறப்புக்களிலிருந்து விடுபட்டு வீடுபேற்றை எய்தமுடியுமென்பது நம்பிக்கை.

ஈழத்தில் சரித்திரப் பிரசித்திபெற்ற விஷ்ணு ஆலயங்களான பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயம், வல்லிபுரம் ஸ்ரீ ஆழ்வார் ஆலயம், யாழ்ப்பாணம் வண்ணை வெங்கடேஸ்வர வரதராஜப் பெருமாள் ஆலயம் ஆகியவற்றில் வைகுண்ட ஏகாதசி சுவர்க்க வாசல் திறப்பு என்பன நடைபெற்று வருகின்றன.

-க. லோகேஸ்வரன்-

*வாய்ப்புக்காகக் காத்திருக்காதே; வாய்ப்பை ஏற்படுத்திக்கொள்.*

# வழித்துணை 6

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 செய்வதுவும் சொல்வதுவும் உணர்ச்சிவழி வருவதனால்
எய்துவது அதனால் எவற்குமே ஆகாதாம்
தெய்வத்தை நினைந்தொருகால் ஏற்றவழி மாற்றிடிலோ
உய்வதற்கு அதுவே உகந்தவழி என்றறிவீர்.

02 கூரிய கத்தியதின் கொடூரத்திற்கு அஞ்சாதீர்
நேரிய இறைபக்தி நெஞ்சினிற்கே அஞ்சிடுவீர்
பாரினில் கத்திகள் வேரினையே வெட்டிவிடும்
சீரிய பக்தியோ சிவனடியைக் காட்டிவிடும்.

03 உடல் கெட்டுப்போனதென்று மருத்துவரை நம்பியே
கடல் போலும் மருந்துண்டு நலம் பெறுதல்போல
உளம் கெட்டுப் போனதென்று இறையடியை நம்பியே
வளம்பெற அஞ்சுவதேன் அருமருந்தை அறியீரோ.

04 வெள்ளைச் சேலையொடு வெண்ணீறும் சந்தனமும்
தள்ளிவைக்க வேண்டியோரின் இலட்சினையாய்க் கொள்ளாதீர்
உள்ளத் தெளிவினையும் உறுதியையும் வெளிக்காட்ட
அள்ளிக் கொடுத்திட்ட தெட்சணையாய் எண்ணிடுவீர்.

05 தவறுகளைப் பிறர்தலையில் சூடவே முயற்சிப்போர்
திறமைகளைத் தமதென்று தனித்துவமாய் ஏற்றிடுவர்
அறமதுவும் அதுவன்று அறிவொளியும் அதுவன்று
திறமைகட்டும் தவறுகட்டும் அனைவருமே பொறுப்பாகும்.

06 ஆடையொடு அணிகலத்தைப் பெருமையென்று கருதுபவர்
அன்பினொடு பண்பினையும் பலவீனம் என்றுரைப்பர்
பெருமையென்று கருதுபவை அிரைவழியில் போய்விடவே
பலவீனம் என்பதுவே பின்பெருமைபதாய் மாறிவிடும்.

*வாழ்க்கையின் மகிழ்ச்சி பிறரை மகிழ்விப்பதில்த்தான் இருக்கிறது.*

07 அளந்தளந்து கொடுப்போர்கை அளவுகோல் இருந்தென்ன
விழுந்தெழுந்து நடப்போர்கை ஊன்றுகோல் இருந்தென்ன
வளந்தரவே எழுதுவோர்கை எழுதுகோல்தான் இருந்தென்ன
உளந்திறந்து காட்டுதற்கோர் திறவுகோல்தான் இல்லையெனில்.

08 தேரேறி வந்தார்நீர் திருமகனார் கண்டீரோ
யார்வாழ வேண்டுமென்று நீர்கேட்டீர் சொல்வீரோ
ஊர்வாழ வரம்கேட்டால் வாழ்வுண்டு உமக்கும்தான்
நீர்வாழக் கேட்டிருந்தால் ஊரின்றி நீருண்டோ.

09 ஆணோடு பெண்ணும் அவனியிலே பிறந்ததனால்
மானிடம் இங்கே மலர்ந்ததென்று அர்த்தமல்ல
ஊனோடு உயிரினுள்ளோர் ஆத்மீகம் மலர்ந்தாலே
அன்றிங்கே மானிடம் பிறந்ததென்று அர்த்தமாகும்.

10 விலைமதிக்க முடியாத மானிடத்தை இழந்தபின்பு
சிலைவடித்து என்ன சித்திரங்கள் வரைந்தென்ன
நிலையில்லா வாழ்வென்ற நிலையதனை உணர்ந்துகொண்டு
நிலையான சிலசெய்தால் மானிடமும் நிலைக்காதோ.

---

## வாழ்த்தும் வணக்கமும் சமர்ப்பணம் ஐயா

2000 ஆண்டளவில் விழித்துப் பார்த்தேன் சந்நிதி முருகன் வீதியில் ஆலமரம், பூவரசு மரம் சூழ்ந்த தெய்வீகம் மிளிரும் அந்த ஆச்சிரமம். நினைக்கவும் இனிக்கும். பசிபோக்கும் பணி கண்டேன்; பண்புடை ஒருவனாம் மாண்புமிகு எங்கள் தவப்பேறு திரு மோகனதாஸ் சுவாமிகள் ஏற்றமுடன் ஆங்கிருந்தார். அவர் பாதம் வாழ்த்தவும் வணங்கவும் நினையாதார் மனமென்ன மனமோ; உடலென்ன உடலோ.....

இத்தனை வருடங்கள், எப்படி உங்களால் சாத்தியமானது? கற்றுத் தாருங்கள் நின் பணியை எமக்கெல்லாம். ஏனென்றால் யானும் முருகனை நோக்கி நடக்கவேண்டிய சிறு தூரம் இன்னுமுளதே ஐயா! அதனால்.

பணத்திற்காய் பணியாத திடமான மனவுறுதி, ஓங்கி ஒலிக்கும் உந்தன் குரல் வளம், என் காதில் ரீங்காரமிடும் என்றும், தேவார- திருவாசக வரிகள்- அவை நினைவில் நிற்கும். சொத்துக்கள், தீயதை எதிர்க்கும் மனோதிடம், பாலையும் நீரையும் பிரிக்கும் பக்குவம், வேஷம் போடாத வெளிப்படை, நடிப்புக்கும் வளையாத நாக்கு, ஆற்றல் உள்ளோரை வளைத்து அரங்கேற்றி அரவணைக்கும் உயர்திறன். ஊசி போகும் இடத்தில் உலக்கையை புகுத்தும் பேராற்றல். ஆண்டவா! சந்நிதி முருகா! எப்படி இந்த ஆறடி மனிதனுக்கு அற்புத ஆற்றல் கொடுத்தனை. சொல், யாமும் தொடர்ந்து வருகின்றோம். கற்றுத் தாருங்கள் வித்தைகளை- இன்னும் நீவிர் இனிதே உயருங்கள்- செல்வச்சந்நிதி வேல் என்றும் துணை நிற்கும்- என்றும் வணங்குகின்றேன், ஆண்டவனை பணிவுடனே யான்.

-கு. சிவபாலராஜா

அழகான உருவத்தைவிட அழகான நடத்தையே மிக நல்லது.

# தமிழ்மொழியின் அருமை, பெருமையை அறிந்து உணர்ந்து வாழ்ந்தால் எமது கலை, கலாசாரம் அழியாதென்பது உறுதி

– திரு பு. கதிரித்தம்பி அவர்கள் –

உலகில் பல மொழிகள் உள்ளன. அவற்றுள் தமிழ்மொழி தனக்கென ஒரு தனி இடம் வகித்து, ஆதிமொழியாகவும், தெய்வீக மொழியாகவும் விளங்குகின்றது. ஆதியும் அந்தமுமில்லாத இறைவனைப்போல், தமிழ் மொழியும் தொன்மை வாய்ந்ததும் இறைவனால் ஆக்கப்பட்ட மொழியாகவும் விளங்கும் சிறப்பைக் காண்கின்றோம். எனவே தமிழ் மக்களாகிய நாம் அதன் அருமையையும் பெருமையையும் அறிந்து உணர்ந்து வாழ்ந்தால் எமது கலை, கலாசாரம் அழியாதென்பதை உறுதிபடக் கூறலாம்.

உலகத்திலுள்ள எல்லா மொழிகளுக்கும் எழுத்தின் எண்ணிக்கை உண்டு. உலகப் பொதுமொழியாகிய ஆங்கிலம் இருபத்தாறு எழுத்துக்களைக் கொண்டு விளங்குகின்றது. ஆனால் தமிழ்மொழி இருநூற்று நாற்பத்தேழு எழுத்துக்களைக் கொண்டு இலக்கண மரபுகளைத் தன்னகத்தே உள்ளடக்கி செம்மொழியாகத் திகழ்வது கண்டு தமிழ் மக்களாகிய நாம் பெருமைப்படலாம். "அ" என்னும் அகரத்தை முதலாகக் கொண்டும், அகரம் எல்லா எழுத்துக்களிலும் கலந்திருப்பதை வள்ளுவப் பெருந்தகை,

> "அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
> பகவன் முதற்றே யுலகு"

என அருளியுள்ளார். திருவள்ளுவர் வகுத்த திருமறை வேதமாகிய திருக்குறளும், சங்கப்பலகையில் வைத்து, தெய்வீகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டதை உலகம் அறியும். தமிழை வளர்க்க ஆதிகாலத்தில் தமிழ்நாட்டில் முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கமென மூன்று சங்கங்கள் இருந்தன. பிற்காலத்தில் கடைச்சங்கம் இருந்து, புலவர்கள் இயற்றும் நூல்களை சங்கப்பலகையில் வைத்து இறை ஆசியுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அக்காலத்தில் தமிழ்நாட்டை ஆட்சிசெய்த சேரர், சோழர், பாண்டியர் ஆகிய மன்னர்கள் தமிழை வளர்க்க, புலவர்களுக்குப் பொன்னும், பொருளும் கொடுத்து ஆதரித்தனர். இதனால் புலவர்கள் நூல்களைக் கசடறக் கற்று, இலக்கண வழுவின்றி நூல்களை ஆக்கினர். அரச சபையில் நூல்களை ஆராய்ந்தும் அரசனுக்கு ஆலோசனை கூறும் மந்திரிமார் போல் இருந்தனர். தெய்வீக மொழியாகிய தமிழ்மொழியை உலகம் அறிய வைக்க இறைவன் திருஞானசம்பந்தரை சீர்காழியில் படைத்தார். மூன்று வயதுடைய திருஞானசம்பந்தருக்கு தோணியப்பர் காட்சிகொடுத்து "தோடுடைய செவியன் விடையேறியோர்" என்னும் முதலடியுடைய தேவாரத்தையும் பாட வைத்தார். நாம் இங்கு மூன்று வயது உடைய குழந்தைகளை பாலர் வகுப்புக்கு அனுப்பி வைக்கின்றோம். ஆனால் மூன்று வயதில் இலக்கண வழுவின்றி சம்பந்தர் பாடினார் என்றால் அது இறை சக்தியே என்று உணரமுடிகின்றது. இறைவன் தமிழின் பெருமையையும், அருமையையும் அறியவைக்க ஞானசம்பந்தர் ஊடாக அவர் உள்நின்று பாட வைத்தார். அதுமட்டுமன்றி சமணருடன் அனல்வாதம், புனல்வாதம் செய்யவைத்து சைவ சமயத்தின் அருமையையும் பெருமையையும் அறிய வைத்தார்.

ஆகவே தமிழர்களின் இரு கண்களாக சைவமும் தமிழும் விளங்குவது மிகவும் பெருமையுடைத்து.

*தன்னை அதிக புத்திசாலியாக எண்ணுவதே மனிதனிடம் உள்ள மிகப்பெரிய பலவீனம்.*

தமிழ்மொழியை செம்மொழியென்றும், தொன்மொழியென்றும், தெய்வீக மொழி என்றும் இன்று ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்டது தமிழ் நாடென" பாரதியார் பாடியுள்ளார். தமிழ்மொழியை உலகெங்கும் அறிய வைத்த திருக்குறளின் பெருமையை என்னவென்று கூறுவோம். தமிழ் மொழியில் இன்று கல்வி, வைத்தியம், விஞ்ஞானம், வரலாறு, கலாசாரம், இறை வழிபாடு, தொழில் வகைகள், சாஸ்திரங்கள், வாழ்வியல் விதிகள், ஒழுக்கநெறிகள், நடனம், சங்கீதம் போன்றன வெளியிடப்படுகின்றன. அவற்றை மாணவர்களும், மற்றையோரும் படித்துப் பயன்பெறலாம். தமிழர்கள் எப்படி தற்கால உலகில் வாழ வேண்டுமென்பதையும் கலை, கலாசாரம் எப்படிப் பேண வேண்டுமென்பதையும் அறிஞர்கள் வெளியிடுகின்றனர். கையில் நெய் இருக்க அதை உணராது ஊர்தேடி தமிழ் மக்கள் உலைகின்றனரென்று பெரியோர் கூறுவதை செவி மடுத்திலர். போர் சூழலுக்குப் பின்னர், அநேக தமிழர்கள் வெளிநாடு சென்று வாழ்கின்றனர். உழைப்புக்காக சென்ற அவர்கள் வெளிநாட்டுக் கலாசாரத்தில் மூழ்கிவிடாது தம் மொழியாகிய தமிழையும் கலாசாரத்தையும் கடைப்பிடித்து, தமிழின் அருமையையும் பெருமையையும் வெளிநாட்டவர் அறியும் படியான செயல்களில் ஈடுபட்டிருப்பது நிம்மதி தருகிறது. வெளிநாட்டவர் அநேகர் எமது மொழியின் சிறப்பை அறிந்து தமிழ் கற்கத் தலைப்பட்டுள்ளனர். வெளிநாட்டவர் எமது தமிழின் திறமையை அறிந்து, தமிழ் கற்று, தமிழ்மூலம் நூல்கள் வெளியிட்டுள்ளனர் என்பதை நாம் அறிவோம். தாய் மொழியாகிய தமிழை நன்கு கற்றவர்கள், பிற மொழிகளையும் விரைவாகக் கற்று முன்னேறி உள்ளனர். இதற்கு உதாரணமாக தனிநாயக அடிகள் பல மொழிகள் கற்று, பேராசானாக விளங்கியதை எல்லோரும் அறிவர். எனவே தமிழ் மொழியின் ஆளுமையையும், பெருமையையும் நன்கு உணர்ந்து வாழ்ந்தால் எமது கலை, கலாசாரம் மேம்படுமென்பது வெள்ளிடைமலை.

ஒரு நாட்டின் இரு கண்களாக விளங்குவன ஆலயமும், பாடசாலையுமாகும். இவை மூலம் எமது கலை கலாசாரங்களைப் பேணிக் காக்கலாம். இதன் முன்னோடியாக பெற்றோர்கள் தங்கள் இல்லங்களில் குழந்தைகளுக்கு, தெய்வீக ஒழுக்கத்தையும், பெரியோர்களைப் பேணுதலையும், வாழ்வின் நல்லொழுக்கத்தையும் பழக வழிசமைக்க வேண்டும். இதைத் தொடர்ந்து பாடசாலைகளிலும் கலை, கலாசார விழுமியங்களைக் கடைப்பிடிப்பதற்கு வழிசமைக்க வேண்டும்.

எமது கலை, கலாசாரத்தைக் காக்கத் தொண்டைமானாறு சந்நிதியான் இருக்கின்றான். அவனை அனுதினம் வழிபட வினை நீங்கும். தன்னிடம் வரும் அடியார்களுக்கு அருள் புரிந்து, ஆறுதல் அடைந்து செல்ல, சந்நிதியான் ஆச்சிரமத்தை தன்னகத்தே அமைத்து, நல்ல ஆசானையும் ஆக்கி, தன் நேரடிப் பார்வையில் வைத்துள்ளான். சந்நிதியான் எண்ணப்படி கலை, கலாசார நிகழ்வுகளையும் வெள்ளிக்கிழமைதோறும் ஆச்சிரமத்தில் பகல் பத்துமணி தொடக்கம் பன்னிரெண்டு மணிவரை நடாத்தி, அதன்பின் இறைவன் திருப்பாடல்கள் பாடி, அன்னம் பாலிக்கும் நிகழ்வை மிகச் சிறப்பாகவும், கண்ணியமாகவும் நடத்த செல்வச்சந்நிதியான் வழி சமைத்துக் கொடுத்துள்ளான். இதுபோல் அன்னம் பாலிக்கும் சிறப்பை எங்கும் கண்டிலோம். இவற்றுக்கெல்லாம் சந்நிதியானே துணை. எனவே மானுடமாகிய நாமும் சந்நிதியான் ஆலயம் சென்று வினை நீங்கப்பெற்று, கலை கலாசாரங்களையும் அழியவிடாது காப்பாற்றி முருகன் திருவடி சேர்வோம்.

*நீ பட்ட துன்பத்தைவிட அதில் நீ பெற்ற அனுபவமே சிறந்தது.*

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| திரு வெற்றிவேல் குடும்பம், திரு நடராசா குடும்பம் | கனடா | 3000. 00 |
| வி. செல்வத்தரஸ்வதி | உரும்பராய் 1மூடை அரிசி | 2000. 00 |
| சிவபாலன் செந்தூரன் | கதிரிப்பாய் | 15000. 00 |
| கா. சிவஞானசுந்தரம் | நெல்லியடி | 3000. 00 |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| மகேந்திரன் துஷ்யந்தன் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| ச. ஞானசம்பந்தன் | கரணவாய் தெற்கு | 5000. 00 |
| ப. நிரஞ்சன் | கரணவாய் தெற்கு | 5000. 00 |
| ஆ. சிவராசலிங்கம், ஜெ. கந்தையா | பிரான்ஸ் | 100 யூரோ |
| C.R. கனகலிங்கம் குடும்பம் | வெள்ளவத்தை | 5000. 00 |
| கோகுலவாசன் சதீஜா | சரசாலை | 1000. 00 |
| சு. சாரதா | கனடா | 1000. 00 |
| சு. சோபிகா | கனடா | 1000. 00 |
| திரு மகாலிங்கம் | வத்தளை | 5000. 00 |
| S. விதுஷனசர்மா | துன்னாலை | 2000. 00 |
| திருமதி தா. கணாதீபன் | தெகிவளை | 10000. 00 |
| Dr S. குகதாசன் | கோண்டாவில் | 10000. 00 |
| ப. செந்தில்குமரன் | நல்லூர் | 1000. 00 |
| ந. முகுந்தன் | வதிரி | 15000. 00 |
| T. நந்தன் | கனடா | 5000. 00 |
| ம. துஸ்யந்தன் | யாழ்ப்பாணம் | 15000. 00 |
| முருகன் அடியார் | கந்தர்மடம் | 3000. 00 |
| இ. திருக்குமரன் | மானிப்பாய் | 1000. 00 |
| Dr உமாபதிசிவம் | கரவெட்டி | 1000. 00 |
| ச. சாய்சங்கர் | உடுவில் | 1000. 00 |
| இ. ஸ்ரீகரன் நினைவாக | வட்டுக்கோட்டை | 2000. 00 |
| ச. நிரேஷ் | சிலாபம் | 2000. 00 |
| திருமதி சரஸ்வதி தியாகராஜா | மல்லாகம் | 5000. 00 |
| M. விநாயகமூர்த்தி குடும்பம் | மல்லாகம் | 1மூடை அரிசி |
| M. கிருஸ்ணம்மா | கைதடி | 1000. 00 |
| கா. பரநிருபசிங்கம் | இடைக்காடு | 1500. 00 |
| திரு ரத்தினராசா குடும்பம், வல்லிபுரம் குடும்பம் | கனடா | 50 டொலர் |
| A. முரளிதரன் (சம்பத்வங்கி) | கொக்குவில் | 5000. 00 |

| | | |
|---|---|---|
| பா. ராகுலன் | காரைநகர் | 1000. 00 |
| க. கபிஷன் | பிரான்ஸ் | 5000. 00 |
| S. மதன் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| K. பாலசுப்பிரமணியம் | மானிப்பாய் | 2000. 00 |
| ச. ஆகாஷ் | கனடா | 10000. 00 |
| M. ரிஷானி | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| சி. சத்தியநாதன் | அச்சுவேலி | 3000. 00 |
| அ. தர்ஷிகன் | குடத்தனை | 5000. 00 |
| வி. சுமணன் தம்பசிட்டி | பருத்தித்துறை | 10000. 00 |
| வி. சுதேசன் | பருத்தித்துறை | 1000. 00 |
| திரு ராதாகாந்தன் | வெள்ளவத்தை | 1000. 00 |
| ஜெ. திவ்வியா | அவுஸ்திரேலியா | 10000. 00 |
| ஸ்ரீ மாதவன் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| சி. குணரட்ணம் குடும்பம் | மானிப்பாய் | 10000. 00 |
| ஜெ. தனுஷாந் | மந்திகை | 5000. 00 |
| சு. அன்னலெட்சுமி | மானிப்பாய் | 5000. 00 |
| நாகேந்திரம் குடும்பம் | மூளாய் தெற்கு | 2000. 00 |
| வைஷ்ணவி பூங்கா | நெல்லியடி | 2000. 00 |
| தி. ரவீந்திரநாதன் அதிபர் | கட்டைப்பிராய் | 1000. 00 |
| க. அஜிதா | மட்டுவில் வடக்கு | 2000. 00 |
| திரு பூபாலசிங்கம் குடும்பம் | யாழ்ப்பாணம் | 7000. 00 |
| இ. சிவராஜா | கரவெட்டி (வைத்திய பணிக்காக) | 10000. 00 |
| K. பார்த்தீபன் | மணகும்பான் | 1000. 00 |
| மதன் மது | வல்வெட்டித்துறை | 10000. 00 |
| சி. சுதாகரன் | சுண்ணாகம் | 3மூடை அரிசி |
| க. விஜயநாதன் | இணுவில் | 1புட்டி அரிசி |
| க. சரவணபவன் | சாவகச்சேரி | 1000. 00 |
| S. கணேசன் | வட்டுக்கோட்டை | 5000. 00 |
| அஷ்வரி சுரேந்திரன் | கனடா | 10000. 00 |
| மு. இளங்கீரன் | சுண்ணாகம் | 2500. 00 |
| ரூ. விஜிதா | சுண்ணாகம் | 2500. 00 |
| S. ராஜேஸ்வரி | பத்தமேனி | 1000. 00 |
| ஐ. தூயவன் | வல்வெட்டித்துறை | 2000. 00 |
| செ. கரீந்திரன் | காரைநகர் | 2000. 00 |
| இ. நடராசா நினைவாக | நாச்சிமார் கோயிலடி | 5000. 00 |
| பொ. காந்தராசா | அச்சுவேலி | 5000. 00 |
| சி. செந்தூரன் | மீசாலை | 5000. 00 |
| க. ஸ்ரீபதி | கோண்டாவில் | 1000. 00 |

(தொடரும்...

# ஈதல் அறம்

– திரு ஆர்.வீ. கந்தசுவாமி அவர்கள் –

"செல்வத்தின் பயனே ஈதல்" என்கின்றது புறநானூறு. செல்வந்தர்களிடம் இருக்கும் செல்வம் பலருக்கு உதவும்போதுதான் அது பயனுடையதாகின்றது.

பணம் நம்மிடம் இருப்பதாலே அது நமக்கே உரிமையானது என்று நாம் நினைத்து விடக் கூடாது. மாறாக ஆண்டவன் அந்தப் பணத்தைப் பிறர் தொண்டிற்காக நம்மிடம் கொடுத்து வைத்திருக்கின்றான். அந்தப் பணத்திற்கு அறங்காவலனாக இறைவன் நம்மை நியமித்திருக்கிறான் என்று எண்ணி பிறர் நலனுக்குப் பயன்படுத்த வேண்டும்.

பிறருக்கு நாம் உதவும்போதுதான் எமது வாழ்க்கை பயனுடையதாகவும், மகிழ்ச்சிக்குரியதாகவும் ஆகின்றது. கல் நெஞ்சம் கொண்டவர்கள் ஈகைக்குணம் இல்லாமல் இருப்பார்கள்.

ஏழை எளியவர்களுக்கு உதவாத பணக்காரனுக்கு வாழ்க்கையில் மன நிம்மதி இருக்காது. ஆன்ம ஈடேற்றமும் இருக்காது. ஏழை எளியவர்கட்கும், இல்லை என்று வந்தவர்களுக்கும் கொடுத்து உதவுவது (ஈகை) என்பது ஓர் அறச்செயல் மட்டுமல்ல அது ஒரு பெருந் தவமுமாகும்.

பிறரால் கைவிடப்பட்டவர்கள், விருந்தினர்கள், வறியவர்கள், துணையற்ற சிறுவர்கள், சான்றோர்கள் ஆகியோருக்கு உணவு அளிப்பவன் மறுமையில் அரசனாகப் பிறப்பான் என்கின்றது பதிணெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான ஏலாதி.

"ஈயாத மனிதரை ஏன் படைத்தாய் கச்சியேகம்பனே" என வினவுகின்றார் பட்டினத்தடிகளார். "ஈதல் அறம்" என்பதற்குத் "தீவினை விட்டு விலகல்" என்று ஔவையாரின் அறத்திற்கு விளக்கம் கூறுவர். அதாவது பொருள் ஈதலால் தீவினை விலகும் என்பதாகும்.

கடவுளுக்குச் செலவு செய்ய விரும்புகிறவர்கள், ஏழைகளுக்கு உணவு இடுவதன் மூலம், அந்தப் பணத்தைச் செலவிடுங்கள் என்று வள்ளலார் குறிப்பிட்டிருக்கின்றார்.

"ஓர் அரிசியையாவது தானம்" செய்யுங்கள்" என்று நாலடியார் கூறுகிறது. "தானம் செய்வதில் தீவிரமாக இருங்கள்" என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்.

எவரேனும் நம்மிடம் எதையேனும் கேட்டு வரும்போது அவர்களுக்கு நாம் கொடுத்து உதவினால் நாம் பிறரிடம் சென்று எதையேனும் கேட்கும் நிலை எமக்கு வராது.

தானம் தர்மம் செய்வதற்கு அளவு கோல் இல்லை. அதைச் சிறிதாகச் செய்தாலும் பெரும் நன்மைகளைத் தரும்.

"இறைக்கின்ற ஊற்றே சுரக்கும்" என்பதற்கேற்ப ஈகைக் குணத்தால் செல்வம் பெருகும், வளரும். நிலையற்ற மனித உடல் உள்ளபோதே நாம் இயன்றவரையில் நிலையான அறச் செயல்களைச் செய்ய வேண்டும். "அறம் செய்ய விரும்பு" என்றும் "ஐயம் இட்டு உண்" என்றும் ஆத்திசூடியில் ஔவையார் வலியுறுத்திக் கூறியுள்ளார். இதனைத் தான், ஒவ்வொருவரும் ஏழைகளின் கொடிய பசிப்பிணி நோயைப் போக்க வேண்டும். அதுவே பொருளுடையவன் அப்பொருளைத்

தனக்குப் பிற்காலத்தில் உதவுமாறு சேமித்து வைக்கும் இடமாகும் என்கிறார் வள்ளுவப் பெருமான்.

"அற்றார் அழிபசிதீர்த்தல் அஃது ஒருவன்
பெற்றான் பொருள் வைப்புழி"

அப்பர் சுவாமிகள் 4ம் திருமுறையில் திருநேரிசை என்னும் பதிகத்தில், இரப்பவர்க்கு கொடுக்க வைத்தார். கொடுப்பவர்க்கு அருளும் கொடுத்தார். வஞ்சகர்கள் இரக்கம் இல்லாதவர்கட்கு, ஈயாதவர்கட்கு எல்லாம் பொல்லாத நரகங்களைக் கொடுத்தார் என்று கூறியமை நோக்கத்தக்கது. ஆனபடியால் நாங்களும் எங்களால் இயன்ற தான தருமம் செய்து பேரின்ப முத்தியை அடைவோமாக.

## கல்வியும் ஆற்றலும்

சந்நிதியான் ஆச்சிரமத்தை வழிப்படுத்தி நெறிப்படுத்திக் கொண்டிருக்கும் மோகனதாஸ் சுவாமிகள் கலாநிதிப் பட்டம் பெற்றமையை கௌரவிக்கும் முகமாக இச்சிறிய கட்டுரை வரையப்படுகின்றது.

ஆற்றல் (கலை) என்பது கல்வியல்ல. ஆனால் கல்வியால் விருத்தி செய்யக்கூடியதாக பரிணாமம் அடைந்துள்ளது. ஆனாலும் இன்றும் பல கலைகள் எமது பாரம்பரியத்தில் இருக்கின்றது. உதாரணமாக கட்டிடக்கலை, மருத்துவக்கலை ஆக்க இலக்கியங்கள் மற்றும் ஆளுமை ஆற்றல்கள் இன்னும் பல, எவ்வாறாயினும் ஆற்றல் என்பது அறிவுடைமை, அதாவது அறிவு சார்புச் சொத்து, மேலும் இது செயற்கரிய செயல்களின் பெறுபேறு. மனித இனத்துக்கே உரிய தனித்துவம். அதாவது மனிதன் தன்னைச் சூழவுள்ள பல விடயங்களை அறிவார்ந்த ஆற்றல்களால் தீர்மானிக்கும் அல்லது பங்களிப்புச் செய்யும் சக்தியைக்கொண்டு திகழ்கின்றமை குறிப்பிடக்கூடியதாகும்.

இன்று நவீன கல்விமுறை ஆற்றல்களை உச்சப் பெறுபேறாகக்கொண்டு அதை அடைவதற்கு கல்வியைப் பல்வேறு படிமுறைகளாக வகுத்தும் உள்ளது.

இங்கே நாம் ஆற்றலை நுண்ணறிவுத்திறன் எனக்கொண்டு பார்க்கும்போது மனித சேவைகளும் அதற்குள் உள்ளடங்கும். அதாவது ஒரு மனித சமூகத்தின் இருப்பை அதன் மொழி மத பண்பாட்டு விழுமியங்களே தீர்மானிக்கின்றது. ஆனால் கடவுள் மறுப்புக் கொள்கைகளாலும் மதமாற்றங்களாலும் எமது ஒற்றுமையும் ஒற்றுமைக்கான நோக்கமும் சீர்குலைந்து போகின்றமையை தடுக்கின்ற ஒரு நுண்ணறிவுச் சேவையாக நாம் மோகனதாஸ் சுவாமிகள் பெற்றுக்கொண்ட கலாநிதிப் பட்டத்தைக் கருதமுடியும்.

இந்தவகையில் அறிவுத்தானம், அன்னதானம் மற்றும் பல்வேறு சேவைகளை ஆற்றுவதன் வாயிலாக இன்றைய காலத்தின் தேவை நிறைவு செய்யப்படுகின்றது.

-இராமலிங்கம் ஜெயபாலன்-

# திருமுறை பாடிப் பணிவோம்

– திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள் –

சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய தேவாரங்கள் ஏழாம் திருமுறையாக வகுக்கப்பட்டுள்ளன. 1026 தேவாரங்களை நூறு பதிகங்களாக ஏழாம் திருமுறை தன்னகத்தே கொண்டுள்ளது. சுந்தரரது பக்திமார்க்கம் வித்தியாசமானது. இறைவனைத் தன் தோழனாகக் கருதி பக்தி செய்தவர் அவர். அவரது அந்த மனோபாவம் சுவாமிகளின் தேவாரங்களில் பெரும்பாலும் விரவிக் கிடப்பதைக் காணலாம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தனக்குப் பொருள் தருமாறு திருவோணக்காந்தன் தளி என்னும் திருத்தலத்தில் பதிகொண்டிருக்கும் ஈசனிடம் வேண்டிப் பாடிய பதிகத்தைப் பாராயணம் செய்பவர்களுக்கு வேண்டிய பொருள் கிடைக்கும். அப்பதிகத்தைப் பாடி சுந்தரரும் நிதி பெற்றுக் கொண்டார். அவர் பாடியருளிய பதிகத்தின் ஆரம்பத்தில் அமைந்த தேவாரம் வருமாறு:

நெய்யும் பாலுந் தயிருங்கொண்டு
நித்தல் பூசனை செய்ய லுற்றார்
கையி லொன்றுங் காண மில்லைக்
கழலடி தொழு துய்யி னல்லால்
ஐவர் கொண்டிங்கு ஆட்ட வாடி
ஆழ் குழிப்பட் டழுந்து வேனுக்கு
உய்யுமா றொன் றருளிச் செய்யீர்
ஓண காந்தன் தளியுளீரே.

ஓணக்காந்தன் தளியிலுள்ள ஈசனே, தினமும் நெய்யும் பாலும் தயிருங்கொண்டு பூசை செய்பவரின் கையில் ஒன்றையும் காணவில்லை. நின் திருவடிகளை வணங்கி உய்ய இயலாவிட்டால் ஐம்புலன்களைக் கொண்டு ஆட்டும்போது ஆடி ஆழமான குழியில் வீழ்ந்து அழுந்தும் நான் உய்வதற்கு எனக்கு ஒன்று அருளிச் செய்யுங்கள் என்னும் பொருள் கொண்ட தேவாரத்தில் பணிவைவிட நட்புரிமையோடு கோரி நிற்கும் தொனிதான் தோன்றுகிறது. மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது, நிதி வேண்டி நிற்பதாகத் தென்பட்டாலும் ஆழ்ந்து நோக்கும்போது ஐம்புலன்களும் ஆட்ட, அவற்றின் வயப்பட்டு ஆடி படுகுழியில் வீழ்ந்தவன் உய்ய என்ன தேவை என்று அறிவு கேட்கும் வினா மனதுள் எழுகிறது. இந்நிலையில் பொன்னும் பொருளும் உய்விக்க உதவா. இறையருள் ஒன்றே உய்யவழி செய்யும். அதனையே ஆரூரர் வேண்டி நிற்கின்றார் என்றே தோன்றுகிறது. இத்தேவாரத்தின் பண் இந்தளம்.

நம்பியாரூரனில் குண்டையூர்க்கிழார் மிகுந்த அன்பு கொண்டவர். ஆரூரனுக்கு போதியளவு நெல் கொடுக்கும் வழமையுடையவர். பஞ்சமொன்று ஏற்பட்டதால் கொடுப்பதற்கு நெல் இல்லாது கிழார் தவித்தார். மனம் வருந்தி இறைவனிடம் அவர் முறையிட்டார். ஆரூரனுக்கு நெல் வேண்டும் என்றதுமே ஆண்டவனும் அள்ளிக் கொடுத்தார். "நெல் மலையாகக் குவிந்து கிடக்கிறது. கொண்டு செல்லுங்கள்" எனச் சுந்தரருக்குச் செய்தியனுப்பினார் கிழார். "நெல்லை எப்படிக் கொண்டு செல்வது?" "இயலாது" என்று விட்டுவிடவும்

*நாம் ரசித்துப் படிக்காத புத்தகங்களால் நமக்கு நல்ல பலன் கிடைப்பதில்லை.*

முடியாது. உணவுக்கு நெல் இல்லையே என்று மனைவி வருந்துகிறாள். அவள் கவலையுறா மல் நெல்லைக் கொண்டுவந்து தரக் கட்டளையிடு என்று தன் தோழனிடம் கேட்கின்றார் சுந்தரர்.

நீள நினைந்தடியேன் உனை
நித்தலுங் கைதொழுவேன்
வாளன கண்மடவா ளவள்
வாடி வருந்தாமே
கோளிலி எம்பெருமான் குண்டை
யூர்ச்சில நெல்லுப் பெற்றேன்
ஆளிலை எம்பெருமான் அவை
அட்டித் தரப்பணியே.

திருக்கோளிலியில் வீற்றிருக்கும் என் அப்பனே, நான் உன்னை தினந்தோறும் நினைத்து கைகளால் வணங்குவேன். நின்னை நான் சிறுபொழுது நினைத்து வணங்கிவிட்டிருப்பதில்லை. நீண்டநேரம் நீள நினைத்து வழிபடுவேன். வாளைப் போன்ற கண்களையுடைய என் இல் லாள் வாட்டமுற்று வருந்தாமல் குண்டையூரில் சிறிது நெல்லுப் பெற்றேன். ஆட்கள் கிடைக்கவில்லை. நெல்லை இங்கே கொண்டுவரக் கட்டளையிடுவாயாக என்ற பொருள் கொண்ட தேவாரத்திலும் தோழமையான ஏவலைக் காணமுடிகிறது. அத்துடன் தினமும் இத்தேவாரத்தைப் பாடும்போது எமது மனங்களில் நீள நினைந்து நித்தலும் கைதொழ வேண்டும் என்பதும் பதிவாகும். இதன் பண் நட்டராகம்.

நமது நாட்டிலுள்ள திருக்கேதீஸ்வரத்தில் உறையும் பெருமான்மீது பாடியுள்ள பதிகம் அவனை நினைந்து பாட ஏற்றது, அப்பதிகத்தின் முதலாவது தேவாரத்தைப் பார்ப்போம். இதன் பண் நட்டபாடை.

நத்தார்படை ஞானன்பசு ஏறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானை உரிபோர்த்த மணவாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தார்எலும் பணிவான்திருக் கேதீச்சரத் தானே.

விருப்பம் (பக்தி) நிறைந்த பூதப்படைகளையுடைய ஞானசொருபனும் இடபத்தில் ஏறுகின்றவனும் ஒழுகி நனையச் செய்வதும் மயக்கத்தைத் தருவதுமான மதமுடைய யானையின் தோலைப் போர்த்த மணவாளக் கோலத்தினனுமாகிய பக்தர்களாகிய அடியவர்கள் வணங்கும் பாலாவியின் கரையிலுள்ள திருக்கேதீஸ்வரத்தில் வீற்றிருப்பவன் இறந்தவர்களது எலும்பை அணிந்தவனாகக் காணப்படுகிறான் என்னும் பொருள் பொருந்தியது இத்தேவாரம்.

முருகப் பெருமான் ஔவைப்பிராட்டியிடம் பெரியது எது என்று கேட்டபோது "தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே" என்றார். ஏனென்றால் இறைவன் தொண்டர் உள்ளத்துள் ஒடுங்கி விடுகிறாரே எனக் காரணமுங் கூறினார். இறை வழிபாட்டின்போது தொண்டர்களையும் வணங்கி வழிபடுவது சாலச் சிறந்ததாகும்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தேவாரம் என்றதுமே மனதில் தோன்றுகின்றவற்றில் ஒன்று திருத்தொண்டர்த்தொகை. "அந்தணாளன் தம்" எனத் தொடங்கும் பதிகம் போன்றவை யும் இறையடியார்களது பெருமை பேசுகின்றன. அதேவேளை இறைவனே தன் அடியார்கள்

*பலவீனம் இடையறாத சித்திரவதையாகவும், துன்பமாகவும் அமைகின்றது.*

பற்றிப் பாடுமாறு சுந்தரரைக் கேட்டு அவர் பாடியது திருத்தொண்டர்த் தொகை. "எவ்வண்ணம் பாடுவது" எனச் சுவாமிகள் தயங்கி நின்றபோது இறைவனே "தில்லைவாழ் அந்தணர்" என அடியெடுத்துக் கொடுக்க அறுபத்திரண்டு நாயன்மார்கள் பற்றி அவர் பாடியருளினார். அவர்களது பெருமைகூறி அவர்களுக்கு அடியேன் அடியேன் என்று மீண்டும் மீண்டும் கூறி பாடப்பட்ட திருத்தொண்டர்த்தொகையைப் பாடும்போது ஒவ்வொரு நாயன்மாராக எம் மனக்கண் முன் தோன்ற, அவர்களது புகழ்மணம் மனதுள் பரவ, அவர்களுக்கு அடியாராகி, அவர்களை வழிபடுவோம். தனியடியார்கள் அறுபத்திரண்டுபேருடன் தொகையடியார் ஒன்பது பேரையும் சேர்த்தே அவர் பாடியுள்ளார். இவர்களுடன் சுந்தரமூர்த்தி நாயனாரும் எம்மால் பூசிக்கப்படுவார். இதன் பண் கொல்லிக்கௌவாணம். இதில் முதலாவது தேவாரத்தை இங்கெடுத்துப் பார்ப்போம்.

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர்க் கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

தில்லைவாழ் அந்தணர்களுக்கு அடியேன் என ஆரம்பித்து ஏனைய அறுபத்திரண்டு பேரையும் இத்தேவாரத்தில் உள்ளதைப் போன்றே ஓரடியில் ஒரு நாயனாரைக் குறிப்பிட்டு அவருக்கு அடியேன் என்று பாடியிருப்பதைக் காணலாம்.

இங்கு எடுத்தெழுதப்பட்ட தேவாரங்களைத்தான் பாடி வழிபடவேண்டுமென்றில்லை. மனம் விரும்பும் தேவாரம் எதனையும் பாடி வணங்கலாம். அதன் பொருளை உணர்ந்து பாடும்போது மனம் இறைவனுடன் எளிதில் ஐக்கியப்படும். தினந்தோறும் திருமுறையை ஓதுவதே அத்தியாவசியமானது.

**திருடனின் ஆணவம்**

தன்னை ஏமாற்ற முடியாது என ஆணவம் கொண்டிருந்தான் திருடன் ஒருவன். ஒருநாள் கொள்ளையடித்துவிட்டு வந்த அவன், களைத்துப் போயிருந்தான். வழியில் தென்பட்ட குளக்கரையில் நின்றான். திருடனை அடிக்கடி காட்டுப் பாதையில், நோட்டமிட்ட சிறுவன் ஒருவன், குளத்தில் ஏதோ தேடுவதுபோல நடித்தான். திருடன், "தம்பி... என்ன தேடுகிறாய்?" எனக் கேட்டான்.

"என் புது மோதிரம் நீரில் விழுந்துவிட்டது" என்று அழுதான். அதை நம்பிய திருடன், அபகரிக்கத் திட்டமிட்டான். "தம்பி... கவலைப்படாதே! நானே தேடித் தருகிறேன்" என்று சொல்லி, தன்னிடமுள்ள நகைப் பொட்டலத்தை சிறுவனிடம் கொடுத்துவிட்டு, தேட ஆரம்பித்தான். கண் சிமிட்டும் நேரத்துக்குள் திருடன் காட்டுக்குள் ஓடி மறைந்தான்.

எங்கு தேடியும் சிறுவனைக் காணவில்லை. "வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு" என்பதை உணர்ந்த திருடனின் ஆணவம் மறைந்தது.

# மகான்களின் மகிமை

– திருமதி த. வசந்தகுமாரி அவர்கள் –

மகான்களின் மகிமைபற்றி நாம் எவ்வளவோ அற்புதங்களை அறிந்தும் உணர்ந்தும் இருக்கின்றோம். இவ்வுண்மைகளை ஞானச்சுடர் ஊடாக அனுபவப் பகிர்வாக மேற்கொள்ளும்பொழுது திசைமாறிச் செல்லும் எமது சமுகத்திற்கு ஒரு விழிப்புணர்வாக இருக்கும் என்பது அடியேனின் கருத்து. இதற்கமைவாக ஒவ்வொருவர் வாழ்வியலிலும் ஆன்மீக முன்னேற்றத்திற்கு தமக்கு ஏற்றபடி ஒரு குருவை இறைவன் தெரியப்படுத்துகின்றான்.

என்னுடைய இளமைக் காலத்தில் யோகர் சுவாமியின் நற்சிந்தனைப் புத்தகம் எனது பூஜையறையில் இருக்கும். இனம் புரியாத ஓர் பக்தி எனக்கு அவர்மீது உண்டு. அவ்வாறே சித்தர்களின் வரலாறுகள் படிப்பதும் கேட்பதும் மிகவும் பிடிக்கும். சந்நிதியான் ஆச்சிரமத்துடன் ஏற்பட்ட பிணைப்பிற்கு இதுவும் ஓர் காரணம். ஏனெனில் சுவாமி பூஜையில் ரமணமகரிஷி, யோகர் சுவாமி, முருகேசு சுவாமி, மயில்வாகனம் சுவாமி இவர்களுக்குத் தினமும் பூஜை வழிபாடு இயற்றுகின்ற மோகன்சாமி இவர்களது படிநிலைகளில் மனித வடிவில் நாம் வழிபட்டு போற்றக்கூடிய மகானாகத் திகழ்கின்றார். இவரே எனது குருநாதனாக சந்நிதியான் காட்டிநிற்க எந்த ஒரு கஷ்டமான சூழ்நிலையிலும் எனது பிரச்சினை தீர்க்க முடியாத நிலையில் அவரிடம் முறையிடுவேன். நாம் கூறிவிட்டு வீடு திரும்புமுன் பிரச்சினைகளும் தீர்ந்துவிடும்.

2016ஆம் ஆண்டு கந்தசஷ்டி உற்சவத்தின்பொழுது எனது நண்பி ஒருத்தி வாகன விபத்தில் அகால மரணம் அடைந்திருந்தார். அவரது ஆத்மா 2017 கந்தசஷ்டி காலத்தில் இரவு நேரத்தில் எனது மகனது பெயரைச் சொல்லி அழைப்பதோடு ஒருசில இடையூறுகளையும் செய்த காரணத்தால் வீட்டில் உள்ள அனைவரும் நித்திரையின்றி பயத்துடன் விழித்திருந்தோம். இவ்விடயம் சம்பந்தமாக சந்நிதியானைத் தரிசித்துவிட்டு மகனுடன் சந்நிதியான் ஆச்சிரமம் சென்று மோகன் ஐயாவிடம் வீட்டில் நடைபெறும் விடயங்களைக் கூறினோம். ஐயா மகனை அழைத்து முதுகில் தடவிய வண்ணம் நான் அங்கு வருவேன். நீ பயப்படாதே. ஏதாவது பிரச்சனை என்றால் என்னை நினை அவ்விடம் உடன் வருவேன் என்றார். அவ்வளவு தான் அன்றிரவு முதல் இன்றுவரை எவ்வித இடையூறும் இல்லாத தூக்கம்.

அதுமட்டுமன்றி கடந்த சில வாரங்களாக எனக்குத் தொடர்ச்சியான காய்ச்சலும் வயிற்றுவலியும் தலைவலியும் கூடவே என்னை அளவுக்கதிகமாக வருத்தியது. எவ்வளவோ மருந்துகள் பாவித்தும் குணமடைவதாகத் தெரியவில்லை. இறுதியாக எமது குடும்ப வைத்தியர் எனக்கு மீண்டும் ஓர் சத்திர சிகிச்சை செய்யவேண்டும் எனவும் அதற்கு பல வைத்திய பரிசோதனை செய்யும்படியும் நீண்ட ஒரு பட்டியலைத் தந்ததுடன் இன்று இரவு வேதனையின்றி நித்திரை செய்வதற்கு ஒரு குறிப்பிட்டளவு மாத்திரைகளையும் தந்து காலை 6 மணிக்கு நிச்சயமாக வைத்தியசாலை செல்லும்படியும் கூறியிருந்தார். எனக்கு அநேகமாக அளவுக்கு அதிகமான பிரச்சினைகள் வரும்பொழுது மோகன் ஐயாவிற்குக் கூறுவது வழமை. ஆனால் அன்று

அறிந்தறிந்து செய்கின்ற பாவத்தை அழுதழுது தொலைக்க வேண்டும்.

எனது தொலைபேசியில் கதைப்பதற்குப் போதுமான பணம் இருக்கவில்லை. ஆகவே ஐயாவுடனும் கதைக்கமுடியவில்லை. முருகா என்னால் துன்பம் தாங்க முடியவில்லை என அழுதவண்ணம் படுத்திருந்தேன். திடீரென தொலைபேசி அழைப்பு ஐயா எடுக்கின்றார். "என்ன செய்கின்றாய்? எங்கு நிற்கின்றாய்" என்ற வினாக்களுடன் ஐயா தொலைபேசியில். என்னால் நம்பவே முடியவில்லை. ஆனாலும் என்னைச் சுதாகரித்துக்கொண்டு "ஐயா சொல்லுங்கள் ஏன் தொலைபேசி எடுத்திருந்தீர்கள்" என்று கேட்கவும் உதயன் பத்திரிகைக்கு ஒரு செய்தி அனுப்பியிருப்பதாகவும் அது சம்பந்தமாக உரும்பராயில் வசிக்கும் உதயன் பணிமனையில் கடமையாற்றும் தங்கராசா என்பவருக்குத் தெரியப்படுத்தும் படி கூறியிருந்தார். அதனைத் தொடர்ந்து நான் தொலைபேசி எடுக்கமுடியாத நிலையைக் கூறி எனது நோய் பற்றியும் ஐயாவிடம் கூறுகின்றேன். சரி காலையில் முதலில் வைத்தியசாலை செல் பிறகு பார்ப்போம் என்றார். அவ்வளவுடன் தொலைபேசி துண்டிக்கப்பட்டது. நானும் மாத்திரைகள் எதுவுமே எடுக்காது அயர்ந்து தூங்கி விட்டேன்.

அதிகாலை கண்விழித்துப் பார்க்கின்றேன். நேரம் காலை 6.45 தாண்டிவிட்டது. எனக்கு இதுவரை இருந்த எந்தவித நோயின் அறிகுறிகளும் தெரியவில்லை. வழமையை விட உற்சாகமாக எழுந்து நீராடி விநாயகப் பெருமானை வழிபட்டு அலுவலகம் சென்று விட்டேன். இன்றுவரை எந்தவித நோயும் இன்றி மிகவும் ஆரோக்கிய உற்சாகமாக எனது கடமையை ஆற்றி வருகின்றேன். இதுமட்டுமல்ல இவ்வாறான பல அற்புதங்களை நான் ஆவணப்படுத்தி வருகின்றேன். மகான்களின் மகிமை என்கின்ற இக்கட்டுரை தொடர எல்லாம் வல்ல சந்நிதியானின் அருள் வேண்டும். எனது குருவின் ஆசீர்வாதமும் வேண்டும்.

இவ்வாறாக ஞானிகளையும் மகான்களையும் போற்றி அவர்களின் பெருமைகளை தனது எழுத்தாற்றலால் விஞ்சிநிற்கும் கே.எஸ். சிவஞானராஜா ஐயா அவர்களின் எழுத்தாற்றலும் வியத்தற்குரியது. அவரது சேவைகள் ஆறுமுகநாவலர்போல் ஆல்போல் வளர்ந்து அறுகுபோல் எங்கும் வியாபிக்க சந்நிதியான் அருள் அவருக்கும் கிடைக்க வேண்டும். சந்நிதியானையும் சந்நிதியான் ஆச்சிரமத்தையும் உள்ளன்போடு நேசிக்கின்ற அவருக்கு முருகன் அருள் என்றும் கிட்டுவதாக.

"முகத்தான் அமர்ந்து இனிது நோக்கி அகத்தானாம்
இன் சொலினதே அறம்"

---

## ராமனின் அன்(ம்)பு

ராமபிரான் சீதையின்மீது அலாதி அன்பு கொண்டிருந்தார். இதற்கு உதாரணமாக, துளசி ராமாயணத்தில் ஒரு காட்சி காட்டப்படுகிறது. ராம - ராவண யுத்தம் நடக்கிறது. ராவணனின் மனதில் சீதை இருக்கிறாள் என்பதைப் புரிந்து கொண்டார் ராமபிரான். அதனால், அவனது மார்பில் அம்பைப் பாய்ச்ச ராமனுக்கு விருப்பமில்லை. அந்த அம்பு ராவணனின் மார்பில் தைத்து சீதையைக் காயப்படுத்தி விடுமோ என்று எண்ணினார். அந்த அளவுக்கு சீதையின் மீது அவர் பாசம் வைத்திருந்தார். அதனால் ஓர் உபாயம் செய்தார். ஒரே நேரத்தில் அவரது வில்லிலிருந்து 31 அம்புகள் பாய்ந்தன. அதில் 10 அம்புகள் ராவணனின் தலைகளைத் தாக்கின. 20 அம்புகள் அவனுடைய கைகளில் பாய்ந்தன. இவை பாய்ந்த வலி தாங்காமல் துடித்த ராவணன், தன்மீது பாய்ந்த அம்புகளைப் பிடுங்கி எறிய முற்பட்டான். வலிதாங்காமல் ஒரே ஒரு நிமிடம் சீதையை மறந்தான். இதைப் பயன்படுத்திக்கொண்ட கடைசி அம்பு, அவனது மார்பில் பாய்ந்து, அவனை மாய்த்தது.

*உழைக்கவும் அதன் பின் விளைவிற்காகக் காத்திருக்கவும் கற்றுக்கொள்.*

# மன்னனின் ஐயங்களைத் தீர்த்த சிறுமி

– திருமதி பொன்னுத்துரை திலகவதி அவர்கள் –

புதிதாகப் பட்டத்துக்கு வந்த ஒரு அரசர் தனது அரண்மனையைச் சுற்றிப் பார்த்தார்.

அங்கே ஓரிடத்தில் வயதுமுதிர்ந்த வயதான ஆஸ்தான வித்துவான் அமர்ந்திருந்தார். "அமைச்சரே இவர் யார்?" அரசே இவர் ஆஸ்தான வித்துவான். மன்னருக்கு ஏதாவது சந்தேகங்கள் ஏற்பட்டால் இவர்தான் தெளிவுபடுத்துவார் என்று அமைச்சர் கூறினார்.

ஐயா! ஆஸ்தான வித்துவான் அவர்களே! மூன்று சந்தேகங்களைக் கூறுகின்றேன். அவற்றைத் தெளிவாகவும் திருப்தியாகவும் விளக்கிக் கூறுங்கள். இல்லை என்றால் உமது சிரத்தைத் துண்டித்து விடுவேன் என்றார் அரசர். தங்களுடைய ஐயங்கள் என்னவோ? என்று கேட்டார் ஆஸ்தான வித்துவான். அரசர் தனது ஐயங்களைக் கூறினார். கடவுள் எங்கே இருக்கிறார்? அவர் எந்தத் திசையைப் பார்த்துக்கொண்டு இருக்கிறார்? அவர் என்ன செய்துகொண்டு இருக்கிறார்? என்னுடைய இந்த மூன்று சந்தேகங்களுக்கும் நாளை நண்பகலுக்குள் விடையுடன் வரவேண்டும்.

வேதம் சொல்லுகிறது, புராணம் கூறுகிறது, நாயனார் கூறினார் என்று எல்லாம் கூறக்கூடாது. எனக்கு விளங்கிற மாதிரி விடை சொல்ல வேண்டும். ஆஸ்தான வித்துவானின் மூளை குழம்பியது. என்ன செய்வது மனம் குழம்பியபடியே "வீட்டுக்குச் சென்றார்.அரசரின் முதல் கேள்விக்குப் பதில் கண்டுபிடிக்கப் பல்வேறு நூல்களையெல்லாம் புரட்டினார். கடவுள் சூரிய மண்டலத்தில், கடவுள் கயிலாயத்தில், கடவுள் வைகுண்டத்தில் இருக்கிறார். நூல்களைப் புரட்டிப் பார்க்கப் பார்க்க ஆஸ்தான வித்துவானுக்கே ஐயங்கள் அதிகரித்தன. அதனால் உள்ளம் தளர்ந்து அமர்ந்து விட்டார்.

சிறிதுநேரம் சென்றது. அரசரின் இரண்டாவது கேள்விக்கு விடை கண்டுபிடிப்போம். பழநியில் மேற்குப் பக்கம் பார்த்துக் கொண்டிருக்கிறார். திருச்செந்தூரில் கிழக்குப் பக்கமாக பார்த்துக் கொண்டிருக்கிறார். திருவரங்கத்திலும் சிதம்பரத்திலும் தெற்கு நோக்கி இருக்கிறார். ஆராய்ச்சி செய்தும் வித்துவானுக்கு சந்தேகங்களில் தெளிவு பிறக்கவில்லை. மூன்றாவது கேள்விக்கு விடை கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டார். ஸ்ரீரங்கத்தில் கடவுள் சயனித்துக் கொண்டிருக்கிறார். சிதம்பரத்தில் நடனமாடிக் கொண்டு இருக்கிறார். ஓரிடத்தில் உட்கார்ந்து இருக்கிறார், மற்றோர் இடத்தில் நின்று கொண்டு இருக்கிறார். ஓரிடத்தில் சம்ஹாரம், மற்றோரிடத்தில் அனுக்கிரகம், ஓரிடத்தில் திருமணம், மற்றோரிடத்தில் சந்நியாசம். சிந்தித்துப்பார்க்க பெரும் குழப்பம்தான் ஏற்பட்டது.

அரசன் கூறிய நேரமும் நெருங்கி விட்டது. தக்க விடை கிடைக்காததால் கவலையுடன் இருந்தார் ஆஸ்தான வித்துவான். அவரது பேத்திக் குழந்தை விளையாடிக் கொண்டிருந்தது. அந்தக் குழந்தை ஆஸ்தான வித்துவானிடம் வந்து "சாப்பிட்டாயா

தாத்தா?'' என்று கேட்டது. "அம்மா! சாகப் போகிறவனுக்குச் சாப்பாடு எதற்கு?" என்றார் ஆஸ்தான வித்துவான். "ஏன் தாத்தா அப் படிச் சொல்கிறீர்கள்?'' என்று கேட்டது குழந்தை. அவர் விடை கூறாமல் மேலங்கி யைப் போட்டுக்கொண்டு வெளியே புறப்பட் டார். "எங்கே தாத்தா போகிறீர்கள்?" என்று கேட்டாள் பேத்தி. "போகும் போதே கேட்டு விட்டாயா?'' என்று கடிந்துகொண்டார். "ஏன் தாத்தா இப்படிக் கோபித்துக் கொள்கிறீர்கள்" "முட்டாள் ராஜா கேள்வி கேட்டுவிட்டான். அவனுக்கு என்ன விடை சொல்வது புரியா மல் திகைத்துக்கொண்டு இருக்கிறேன்.

தாத்தா! அரசர் என்ன கேள்வி கேட்டுவிட்டார்? நீ போம்மா! நீ சிறுகுழந்தை உனக்கு என்ன தெரியும். "இல்லை தாத்தா நீங்கள் அந்த கேள்வியைச் சொல்லுங்கள்" என்று பிடிவாதம் செய்தது குழந்தை''. "அம்மா அரசர் மூன்று கேள்விகளைக் கேட்டிருக்கிறார். கடவுள் எங்கே இருக்கிறார்? என்பது முதல் கேள்வி. அவர் எந்தத் திசை யைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்? என்பது இரண்டாவது கேள்வி. அவர் என்ன செய்து கொண்டிருக்கிறார் என்பது மூன்றாவது கேள்வி என்றார் ஆஸ்தான வித்துவான்.

இவ்வளவுதானே தாத்தா. நீங்கள் இங்கேயே இருங்கள். நான் ராஜ சபைக்குச் சென்று இந்தக் கேள்விகளுக்கு மறுமொழி சொல்லிவிட்டு வருகிறேன் என்று கூறியது குழந்தை. நீ குழந்தை எப்படி விடை கூற முடியும் என்றார் தாத்தா. குழந்தை நேராக ராஜ சபைக்குச் சென்றது. மக்கள் ராஜ சபையில் திரளாகக் கூடியிருந்தனர். சிறுமி மன்னரை நோக்கி "வணக்கம்" என்று கூறி னாள். "நீ யாரம்மா?" என்று வினாவினர் அரசர். நான் "ஆஸ்தான வித்துவானின் பேத்தி". "உன் தாத்தா எங்கே? பெரிய கேள்விகளைக் கேட்டிருந்தால் அவரே வந்து பதில் சொல்லி இருப்பார். தாங்கள் கேட்ட சின்னக் கேள்விகளுக்கு விடை சொல்ல என்னை அனுப்பியிருக்கிறார் என்றாள். என் னம்மா நீயா விடை சொல்லப் போகிறாய்? சிரித்தார் அரசர். அரசே என்னைச் சிறு பெண் என்று எண்ணாதீர்கள். பெரிய யானையை அடக்குவது சிறு அங்குசம்தான். பெரிய மலையை உடைப்பது சிறு உளிதான். ஐயாயிரம் பொதிப்பஞ்சை எரிப்பது சிறு தீப் பொறிதான். ஆகவே வயது முக்கியம் அல்ல. அறிவே முக்கியம்.

போயும் போயும் நீங்கள் மூன்றே கேள்விகளைத் தானே கேட்டிருக்கிறீர்கள்? முப்பது கேள்விகளைக் கேளுங்கள் விடை சொல்லுகிறேன் என்று கூறினாள் சிறுமி. மூன்று கேள்விகளுக்குப் பதில் சொன்னாலே போதும். சொல்லு பார்ப்போம். உங்கள் முதல் கேள்வி கடவுள் எங்கே இருக்கிறார். "அரசே ஒரு பெரிய அண்டாவில் பால் கொண்டு வரச்சொல்லுங்கள் என்றாள். மன்ன னின் ஆணைப்படி பாலும் வந்து சேர்ந்தது. மகாராஜா! அண்டாவில் உள்ள பாலில் நெய் இருக்கிறது. அது உங்கள் கண்ணுக்குத் தெரிகிறதா பாருங்கள் என்றாள் சிறுமி. அண்டாவில் உள்ள பாலை உற்று நோக்கி னார் மன்னர். பால்தான் கண்களுக்குத் தெரிந்ததேயன்றி நெய்யைப் பார்க்கமுடிய வில்லை என்று கூறினார். பாலில் எங்கும் நெய் இருக்கிறதுபோல கடவுள் எங்கும் இருக்கிறார் என்று கூறினாள் சிறுமி. அம்மா! நீ சொன்னதுபோல் தெளிவாகவும் விளக்க மாகவும் இதுவரை யாரும் சொன்னதில்லை. உன்னுடைய விடை எனக்கு பூரண திருப்தி அளித்தது.

அரசே உங்கள் இரண்டாவது கேள்வி. கடவுள் எந்தத் திசையைப் பார்த்துக் கொண்டு இருக்கிறார். மகாராஜா! ஒரு பீடம் மீது விளக்கை ஏற்றி வைக்கும்படி சிறுமி

கேட்டுக்கொண்டாள். அதன்படி செய்யப்பட்டது. மன்னர் பெருமானே! இந்த விளக்கின் திரியிலிருந்து வரும் ஒளி எப்பக்கம் வியாபித்திருக்கிறது? என்று கேட்டாள் சிறுமி. மன்னர் திரியை உற்றுப் பார்த்தார். திரியின் ஒளி எல்லாப் பக்கமும் பிரகாசிக்கிறது என்று கூறினார். "திரி எல்லாப் பக்கங்களிலும் எரிவதுபோல கடவுள் எல்லாப் பக்கங்களையும் பார்த்துக்கொண்டு இருக்கிறார் என்று சிறுமி கூறினாள். அம்மா! நீ சொன்னதுபோல் தெளிவாக சாஸ்திரங்களிலும்கூடச் சொல்லப்படவில்லையே.

கடவுள் என்ன செய்துகொண்டு இருக்கிறார்? இதுதான் மூன்றாவது கேள்வி. "நான் பதினைந்து நிமிடங்கள் ராஜாவாக நடிக்க வேண்டும். அதற்கு அனுமதி கொடுங்கள். "அப்படியே". சிறுமி மகாராஜாவாக நடித்து உத்தரவு போடத் தொடங்கினாள். "மந்திரிகளைப் பிடித்துச் சிறையில் போடு. மன்னரைக் கைது செய், ஏழைகளுக்குப் பணத்தைக் கொடு. இதுவெல்லாம் என்ன என்று கேட்டார் மன்னர். இதுவா? குப்பை மேடு கோபுரம் ஆகிறது. கோபுரம் குப்பை மேடு ஆகிறது. இதுதான் ஆண்டவன் செய்கிற வேலை என்று கூறினாள் சிறுமி. ஆஸ்தான வித்துவானின் பேத்தியாகிய சிறு குழந்தை இப்படிச் சொன்னால் அவர் எப்படிச் சொல்லுவார் என்று வியந்து ஓடிப்போய் அவரின் காலில் விழுந்தான் மன்னன்.

## தங்கம்மா அப்பாக்குட்டியின் 93ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழா

### ஐந்து பேருக்கு சிவத்தமிழ் விருது

அன்னை சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 93ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழா எதிர்வரும் ஜனவரி 7ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.



துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் இளைப்பாறிய பிரதம நீதியரசர் க. ஸ்ரீபவன், அவரது பாரியார் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவும் அகில இலங்கை இந்துமாமன்ற தலைவர் கந்தையா நீலகண்டன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த அறக்கொடை விழாவில் யாழ். போதனா வைத்திய சாலைப் பெண்கள் சத்திர சிகிச்சைப் பிரிவு, தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை, மட்டக்களப்பு உதயம் விழிப்புலனற்றோர் சங்கம் மற்றும் மன்னார் கல்வி வலய மாணவர்களுக்கு கல்வி உதவி என்பனவற்றுக்கு அறக்கொடை வழங்கப்படவுள்ளதுடன் ஐந்து பேருக்கு சிவத்தமிழ் விருதும் வழங்கப்படவுள்ளன.

*ஒருவன் எவ்வளவு அதிகமாக அறிந்திருக்கிறானோ அவ்வளவு அவன் மன்னிப்பான்.*

# கண்டோம் கதிர்காமம்

[தொடர்ச்சி...

– திரு அன்னைதாசன் அவர்கள் –

பல்வேறு வகையான பயன்பெறக் கூடிய முறையிலாக அங்குள்ள பயிர்ச் செய்கை முறைகள் அமைந்துள்ளதைப் பார்வையிட முடிந்தது. ஒரு பகுதி வானளாவும் பெரு மரங்களும் ஒரு பகுதி சாதாரண மரங்களும் ஒரு பகுதி புற்றரையாகவும் காணப்பட்டது. அதேவேளையில் ஒரு பகுதியில் உள்ள பயிர்கள் அறுவடையாகி வெளியாக வரும்பொழுது அதனை மீள் பயிர்ச்செய்கைக்கு உள்ளாக்கி வருவதையும் அறியமுடிந்தது. நாம் ஏற்கனவே குறிப்பிட்ட பெருமரத்தோப்பில் உள்ள ஒரு தொகுதி மரங்கள் கந்தர் மரங்களாக இருந்தன. இந்த மரத்திலிருந்துதான் இங்குள்ளவர்கள் சவப் பெட்டிகள் செய்கின்றார்களாம். இப்பகுதியில் இதற்காக மரங்கள் தறித்துக்கொண்டிருப்பதையும் அவதானிக்க முடிந்தது. அதற்கு அடுத்த தொகுதியாக வளரும் நிலையில் ஒரு தொகுதி மரங்கள் இத்தொகுதியிலுள்ள மரங்கள் "பிறிசிலியன்" மரங்களாம். இவை முழுக்க முழுக்க விறகுத் தேவைக்கே பயன்படுத்துகிறார்கள். இவற்றிற்குப் பெரிதாகப் பராமரிப்பு ஒன்றும் தேவையில்லை. ஓர் சிறு காடுபோற் தெரிகிறது. ஆனால் ஒரு வித்தியாசம் என்னவென்றால் காலத்திற்குக் காலம் திட்டமிட்ட முறையில் கத்தரித்து ஒழுங்காக்கி வளர்க்கிறார்கள். கத்தரிக்கும் பொழுது கிடைக்கும் கழிவுகளே ஒரு பாரமாக விறகுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகத் தயார் நிலையில் உள்ளது. உண்மையில் இதனைப் பார்க்கும்பொழுது எங்கள் ஊர்களில் பாவனையில் உள்ள காணிகளிலும் பற்றைக் காடுகளே அதிகம். இங்கு பார்த்தோமானால் பலவகை விறகுத் தேவைக்கான மரங்கள் தாமாகவே முளைத்து வளர்கின்றன. வேறு ஒன்றும் தேவையில்லை. இவற்றை ஒழுங்காக்கி கத்தரித்து வளர்த்துவரின் பெரு வருவாயைப் பெறலாம் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டாக உள்ளது. குறிப்பாக மஞ்சள் உணா, வேம்பு, இப்பிலிப்பி இவற்றை இளவயதில் அழிக்காது பேணில் பெரு வருவாய் தருமல்லவா! சிந்தியுங்கள்.

அதுமட்டுமல்ல நடுத்தரக் காடாக இருந்தவை கஜு மரங்கள் (மரமுந்திரிகை) ஆம்! இவை இவர்களுக்குப் பிரதான பயன் தரும் ஓர் வேளாண் பயிராக அக்குளிர்ப் பிரதேசத்திலும் வளர்த்து பயன்பெற்றுக் கொண்டுள்ளார்கள். அதுமட்டுமல்ல இங்குள்ள தென்னை உட்பட எப்பயிர்களுக்கும் செயற்கை உரப் பாவனையைத் தடை செய்துள்ளமை இவர்களது ஆன்மீகத் தேசிய சிந்தனையின் வெளிப்பாடாக அமைந்துள்ளதைக் கண்டு வியந்தோம். சில நிழல் மரங்களைச் சுற்றி வட்டமாக கற்களை அடுக்கி அதனைச் சுற்றி அழகுபடுத்தி இருக்கைகளும் போட்டிருந்தார்கள். சுற்றுலாப் பயணிகளுக்கு காற்று வாங்கும் சூழலாக இருந்ததையும் குறிப்பிடலாம்.

இந்தவேளையில்த்தான் ஜனாப் பைஸல் அவர்களின் ஆன்மீக அனுபவத்தையும் அறியமுடிந்தது. உண்மையில் இவர் பசுவதைக்கு எதிரான அமைப்பில் இணைய வேண்டிய தன்மை இவரது சித்தர்களுடனான தொடர்பினாலேயே ஏற்பட்டது. ஆம் இவர் அந்த நாட்களில் எமது அளவெட்டியில் அமைந்துள்ள சித்தர்களின் ஆன்மீக நிலையத்தில் நேரடியாகத் தரிசனம் பெற்று

*ஒரு நிமிடக் கோபம் ஓராயிரம் வருடப் புகழையும் அழித்துவிடும்.*

அவர்களை இன்றுவரை தமது குருவாக மதித்துப் போற்றி வருவதையும் அறியமுடிந் தது. எமது கௌரிபாலா சுவாமிகள் ஏன் மயில்வாகனம் சுவாமிகளுடன் கூடத் தொடர்பு வைத்திருந்தமையினால்தான் இன்று சந்நிதியான் ஆச்சிரமத்தினூடாகத் தொடர்பு ஏற்பட்டு இன்று இந்த சந்நிதியானின் ஆச் சிரம குடாநாடு கடந்த ஆன்மீக சமூக சேவைகளில் ஒன்றான இச்சரித்திர நிகழ்வு நடைபெற்றுக்கொண்டிருப்பதையும் ஆவண மாக்கும் வாய்ப்புங் கிடைத்துள்ளது என் பதை வாசகர்களுடனும் பதிந்து வருங்காலச் சந்ததிக்குரிய பொக்கிஷப் பதிவாக ஞானச் சுடர் தாங்கிவர வாய்ப்பாகிறது. இங்குதான் அவரின் ஆன்மீக வெளிப்பாட்டை, அனுபவ உணர்வை யதார்த்தமாக்கியுள்ளமையைச் சுட்டிக்காட்டுகிறேன் பாருங்கள். "மாஸ்ரர் உங்களுடன் இன்று ஏற்படுகின்ற இந்த வாய்ப்பு எப்பவோ முடிந்த காரியம்" என்றாரே பார்க்கலாம். எல்லோரும் வியக்கும் நிலை அல்லவா. சர்வ மதத் தலைவரையும் சிந்திக்க வைத்த அச்செல்லப்பனின் திருவாக்கை வியந்து போற்றி எம் இளசுகளுக்குரிய செய்தியாக்குகிறேன். ஆக ஆன்மிக அறி வுக்குப் பட்டம், பதவி, இனம், மொழி, சாதி, சமயம் எதுவுமே தேவையில்லை, தடையும் இல்லை அல்லவா? ஆக அதுகூட ஒவ் வொரு மனிதனின் வாழ்விலும் எப்பவோ முடிந்த காரியம். ஏன் இந்தக் கட்டுரைத் தொடரும் எமக்கு எமது சுவாமிகளுடனான தொடர்பும், சந்நிதியானின் ஆச்சிரமப் பணி களும்கூட எப்பவோ முடிந்த காரியங்கள் தான் என்பது அடியேனின் அசைக்கமுடியாத நம்பிக்கை. எம் வாழ்க்கையின் சந்திப்புகள், பிரிவுகள், நிகழ்வுகள் அனைத்தும் எப்பவோ முடிந்த காரியங்கள். ஆகவே எல்லோரும் இதனைக் கருத்திற்கொண்டு ஆன்மீகத்தை வெறுமனே பேச்சளவில் மட்டும் பேசாது குறிப்பாக எவருக்கும் தீமை செய்யாது முடிந்தளவுக்கு இவர்களைப்போல எதாவது நல்லவற்றைச் செய்து வாழப் பழகுவோமாக.

மேலும் அவரது வாழ்க்கைப் பதி வாக இவரது துணைவியார்கூட ஓர் அசல் பறங்கியர் இனப் பெண்ணாவார் என்பது இவ ரின் வாழ்வின் சமபல சன்மார்க்க தத்துவத்தை துலாம்பரமாக்குகின்றது. அதுமட்டுமல்ல இந்த அம்மையாரும் அவர்களது தூய வெண்ணிற சீருடையுடன் எம் தியான நிகழ்வுகளிலும் எமக்குரிய போஷிப்புகளிலும் முற்றுமுழு தான பங்களிப்புச் செய்தமையும் எல்லோரை யும் வியக்கவைத்தது. அக்கணங்கள் மேலும் ஒரு பொல்லாப்புமில்லை என்பதற்கு அமைவாக...

(காட்சி தொடரும்...

## 'அரி' 'சி' வா'ங்கணும்

முடன் ஒருவனுக்கு கொஞ்சங்கூட இறை நம்பிக்கை இல்லாமல் இருந்தது. அவன் மனைவியோ பக்தி மிக்கவள். ஒரு சிவராத்திரியன்று, மறுநாள் சிவனடியார்க்கு அன்னமிடுவதற்காக, அவன் மனைவி அரிசி வாங்கிவரச் சொன்னாள். அவள் சொன்னதை மறந்துவிடக் கூடாது என்பதற்காக, "அரிசி வாங்கணும்!" என்று நாள் முழுதும் சொல்லிக் கொண்டே இருந்தான் அவன்.

சில காலம் கழித்து அவன் இறந்து சொர்க்கத்திற்குச் சென்றான். ஒருநாள், சொர்க்கத்தில் இருந்த மற்றவர்கள், இறைவனிடம், "பக்தியே இல்லாத இவன் எப்படி சொர்க்கத்திற்கு வந்தான்?" என்று கேட்டனர். அதற்கு இறைவன், "தெரிந்தோ தெரியாமலோ சிவராத்திரியன்று அரிசி வாங்கணும் என்று இவன் சொன்ன வார்த்தையில், அரி, சிவா "என்று இறைவன் பெயர்களை உச்சரித்ததால், அவனுக்கு மோட்சம் கிடைத்தது" என்று கூறினார்.

*நோயினால் மெலிவதைக் காட்டிலும் நோன்பினால் மெலிவது நல்லது.*

# மனிதனும் தெய்வ வியாபகமும்

– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் –

மனிதன் தெய்வ அருள் பெறுவதெப்படி என்பதுபற்றி இன்றைய சிந்தனைக்கு எடுத்துக் கொள்வோம்.

சமயம் ஒவ்வொரு மனிதனதும் வாழ்விலே, உடலுக்கு முதுகெலும்புபோல் அத்தியாவசியமாக அமைந்துள்ளது. எமக்கு அறியும் பருவம் வரும்போது நாம் எந்தச் சமயத்தைச் சார்ந்துள்ளோம் என்பதை அறிந்து கொள்கின்றோம். மதங்கள், மார்க்கங்கள் வேறுபடலாம். ஆனால் உள்ளுணர்வு ஒன்றுதான். அஃது தெய்வீகமானது ஒளிமயமானது, தூய்மையானது, வளமானது, மகிழ்வுக்குரியது. நாம் நமது ஆத்மீக இலட்சியத்தை அடைய வழிகாட்டியாய் அமைவது.

சமயம் என்றால் என்ன? இவ்வினாவுக்கு பலவிதமான விடை அளிக்கலாம். சுருக்கமாகக் கூறின் விதிமுறைக்கு உட்பட்ட வழிபாடு என்று கூறலாம். எமது சமயத்திலே தூய்மை நியதி, உருவ வழிபாடு, விரதம், தியானம், சமயச் சின்னங்கள், தோத்திரம், பூசை, மந்திரம், நேர்த்தி, விழா எனப் பல அம்சங்கள் இருப்பது கண்கூடு. அதற்கு மேலாக உருவ வழிபாட்டிலே விதிமுறைக்கு உட்பட்ட வழிபாடு, விதிமுறைக்கு உட்படாத வழிபாடு எனவும் 2 பிரிவுகள் எம்மவரிடையே இருந்து வருவது மரபு. பெருந் தெய்வ வழிபாடு, சிறு தெய்வ வழிபாடு என இவற்றைக் கூறுவர்.

இங்கு நாம் ஆதிசங்கரர் வகுத்த ஷண் மதங்களைத் தொடர்புபடுத்திப் பார்க்கலாம்.

சிவன், கணபதி, சக்தி, முருகன், விஷ்ணு, சூரியன் என ஒவ்வொரு தெய்வத்தையும் முழுமுதலாகக் கொண்டவை ஷண் மதங்கள். சிவனை முழுமுதலாகக் கொண்ட சமயம் சைவம் என்றும், சக்தியை முழுமுதலாகக் கொண்ட சமயம் சாக்தம் என்றும், கணபதியை முழுமுதலாகக் கொண்ட சமயம் காணபத்தியம் எனவும், விஷ்ணுவை முழுமுதலாகக் கொண்ட சமயம் வைணவம் எனவும், குமரக்கடவுளை முழுமுதலாகக் கொண்ட சமயம் கௌமாரம் எனவும், சூரிய பகவானை முழுமுதலாகக் கொண்ட சமயம் சௌரம் எனவும் அழைக்கப்படுகின்றன.

ஒருவகையில் ஆராய்ந்து பார்க்கின் இறைவனுடைய ஆறு பண்புகளுமே இந்த 6 சமயங்கட்கும் அடிகோலியுள்ளன எனலாம். இறைவனுடைய 6 பண்புகளாவன மங்கலம், நிறைவு, இளமை, இடர்களைதல், ஆற்றல், ஒளி என்பனவாம்.

இவற்றுள் மங்கலம், நன்மையின் வடிவமாக உள்ளது. இஃது சிவனுக்குரியது. சிவனாக மிளிர்வது.

இறைவனின் அடுத்த இயல்பு நிறைவு. எங்கும் நீக்கமற நிறைந்து நிற்கும் இயல்பு. இதனை வியாபகம் என்பர். இது விஷ்ணுவின் இயல்பாகின்றது.

இளமை- இறைவனின் இவ்வியல்பு என்றும் மாறாத இளமையுடன் இயங்குவதாம். இப்பண்பு குமரக்கடவுளுக்குரியது. இளமை அழகன் முருகனின் வடிவமாகும்.

இறைவனின் அடுத்த பண்பு யாவரினதும் இடர்களையும் நீக்கும் நற்பண்பாம் விக்கினங்களைத் தீர்த்து அடியார்க்கு அருள் புரிபவன் விக்கினேஸ்வரன் அல்லவா? ஆற்றல்- இறைவனின் அடுத்த பண்பு-

அதுவே சக்தி ஆகும். அதுவே ஆற்றல், அதுவே இயக்கம், அவளே சக்தி. சக்தியின் ஆற்றல் எல்லையற்றது. அவளது தத்துவங் கள் சொல்லில் அடங்காதவை. பிரபஞ்சம் முழுவதுமே மாயா சக்தியின் சொரூபம். சக்தியின் திருவிளையாட்டை அணு முதல் அண்டம் வரை எங்கும் காணலாம். கிரகங் களை சுழலவைக்கும் சக்தி ஆகர்ண சக்தி எனப்படும். சக்தி ஏக காலத்திலேயே அன்னையுமாகின்றாள், கன்னியுமாகின்றாள், அண்டங்களை ஈன்ற அன்னை சக்தியே, புல் முதல் பிரம்மா வரை அவளது ஆற்றலே.

அடுத்து இறைவனின் ஒளி ஆற்ற லாக எமக்கெல்லாம் ஒளியையும், வெப்பத் தையும், மழையையும் ஏன் உணவையும் எல்லையேதுமின்றி காலங்காலமாக வழங்கி வருபவனாக சூரிய பகவான் விளங்குகின் றான். ஆதித்தன், பகலவன், ஞாயிறு, சூரியன், வெய்யோன், பரிதி எனப் பல்வேறு நாமங்களையுடைய சூரியன் இல்லையேல் அண்டமெல்லாம் இருள் சூழ்ந்து விடுமல் லவா? அவன் நாம் அன்றாடம் காணும் கண்கண்ட தெய்வமாகின்றான்.

இவற்றைவிட கிராமியத் தெய்வங் களாக யாம் வழிபடும் தெய்வங்களும் எமது மரபில் உண்டு. கிராமியத் தெய்வங்களிலும் ஆண் தெய்வம், பெண் தெய்வம் என்ற பாகுபாடும் உண்டு. இவ்வழிபாடு ஆதி யிலேயே ஆற்றோரங்கள், வயல் வெளிகள், காட்டுப் பகுதிகள், குளக்கரைகள், மர நிழல்கள் ஆகிய இடங்களிலே சூலம், விருட்சம், கல், சர்ப்ப வடிவம் ஆகியவற்றை வைத்து வழிபடும் முறையில் ஆரம்பமானது.

இந்தவகையில் நாகதம்பிரான், முனி யப்பர், காத்தவராயன், மதுரைவீரன், பெரிய தம்பிரான், வைரவர், ஐயனார், வீரபத்திரர், வைரவர் ஆகியோர், கிராமிய ஆண் தெய் வங்களாக வழிபடப்பட்டனர். மாரி, காளி, நாச்சியார், வராகி, சீதையம்மன், பேச்சி அம்மாள் ஆகியோர் கிராமிய மட்டத்தில் பெண் தெய்வங்களாக இன்றும் வழிபடப்பட்டு வருகின்றனர். இவ்வழிபாட்டு முறை, மரபு வழியாக தமிழ் மக்களிடையே சில பொதுத் தன்மைகளோடும், பல சிறப்பு அம்சங்களோ டும் இடம்பெற்று வருகின்றது. இவ்வழிபாட்டு முறையிலே அந்தணர் அல்லாதோரே பூசாரி யாக அமைந்தனர். இவ்வழிபாட்டு முறை யிலே நித்திய நியமங்கள் பெரிதாகக் காணப்படமாட்டாது. ஆலய விதிகளும் அமைப்புக்களும் குறைவு. வழிபாட்டின்போது மடை பரவுதல், பொங்கலிடல், பறை அடித் தல், பலியிடுதல், சன்னதம் ஆடுதல், உரு வருதல், ஓதிக்கொடுத்தல், திருநீறு போட்டுப் பார்த்தல், பேய்க்குப் பார்த்தல் இவ்வாறாக பலவித சடங்குகள் நம்பிக்கையின் அடிப் படையில் இடம்பெற்று வந்தன, வருகின்றன. இவை கிராமிய வழிபாட்டின் சிறப்பு அம்சங் களாகும்.

எந்த வகையில் நோக்கினும், மனி தன் எந்த வழிபாட்டு முறையிலும் தனக்கு அப்பாற்பட்டதோர் சக்தியின் வியாபகத்தை உணர்ந்து அறிந்து ஏற்றுக் கொள்கின்றான். அச் சக்தியைத் தனது வாழ்வின் வழிகாட்டி யாகவும், ஊன்றுகோலாகவும் கொள்கின் றான். எந்த வழிபாடாக அமைந்தாலும் அங்கு முதற்கண் மனதிலே அசையாத தெய்வ நம்பிக்கையும் பயபக்தியும், தூய் மையும், அகிம்சையும், தியாகமும் அமைந் திருக்க வேண்டும். அப்போதுதான் மனிதன், தெய்வத்தின்மேல் கொண்ட நம்பிக்கை பலன் அளிக்கும். சமய வழிபாடு வளரும், ஒழுக்கம் ஓங்கும், அமைதி நிலவும், நாடும் வாழ்வும் வளம்பெறும்.

*தொடக்கத்தைவிட முடிவைப்பற்றி அதிகமாகச் சிந்தனை செய்.*

(தொடர் -03)

# சமய வாழ்வு

– திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் –

"தாமின்புறுவது உலகின் புறங்கண்டு, காமுறுவர் கற்றறிந்தார்" என்ற திருமொழிப்படி பிறர் பெறும் இன்பத்தைக் கண்டு தாமும் அடையும் மகிழ்ச்சி விலங்குகளுக்கு இல்லை. மக்களிற் கற்றவராயுள்ளோர் ஏனைய கல்லாதவர் அடையும் இன்பத்தினும் மிகச் சிறந்த இன்பம் எய்துகின்றனர். கல்லாதவருக்கும், கற்றவருக்கும் அகத்தும் புறத்தும் அறிவு கிடைக்குமாயினும், அவ்வறிவு கற்றவரிடத்து நுணுகி விரிந்து பெருகிப் பேரின்பந் தருவதுபோலக் கல்லாதவருக்கு தரமாட்டாது; இதுபற்றித் தெய்வப்புலவர் திருவள்ளுவரும்

"கல்லா தான் ஒட்பம் கழிய நன்று ஆயினும்
கொள்ளார் அறிவு உடையார்"

என்று கூறுகின்றார். பொது அறிவினையுடையார் மெய், வாய், கண், மூக்குச் செவிகளால் புறப்பொருள்களை ஆய்ந்து அறிந்து அறிவு பெருகி மிக்க இன்பம் அடையமாட்டார். விலங்குகளைப்போல் உண்டு உறங்கிக் கலந்து அவ்வளவில் மகிழ்வர். கல்வியறிவுடையாரோ உலகத்துப் பொருள்களின் பலவகைத் தோற்றங்களையும், அவற்றின் அரிய அமைவுகளையும் கண்டும், இனிய ஓசைகளையும் இசைப் பாட்டுக்களையும் கேட்டும் பலவகைப்பட்ட சுவைகளையும் நறுமணத்தையும் கவர்ந்தும் மெல்லென்ற பொருட்களைத் தொட்டும், இவற்றோடு மனவறிவாற் பல கலைஞான நூல்களைக் கற்றுணர்ந்தும் ஏனைய பொது அறிவுடையாருக்கு எட்டாத ஓர் அரிய இன்பத்தைப் பெறுவர். கல்வியறிவில்லாதவர் மக்களுள் விலங்குகளேயாவர். இவ்வுண்மையை உணர்வதற்காக தமிழ் மறையும்,

விலங் கொடு மக்கள் அனையர் இலங்கு நூல்
கற்றா ரோடு ஏனையவர்

என்று கூறுகிறது.

இத்துணைப் பெரிய கல்வியறிவினையுடையவரும் நிலையில்லாத உலகத்துப் பொருள்களையும் நிலையில்லாத சிற்றுயிர்களையும் அவற்றின் நுட்பங்களையும் முற்றும் உணர்ந்து, அதனால் உண்டாகிய சிறப்பான அறிவால் சிறப்பாகிய இன்பத்தை அடைகின்றார் என்றாலும், அவரால் ஆராயப்பட்டனவும் நிலையில்லாத சிறு பொருட்களாய் இருப்பதனால் அவற்றை அறிந்த அறிவும் சிறிதாய் அவ்வறிவால் வந்த இன்பமும் சிறியதாய், அவரைப் பற்றிய அறியாமையும் முற்றிலும் நீங்காமல், அவ்வறியாமை வாயிலாக வருந் துன்பமும் அவரை விட்டு நீங்காமல் பிறவிகள்தோறும் அவரையும் துன்புறுத்தும்படியாக தொடர்ந்து வரும். ஆ! கல்வியால் எத்துணைப் பெரியவராயினும், அவர் உலகத்துப் பொருள்களைப் பற்றியும் தம்மை ஒத்த சிற்றுயிர்களைப் பற்றியுமே தமது அறிவைப் பயன்படுத்துவராயின், அவர் ஏனையோர்க்கு எட்டாத ஒரு சிறந்த இன்பத்தை அடைந்தாலும், அவ் இன்பமும் கடைசியிற் சிற்றின்பமாய் நிலையாது ஒழிந்த பின்னர் அவர் பெருந் துன்பமுடையவராய் பிறவிகள் ஏற்பட்டுத் துன்பமடைவர். இதனால் ஐயன் வள்ளுவனும்,

*கீழ்ப்படிய முடியாதவன் தலைமை தாங்க முடியாது.*

"கற்றதனால் ஆய பயன் என் கொல்? வால் அறிவன்
நற்றாள் தொழா அர் எனின்"

என்று அருளிச் சென்றார்.

இக் கற்றோரிலும் மேம்பட்ட முனிவரோ உலகத்துப் பொருட்களின் நிலையாமையினையும் சிற்றுயிர்களின் சிற்றறிவியல்புகளையும் இனிது உணர்ந்து அவற்றில் சிறிதும் பற்றில்லாமல் எல்லாப் பொருள்களிலும் பெரியதாய், உயிர்ப்பொருள், உயிரற்ற பொருள் என்னும் எல்லாவற்றிலும் நுண்ணியதாய், எல்லா அறிவுகளினும் மேலான தூய பேர் அறிவினையுடையதாய், இங்ஙனம் பேரறிவுடையதாய் இருப்பதனால் அவ்வறிவோடு பேரின்பமும், அதனால் பெறப்படும் பேரின்ப நிலையும், என்றும் நிலைபேறாயுள்ள அழியா முழு முதற்பொருளாய் விளங்கும். ஒப்புயர்வில்லா ஒரு தனித் தலைமைப் பெருங் கடவுளையே அறியும் பேரறிவு கொண்டு அப்பேரறிவோடு உருவாகும் பேரின்பப் பாற்கடலிற் திளைத்துப் பேரின்ப உருவாய் நிலைதிரியாது அமர்ந்திருப்பர். இவ்வாறு முனிவரால் அடையப்பட்ட இன்பமானது எல்லையற்ற பேரின்பக் கடலாய், எல்லா உயிர்களுங் கடைசியாக எய்துவதற்குரிய முடிந்த பதமாய் விளங்கும்.

இதுவரை கூறப்பட்ட விடயங்களிலிருந்து புழு முதல் முனிவர் ஈறான எல்லா உயிர்களும் துன்ப நீக்கத்தையும் இன்ப ஆக்கத்தையும் அவாவி முயன்றாலும் அவ்வுயிர்கள் எல்லாம் தத்தமக்கு அறிவு எட்டிய வரையிலே உலகத்துப் பொருள்களைப் பற்றியும் தம்மையொத்த சிற்றுயிர்களைப் பற்றியும் எல்லாவற்றுக்கும் மேலான கடவுளைப் பற்றியும் நின்றமையால் அவ்வுயிர்களிடத்தே தோன்றிய இன்பமும் பல திறப்பட்டதாயிற்று.

உலகத்திலுள்ள எல்லா உயிர்களும் இன்பத்தையே விரும்பி, அதனை முடிந்த பதமாகக் கருதுவது உணர்ந்து, உலகத்திலுள்ள சிறந்த சமயங்கள் எல்லாம் நிலையில்லாத ஏனைச் சிற்றின்பங்களைப் பெறுவதை வெறுத்து பேரின்பத்தை அடையவேண்டும் என அறிவுறுத்துகின்றன. இவ்வாறு நமது சைவ சமயமும் அறிவுறுத்துகின்றது. சைவ சமயாசாரிய சுவாமிகளான மாணிக்கவாசகப் பெருமான்,

"வைத்தநிதி பெண்டிர் மக்கள்குலங் கல்வியெனும்
பித்த வுலகிற் பிறப்போ டிறப் பென்னுஞ்
சித்த விகாரக் கலக்கந் தெளிவித்த
வித்தகத் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பி"

என்று அருளிச் செய்துள்ளார். உலகிற் சிறந்த ஏனைய ஆத்தீக சமயங்கள் அறிவுறுத்துவது போலவே நமது சைவ சமயமும் இவ்வாறு அறுவுறுத்துமாயின் இதில் பொதிந்துள்ள சிறப்பு என்ன என்பதில் ஐயம் நிகழாமற் போகாது.

எல்லா உயிர்களும் இன்பத்தை விரும்புவதனாலும், இன்ப உருவாய் விளங்குவது கடவுளின் சொரூப இலக்கணமாக இருப்பதனாலும், அக்கடவுளைக் குறித்துப் பேசும்போதும், அழைக்கும்போதும் இன்பம் எனும் பொருளைத் தரும் பெயரிட்டு வழங்குவதே அனைவரினாலும் விரும்பப்படும். ஆனந்தம், இன்பம், அன்பு, அருள் எனும் பொருள் கொண்ட பெயரினை இட்டு அழைக்கும்பொழுது மேற்சொன்ன இன்பநிலை உருவாகும். எனவே கடவுளை இன்பப் பெயரிட்டு அழைப்பதே சிறப்பானதாகும். உலகத்திற் சிறந்த ஆத்திக மதங்கள் கடவுளை எவ்வெப் பெயர்களால் வழங்கி வருகின்றன எனப் பார்ப்போமானால், ஒருசில

அவரை எல்லாம் வல்லவர் எனும் பெயரினாலும், வேறு சில எங்கும் நிறைந்தவர் என்றும், சில எல்லாத் தலைமையுடையவர் எனவும், வேறும்சில எல்லாம் கடந்தவர் எனவும், சில அவரைப் பெரியதிற் பெரியவர் என்றும், இன்னுஞ் சில ஒளியுருவினர் என்னும் பெயரினாலும், இவ்வாறு பலவாறு அழைக்கின்றபோதும் அவரை "இன்ப வடிவினர்" என்னும் பெயரால் வழங்குவதைக் காண்பது அரிதாகும். அறியாமையிற் கிடந்து துன்பத்தில் சுழலும் சிற்றுயிர் களான நாம் அத்துன்பத்திலிருந்து விலகி என்றும் அழியா அவரது பேரின்பத்தைப் பெறுதல் ஒன்றிலே மட்டுங் கருத்துடையவர்களாக இருப்பதனால், நமது கருத்துக்கும் நோக்கத்திற்கும் இணக்கமாய் வேண்டப்படாத அவருடைய மற்றத் தன்மைகளைப் பேசி எமக்கு ஆகப்போவதுதான் என்ன? அவர் எல்லாம் வல்லவராதலைப் பேசுதலால் எமக்கு ஏன்? அவர் எங்கும் நிறைந்தவர் என்பதனால் நாம் பெற்றதென்ன? அவர் எல்லாத் தலைமையு முடையவர் என்றுரைத்தலால் எமக்கு ஆவது என்ன? அவர் ஒளியுருவினர் என்றும் மற்றும் பல இயல்புகளை நினைப்பதால் நமக்கு வருவது யாது? நாம் அவர்பால் வேண்டுவது துன்ப நீக்கமும் இன்ப ஆக்கமுமேயாகும். யான் இவ்வாறு எழுதுவதனால் முன்சொல்லப்பட்ட பெயர்களால் இறைவனைப் பெயரிடக்கூடாது என்பதல்ல எனது கருத்து. இன்பவுருவினர் என்று அவரை வழங்குதலே நாம் கடைத்தேறுவதற்கு வழியாக அமைவதனால் அப்பெயரிட்டு அழைப்பது இன்றியமையாத கடமையாகும். இந்த உண்மையை எம்போன்றவர்க்கு கூறியவர் மாணிக்கவாசகப் பெருமான் ஆவார்.

மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப் புலனைந்தின்
வழியடைத் தமுதே
ஊறிநின் றென்னுள் எழுபரஞ்சோதி உள்ளவா
காண வந்தருளாய்
தேறலின் றெளிவே சிவபெருமானே திருப்பெருந்
துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்க யாவையுங் கடந்த இன்பமே!
என்னுடைய அன்பே!

(தொடரும்...

## பிரார்த்தனை நேரம் எவ்வளவு?

மகான் ஒருவரிடம் ஒரு புதிய சீடன் வந்து சேர்ந்தான். அவன் ஒரு அவசரக் குடுக்கை. இறைவழிபாட்டை விரிவாக- ஆனால் விரைவாகக் கற்றுத்தேற ஆசைப்பட்டான். குருவிடம் இதைச் சொல்ல, அவர் கனமான ஓலைச் சுவடிக்கட்டை அவனிடம் கொடுத்து, "இதில் உள்ளபடி பூஜை செய்" என்றார். சீடன் மகிழ்ச்சியோடு சுவடிக்கட்டை வீட்டுக்குக் கொண்டுபோய், பூஜை செய்ய முயன்றான். ஆனால், அதற்கு முழுநாளும் போதவில்லை. இவ்வளவு விரிவான பூஜாக்கிரமத்தை நம் குருநாதர் எப்படிச் செய்கிறார்? என்று மறுநாள் ஒளிந்திருந்து பார்த்தான். குருநாதர், தம் எதிரில் தட்டில் வைத்திருந்த சாளகிரமத்தை நோக்கி ஏதோ சைகை செய்தார். ஒரு வினாடி நேரம்தான்- பூஜை முடிந்துபோயிற்று. சீடனுக்குச் சந்தேகம் வந்தது. "மற்றவர்களைக் கஷ்டப்பட்டு பூஜை செய்யச் சொல்லிவிட்டு, தான்மட்டும் சுலபமாக முடித்துக்கொள்கிறார்" என்று நினைத்தான். தயங்கித் தயங்கி தன் சந்தேகத்தைக் கேட்டான். மகான் புன்னகையுடன் சொன்னார் "உண்மைதான். எனக்கு அந்த ஒரு வினாடி நேரம்கூட அதிகம்தான். ஆனால் உன்போன்றவர்களுக்கு 24 மணிநேரமும் போதாதுதான்!" தான் அவசரப்பட்டது தவறு என்பதை சீடன் புரிந்துகொண்டு குருவை வணங்கினான்.

*உனக்குத் தேவையான எல்லா வலிமையும், உதவியும் உனக்குள்ளேயே உள்ளன.*

# 2017இல் சந்நிதியான் ஆச்சிரம சேவை -ஒரு சுருக்கமான தொகுப்பு-

(தொடர்ச்சி...

27.10.2017 வெள்ளிக்கிழமை

வலிகாமம் வடக்குப்பிரிவு முன்பள்ளி மாணவர்களின் கலைவிழா- கண்காட்சியினை முன்னிட்டு 150 மாணவர்களுக்கான பரிசுப்பொருட்கள் வழங்கப்பட்டன.

29.10.2017 ஞாயிற்றுக்கிழமை

கிளிநொச்சி - வன்னேரிக்குளம் - ஐயனார்புரத்திலுள்ள யோகர் சுவாமிகள் திருவடி நிலைய முதியோர் இல்லத்திற்கான, விவசாயப் பயிர்ச்செய்கை ஊக்குவிப்பிற்காக ஆச்சிரமமும் ஆச்சிரமத்தோடு இயைந்த அன்புள்ளங்கள் சிலரதும் உதவியுடன் ரூபா 15 லெட்சம் பெறுமதியான உழவு யந்திரம் இங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டு நேரில் வழங்கப்பட்டது.

11.11.2017 சனிக்கிழமை

கம்பளை - அட்டபாகை - அட்டபாகை தோட்டத்தில் அமைந்துள்ள ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் கட்டுமானப் பணிக்காக ரூபா ஒரு லெட்சம் (ரூபா 100, 000/=) நேரில் சென்று ஆச்சிரம சுவாமிகளால் வழங்கப்பட்டது.

18.11.2017 சனிக்கிழமை

யாழ்ப்பாணம் - அரியாலையைச் சேர்ந்த ப. இந்திராணி என்பவருக்கு அவரது வீட்டுத் திருத்த வேலைகளுக்காக ரூபா 11,000. 00 வழங்கப்பட்டது.

20.11.2017 திங்கட்கிழமை

மலையகத்தில் பல்வேறு அனர்த்தங்களாலும் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான உடுபுடவைகள் வழங்கப்பட்டதுடன், பாரிசவாத நோயினால் பாதிக்கப்பட்ட மலையகப் பிரஜை ஒருவரின் வைத்திய செலவுக்காக ரூபா 15,000. 00 நேரில் சென்று வழங்கப்பட்டது.

01.12.2017 வெள்ளிக்கிழமை

1) கோப்பாய் வடக்கு - கோப்பாயைச் சேர்ந்த, கண் பார்வைக் குறைபாடுடைய திருமதி பரமலிங்கம் வசந்தி என்பவருக்கு மூக்குக் கண்ணாடியும்...

2) நீர்வேலி யா/ கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாசாலையின் பரிசளிப்பு விழாவிற்காக ரூபா 50,000 பெறுமதியான பரிசுப் பொருட்களும்...

3)புதுக்குடியிருப்பு - கைவேலி - 1ம் வட்டாரம் - சுரேஷ் குடியிருப்பைச் சேர்ந்த எட்டு மாணவ மாணவியருக்கு,

(1) தே. துஸ்யந்தினி (5) மா. சுகன்யா
(2) சி. திலக்சனா (6) மோ. கேனுஜா
(3) சு. சுதாகரன் (7) ச. ஜஸ்மின்
(4) பெ. மேகவர்ணன் (8) ஜே. கஜந்தா

வாராந்த வெள்ளி நிகழ்வுவேளையின்போது ஆச்சிரம மண்டபத்தில் வைத்து துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

14.12.2017 வியாழக்கிழமை

கற்கோவளம் - புனிதநகரைச் சேர்ந்த க. ரஞ்சன் என்பவரது மகனின் வைத்தியத் தேவையைச் சார்ந்த போக்குவரத்துச் செலவுக்காக ரூபா 10,000. 00 வழங்கப்பட்டது.

17.12.2017 ஞாயிற்றுக்கிழமை

கிளிநொச்சி - திருவையாறில் அமைந்துள்ள செஞ்சோலை சிறுவர் பராபரிப்பு இல்லத்திற்கு, ரூபா 65,000. 00 பெறுமதியான உணவுப் பொருட்கள் ஆச்சிரம சுவாமிகளால் நேரில் சென்று வழங்கப்பட்டது.

19.12.2017 செவ்வாய்க்கிழமை

அப்புத்தளை கோணமுட்டாவ தமிழ் வித்தியாலயத்தைச் சேர்ந்த ஜெ. கோகிலா என்பவருக்கு அவரது கற்றலுக்கு உதவியாக ரூபா 15,000. 00 வழங்கப்பட்டது.

20.12.2017 புதன்கிழமை

கனகராஜன்குளம்- புதுக்குளம் பகுதியில் அமைந்துள்ள முருகர் தங்கம்மா நினைவாக நடாத்தப்படும் முதியோர் இல்லத்தின் செயற்பாட்டிற்பாக ரூபா ஒரு லெட்சம் (100,000/=) ஆச்சிரம சுவாமிகள் நேரில் சென்று கையளித்து, அவ்விடத்தில் அமைக்கப்படவுள்ள முருகன் ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்விலும் கலந்துகொண்டார்.

24.12.2017 ஞாயிற்றுக்கிழமை

1) அச்சுவேலி கதிரிப்பாயைச் சேர்ந்த சிவகுமார் சஜீபன் எனும் மாணவனுக்கு துவிச்சக்கரவண்டியும்...

2) அம்பாறை - மாணிக்கமடு - இறக்ககாமம் எனும் இடத்திலுள்ள திருவள்ளுவர் அறநெறிப் பாடசாலைக்கு போட்டோபிரதி இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்வதற்குப் பற்றாக்குறையாகவிருந்த (ரூபா 25,000/=) இருபத்தையாயிரம் ரூபாவும்....

ஞாயிறன்று நடைபெற்ற வருடாந்த திருவாசக விழாவின்போது ஆச்சிரம மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டது.

அத்துடன் 165 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

(கட்டுரைத்தொடர் - 37)

# சித்தர்களின் ஞானம்

– திரு சிவ மகாலிங்கம் அவர்கள் –

## ஈழத்துச் சித்தர்கள்

சிவயோகிகள், ஞானிகள் வாழ்கின்ற, வாழ்ந்த தேசம் பவ யோகமில்லாத பரலோகமாக விளங்கும் என்பது தவயோகி திருமூல நாயனாரின் திருவாக்கு ஆகும். சிவயோகத்தில் சிறந்தவர்கள் வாழ்ந்த நாட்டில் தீமைகள் நிகழாது, நன்மையே நடக்கும். அறிவிற் சிறந்த பெரியோர்கள் தோன்றுவார்கள். கெட்ட சேர்க்கையில்லாத அறிவுடையோர் உதிப்பார்கள். புதிய வளங்கள், யோக சித்திகள் எல்லாம் கைகூடும். அங்கு வாழும் மக்களிடம் நல்ல குண இயல்புகள் படியும். பிறவித்துயர் நீங்கிப் பேரின்ப வாழ்வைப் பெறுவர்.

சிவயோகி ஞானி செறிந்த அத்தேசம்
அவயோகம் இன்றி அறிவோருண்டாகும்
நவயோகம் கைகூடும் நல்லியல் காணும்
பவயோகம் இன்றிப் பரலோகமாமே.

எனத் திருமந்திரம் எடுத்து விளக்குகிறது.

பக்தர்கள், ஞானிகள், யோகிகள், சித்தர்கள் வாழும் நாடு தெய்வீக பூமியாகவே காட்சி தரும். இந்த நால்வகை நெறியில் நிற்பவர்கள் வாழும் நாட்டில் அல்லல்படை எதுவும் தோற்றம் பெறாது என மணிவாசகர் திருவாசகத்தின் திருப்படையெழுச்சியில் குறிப்பிடுகின்றார்.

ஈழத்து திருச்செந்தூர் என்றும், அன்னதானக் கந்தன் என்றும் போற்றப்படுகின்ற தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகப்பெருமானின் ஆலயச் சூழலில் காலம் காலமாகப் பல சித்தபுருஷர்கள் நடமாடித் திரிந்தார்கள். ஆலயத்தின் உள்வீதியின் மேற்குப் பக்கத்தில் நாகதம்பிரான் ஆலயத்திற்கு அருகில் தலவிருட்சமாகிய பூவரசு மரம் காணப்படுகிறது. அந்தப் பூவரசு மரத்தின்கீழே ஐராவசு முனிவர் என்ற தவயோகியின் பூதவுடல் சமாதி வைக்கப் பட்டுள்ளது என்பது முருக உபாசகர்களிடம் நிலவிவரும் ஐதீகமாகும். சந்நிதி முருகனின் அருள்வீச்சு நிறைந்த இடமாக பூவரசு மரநிழல் காணப்படுகிறது. பூவரசு மரநிழலில் இருந்து உள்ளம் உருகி முருகனைப் பிரார்த்தித்து தமது துன்ப துயரங்களை முறையிடும் அடியவர் களின் பிணிகள் அனைத்தும் ஆதவனைக் கண்ட பனிபோல அகன்று சென்றதை பலர் தமது வாழ்வில் அனுபவ ரீதியாக உணர்ந்துள்ளார்கள்.

ஆகம விதிமுறைகளுக்கு அமையாத பக்திவயப்பட்ட பூசை முறைகளே இங்கு நடைபெற்று வருகின்றன. மருதர் கதிர்காமர் பரம்பரையில் வந்த பரதவர் குலத்தவர்களே வாழையடி வாழையாக இங்கு கிரியைகள் செய்து வருகின்றார்கள். அறுபத்து நான்கு ஆலம் இலையில் அமுது படைத்தே நாள்தோறும் கிரியைகள் நடைபெற்று வருகின்றன. இறைவனுக்குக் காட்டப்படும் தீபம் இறுதியில் வழிபட வந்திருக்கும் அடியவர்களை நோக்கியும் காட்டப்படும் வழக்கம் இங்கு மட்டும்தான் நிலவி வருகிறது. கிரியைகள் நிறைவுற்றதும் பூசகர் முருகப்பெருமானை சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்கும் காட்சியினையும்

*அன்பினால் வழிபாடு செய்கிறவனுக்கு ஆலயக் கதவுகள் தானே திறக்கும்.*

இங்கேதான் காணலாம். பக்தர்கள் தமது வாழ்வின் துன்ப துயரங்களை எல்லாம் நேரடியாக முருகப்பெருமானிடம் உரிமையுடன் முறையிட்டுத் தீர்வுதர வேண்டும் என்று வேண்டி நிற்கும் அடியார்களின் பக்தி வெளிப்பாட்டினை இங்கே காணமுடியும்.

"ஆடுவதும் பாடுவதும் ஆனந்தமாக நினைத் தேடுவதும்
நின் அடியார் செய்கை பராபரமே"

என்று தாயுமானவர் வாக்கிற்கு அமைய ஆடியும் பாடியும் அழுதும் தொழுதும் இறைவனை வணங்கும் அடியார்கள் பலரை நாள்தோறும் சந்நிதி வேலவனின் ஆலயத்திற் தரிசிக்க முடியும்.

மூர்த்தி, தல, தீர்த்தச் சிறப்புக்கள் அனைத்தும் ஒருங்கே அமைந்துள்ள கந்தப் பெருமானது திருத்தலத்தில் அருள் வெள்ளம் மடை திறந்து பாய்கின்றது. அகத்திலே சிவயோகப் பேரின்பத்தைப் புசித்த சித்தபுருஷர்கள் பலர் சந்நிதி முருகப்பெருமான் ஆலயச் சூழலிலே வாழ்ந்து பல அருள் விளையாட்டுக்களைச் செய்தார்கள்; இன்றும் செய்கிறார்கள். சந்நிதியானின் திருவருளை மாந்திய சித்த புருஷர்கள் தம்மை நாடிவரும் பக்தர்கள் பலரின் உடற்பிணியையும் உளப்பிணியையும் போக்கினார்கள். இவர்களில் ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த கௌரிபால சுவாமிகள், மௌனகுரு கடவுள் சுவாமிகள், முருகேசு சுவாமிகள் ஆகிய மூவருமே குறிப்பிடத்தக்கவர்கள். திருப்புகழ் சுவாமிகள், சடைவரத சுவாமிகள், நடராச சுவாமிகள், ஆனைக்குட்டிச் சுவாமிகள், பன்றிக்குட்டிச் சுவாமிகள் என வேறும் பல சித்தர்களும் இந்தச் சூழலிலே வாழ்ந்து பல அருட்சித்துக்களைச் செய்துள்ளார்கள்.

## 01) கௌரிபால சுவாமிகள்

இவர் 1907ஆம் ஆண்டு ஜெர்மனியிலே பிறந்தார். இவரது இயற்பெயர் பீற்றர் யேச்சிம் ஸ்கொன்பெல்ட்டு என்பதாகும். ஜெர்மன் நாட்டிலே மேற்படிப்பைத் தொடர்ந்த சமயம் இந்துசமய ஆய்வில் ஈடுபாடு கொண்ட இவர் 1950இல் இலங்கையை வந்தடைந்தார். இந்து சமயத்தின் மூல நூலாகிய வேதங்களை ஆராய்ந்து வேத இலக்கியம் என்ற நூலை ஜெர்மன் தேசத்தைச் சேர்ந்த மக்ஸ்முல்லர் என்பவர் வெளியிட்டு இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இரண்டாம் உலகப் போரில் கௌரிபாலா சுவாமிகள் பல இன்னல்களைச் சந்தித்தார். இதன் பின்பு இவர் ஆத்மீகப் பயணம் மேற்கொண்டு இந்தியாவிற்கு வருகை தந்தார். காஞ்சி காமகோடி பீடாதிபதி, ரமணமகரிஷி போன்ற தவசீலர்களை எல்லாம் சந்தித்து அவர்களின் ஆசியினைப் பெற்றிருந்தார். கௌரிபாலா என்ற நாமம் காஞ்சி காமகோடி பீடாதி பதியால் இவருக்கு வழங்கப்பட்டது. இவர் மீண்டும் இலங்கை வந்தடைந்து யாழ்ப்பாணத்தை நோக்கித் தனது ஆத்மீகப் பயணத்தைத் தொடர்ந்தார். காங்கேசன்துறை வீதியில் உள்ள புத்தகக் கடையொன்றில் புத்தகமொன்றை வாங்கும் நோக்குடன் கையில் எடுத்தார். புத்தகக் கடை அருகே நின்ற தவத்திரு யோகர் சுவாமிகள் கௌரிபாலாவைப் பார்த்துப் பின்வருமாறு கூறினார். "நீ ஒரு முட்டாள், நீ தேடுவதை இப்புத்தகத்தின்மூலம் பெற முடியாது. சும்மா இரு" என்று கூறினார்.

செல்வச்சந்நிதி முருகப் பெருமானுடைய ஆலயத்தில் இருந்து அடியார்கள் வருடந் தோறும் கதிர்காமம் பாத யாத்திரையில் செல்லும் வழக்கம் தொன்றுதொட்டு நிலவி

வருகிறது. கல்லும் முள்ளும், காடும் மேடும் நடந்து பக்தர்கள் முருக நாமத்தை உச்சரித்தபடி பாதயாத்திரையை மேற்கொள்வார்கள். பாதயாத்திரைக்குத் தலைமை தாங்கி வழிநடத்திச் செல்பவர் முருகப்பெருமானின் ஞானா சக்தியான வேலை முன்னாலே கொண்டு செல்வார். அடியார்கள் முருக நாமத்தை உச்சரித்தபடி பின்னாலே செல்வார்கள். இந்தப் பாதயாத்திரைக் குழுவில் கௌரிபாலாவும் ஒருவராகப் பங்குபற்றிச் சென்று கதிர்காமக் கந்தனைத் தரிசித்தார்.

ஒவ்வொரு மனிதனும் நான் யார்? என்ற வினாவிற்கு விடை காண்பதன்மூலம் தன்னையும், சுற்றத்தையும், பிரபஞ்ச உண்மைகளையும் அறிந்துகொள்ள முடியும் என்றார். "தன்னை அறிந்தவன் தத்துவஞானி" என்றும் தன்னையறியத் தனக்கொரு கேடில்லை என்றும் தமிழ் மந்திரமாகிய திருமந்திரம் குறிப்பிடுகிறது. தன்னைத் தான் உணர்ந்து கொண்டு "சும்மா இரு" என்று தனது கையில் பச்சை குத்திக்கொண்டு திரிந்தார் கௌரி பாலா சுவாமிகள். தனது ஆன்மீக வாழ்வின் ஊடாகப் பெற்ற அனுபவங்களைக் கொண்டு "சும்மா இருக்கச் சூத்திரம்" என்ற தொகுப்பு நூலொன்றை வெளியிட்டார்.

## 02. மௌனகுரு கடவுள் சுவாமிகள்

இவர் வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ள அல்வாய் கிராமத்தில் 28.04.1906இல் தோன்றினார். பாரத நாட்டிற்குப் பல தடவைகள் யாத்திரை செய்து அருள் ஒளி வீசும் பல திருத்தலங்களையும் தரிசித்து வந்தார். ஞானிகள், யோகிகள், சித்தர்கள் ஆகிய பலரையும் சந்திக்கும் வாய்ப்பும் இத் திருத்தல யாத்திரையால் இவருக்குக் கிடைத்தது. அங்கே பொன்னம்பல சுவாமிகளின் ஆசியையும், அறிவுரைகளையும் பெற்றுக்கொண்டார். பொன்னம்பல சுவாமிகளின் அருளாணைப்படி இவர் மீண்டும் தாய்நாடாகிய ஈழத்திற்கு வருகை தந்தார். தன்னை நாடிவரும் பக்தர்களின் துன்ப துயரங்களை எல்லாம் நீக்கித் திருவருளினை வாரி வழங்குகின்ற செல்வச் சந்நிதி முருகப் பெருமானுடைய திருத்தலத்திற்கு வருகை தந்தார். செல்வச்சந்நிதியில் வாழ்ந்த சித்தபுருஷராகிய சின்னத்தம்பி சுவாமிகள் இவரைத் தனது சிஷ்யர்களில் ஒருவராக ஏற்றுக்கொண்டார். ஆலயத்தின் வடபகுதியில் அமைந்திருந்த தகர மடத்திற்கு அண்மையிலுள்ள கடை ஒன்றையே தனது வசிப்பிடமாகக் கொண்டிருந்தார். உதட்டில் புன்சிரிப்பு, மேனி எங்கும் உத்தூளனமாகப் பூசப்பட்ட திருநீற்றின் அழகு, நெற்றியில் திலகம், நரைத்தும் நரையாத தாடி, ஐதான கேசத்துடன் ஒரு குடுமி ஆகியவற்றுடன் அன்னதானக் கந்தனின் திருத்தலச் சூழலில் சுவாமிகள் வாழ்ந்து வந்தார். சந்நிதி முருகப் பெருமானின் திருவருளோடு தன்னை நாடி வரும் பக்தர்களின் உடற்பிணியையும் உளப் பிணியையும் நீக்கி வந்தார்.

சுவாமிகள் நோக்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் கடவுளை அகத்திலே கண்டு தரிசிக்கும் வாய்ப்புப் பெற்ற சிவானுபூதிச் செல்வராகத் திகழ்ந்தார். அகத்துறையும் அழகனாகிய சந்நிதி வேலனின் திருவருளைப்பெற்ற அநுபூதிச் செல்வராகிய சுவாமிகள் தன்னை நாடிவரும் அனைவரையும் கடவுள் என்றே அழைத்து வந்தார். சுவாமிகள் அனைவரையும் கடவுள் என்று அழைத்து வந்தமையால் மக்கள் அனைவரும் இவரைக் "கடவுள் சுவாமி" என்றே அழைத்து வந்தார்கள். ஆரம்பத்தில் குருவாரத்திலும் பின் ஆதிவாரத்திலும் மௌனத்தை மேற்கொண்டு 1976ஆம் ஆண்டிலிருந்து நித்திய மௌன விரதத்தை அனுஷ்டித்து மோன நிலையில் இருந்து ஞான வரம்பைக் கண்டார்.

*உழைத்துச் சம்பாதித்த பொருளுக்கு எப்போதும் மதிப்பு அதிகம்.*


"ஆசா நிகளந் துகளாயின பின்
பேசா அநுபூதி பிறந்ததுவே"

என்ற அருணகிரியாரின் முருக மந்திரமாகிய கந்தரனுபூதி வாக்கிற்கு அமைய ஆன்மீக சாதனையில் வெற்றி கண்டார். இதனால் இவர் மௌனகுரு சுவாமிகள் என அழைக்கப்படலாயினர். தமது குருவினால் ஆரம்பிக்கப்பட்ட "சுத்த சிவசமரச சன்மார்க்க சமாதி குருபீடத்தை செவ்வனே நடாத்தி ஒரு சீடர் பரம்பரையைத் தோற்றுவித்தார். "சாதனையின்றி ஒன்றைச் சாதிப்பாருமில்லை" என்னும் கைவல்ய நவநீத வாக்கிற்கு அமைய வெற்றுப் பேச்சால் பயனில்லை. அகமுக நோக்கு ஒன்றே ஆன்மீக உயர்வினை அளிக்கும் என்பதில் தீவிர நம்பிக்கை கொண்டிருந்தார். பல சோதனைகளுக்கு மத்தியிலும் மௌன விரதத்தினைக் கட்டிக்காத்து அதில் வெற்றியும் கண்டார்.

இவருடைய குருநாதராகிய சின்னத்தம்பி சுவாமிகள் சமாதி மறவன்புலவில் உள்ளது. இதே இடத்தில் தனது சமாதிக்குரிய இடத்தினைத் தானே தெரிவு செய்து கொண்டார். தனது குருநாதரின் குருபூசை நிகழ்வு, நிறைவெய்திய ஐந்தாம் நாள் (24.09.1980) இல் கடவுள் சுவாமிகள் மகா சமாதி நிலையினை அடைந்தார். இவருடைய சிஷ்யர்களால் மௌனகுரு சுவாமிகளின் குருபூசைத்தினம் வருடந்தோறும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இவருடைய சிஷ்யர்களில் ஒருவராகிய உடுவிலைச் சேர்ந்த விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியையாகக் கடமையாற்றிய "மலர் ரீச்சர்" உடுவிலில் மௌன ஆச்சிரமம் ஒன்றினை அமைத்தார். இந்த ஆச்சிரமத்தின் ஊடாகக் கூட்டுப் பிரார்த்தனை சத்சங்கம் என்பவற்றை நடாத்தி பல அடியவர்களை ஆன்மீக வழியில் நெறிப்படுத்தி வந்தார். 2011ஆம் ஆண்டில் அம்மையார் சிவபதம் அடைந்துவிட்டார். அம்மையாரின் சிஷ்யர்களினால் உடுவில் மௌன ஆச்சிரமம் இன்றும் சிறப்புற நடைபெற்று வருகிறது. கடவுள் சுவாமிகளின் குருபூசைத் தினத்தை உடுவில் மௌன ஆச்சிரமத்தைச் சேர்ந்தவர்கள் வருடந்தோறும் சிறப்பாக நடாத்தி வருகின்றார்கள்.

## 03) முருகேசு சுவாமிகள்

அடியவர்க்கு எளியவனாகிய சந்நிதி முருகனின் கருணைக்குப் பாத்திரமான ஞானிகளில் தவத்திரு முருகேசு சுவாமிகளும் ஒருவராவார். இவர் வடமராட்சியின் தும்பளைப் பிரதேசத்தில் 23.05.1920இல் தோன்றினார்.



இவர் அநுராதபுர பழைய பட்டினத்தில் வர்த்தகராய்த் தொழில் செய்து வந்தார். காலையிலே துயில் எழுந்து மல்வத்து ஓயாவில் நீராடியபின் நாளாந்தம் கதிரேசன் ஆலயத்திற்குச் சென்று வணங்குவதை நியமமாகக்

கொண்டிருந்தார். எப்பொழுதும் சிவசின்ன மாகிய திருநீற்றினை அணிந்து சிவப்பொலி வுடனேயே காட்சி தருவார். சிறந்த வியா பாரியாகச் சிங்கள நாட்டில் திகழ்ந்தபோதும் சந்நிதியானை அவர் என்றும் மறந்ததில்லை. செல்வச் செழிப்பிலே வாழ்ந்துகொண்டிருந்த முருகேசுவை சந்நிதியான் ஈர்க்க விரும்பிய நேரம் நெருங்கியது. திருநாவுக்கரசு சுவாமி களைச் சூலநோய் கொடுத்து ஆட்கொண் டதுபோல முருகேசு சுவாமிகளை சந்நிதி யான் ஆட்கொள்ள விரும்பினார். இவருக்கு வயிற்றில் புற்றுநோய் தோற்றம்பெற்றது. மகரகம புற்றுநோய் வைத்தியசாலைக்குப் பலமுறை சென்று வந்தும் நோய் மாற வில்லை. "சந்நிதி முருகா நீயே சரணம்" என்று அவரிடம் வந்து தஞ்சம் புகுந்தார். சரணாகதியாகத் தன்னை வணங்கும் அன்பர் களைச் சந்நிதியான் என்றுமே கைவிட்ட தில்லை. சந்நிதி வேலவனின் தீர்த்தத்தையும் திருநீற்றையும் பிணி தீர்க்கும் மருந்தாக உட்கொண்டார். நோய் முற்றிலும் குணமானது. காவி கட்டாது, வெள்ளை வேட்டியுடன் மேலே ஒரு அங்க வஸ்திரம் போட்டு இருப் பார். கழுத்திலே மெல்லிய துளசி மணி மாலை அணிந்திருப்பார். பலவகையான உடற்பிணி, உளப்பிணி என்பவற்றுக்குத் தீர்வு வேண்டி பக்தர்கள் பலர் சந்நிதி வேல வனிடம் வருவார்கள். தங்கள் துன்ப துயரங் களை உரிமையுடன் சந்நிதியானிடம் முறை யிட்டுத் தீர்வினைப் பெற்றுக்கொள்வார்கள்.

சந்நிதியானின் அருளாட்சிக்கு உட் பட்ட சித்தர்கள் ஞானிகள் முருகப் பெரு மானின் பிரதிநிதியாக இருந்து தம்மை நாடி வரும் பக்தர்களின் துன்பங்களை நீக்கினார் கள். இப்படியாகச் செயற்பட்ட சித்த புருஷர் களில் முருகேசு சுவாமிகளும் ஒருவராக மிளிர்ந்தார். சந்நிதியானின் தலவிருட்சமாகிய பூவரசு மரத்தின் பழுத்த இலையும், சந்நிதி யானின் விபூதியுமே நோய் தீர்க்கும் மருந்து களாக முருகேசு சுவாமிகளால் அடியார் களுக்கு வழங்கப்பட்டது. இவற்றைப் பயன் படுத்திய அடியார்கள் தம்மைப் பீடித்திருந்த பிணிகள் எல்லாம் நீங்கப்பெற்றுப் பூரண சுகதேகிகளாக மாறினார்கள்.

வடமராட்சியில் 1987இல் நடைபெற்ற யுத்த சூழ்நிலையினால் சந்நிதி ஆலயமும் சில சிதைவுகளுக்கு உள்ளாகிப் பூசைகள் இன்றிப் பூட்டப்பட்டு இருந்தது. இந்திய சிற்பாசிரியர்களின் கைவண்ணத்தில் உரு வாக்கிய சித்திரத்தேரும் முற்றாக எரிக்கப் பட்டது. முருகப்பெருமானின் சந்நிதானத்தில் தீபம் எரியாவிட்டால் சந்நிதி வேலவனைத் தஞ்சமென வணங்கும் அடியார்களுக்குத் தான் தீமை என்பதை உணர்ந்த முருகேசு சுவாமிகள் ஆலயத்தை மீண்டும் இயங்கச் செய்வதற்காக அரும்பாடுபட்டார். தன்னுடைய பொருளையும் முதலீடு செய்து ஆலயத்தைப் புனரமைத்து தானே முன்னின்று கும்பாபிஷே கத்தை நடாத்துவித்தார்.

அன்னதானக் கந்தன் என்பது சந்நிதி முருகனுக்குரிய சிறப்புப் பெயர்களில் ஒன் றாகும். செல்வச்சந்நிதிச் சூழலில் "சோறு மணக்குது" எனத் தவத்திரு யோகர் சுவாமி கள் கூறியுள்ளார். சந்நிதி ஆலயச் சூழலில் இருபதிற்கு மேற்பட்ட அன்னதான மடங்கள் நமது நாட்டில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தத் திற்கு முன்பு சிறப்பாகச் செயற்பட்டு வந்தன. இந்த நாட்டில் ஏற்பட்ட யுத்த சந்நதத்தால் பல அன்னதான மடங்கள் சிதைவுற்று அழிந்துவிட்டன. சந்நிதி முருகனை நோக்கி வரும் அடியார்கள் உடற்பிணி, உளப்பிணி, பசிப்பிணி எனப் பல்வேறு பிணிகளுக்கும் தீர்வு தரவேண்டி முருகப்பெருமானை வழிபடு வார்கள். முதலிலே அடியார்களின் பசிப்பிணி போக்கும் மருத்துவனாகச் சந்நிதி வேலவன் செயற்படுவார். தொடர்ந்து உடற்பிணி,

*எந்த இலட்சியமும் இல்லாதது எண்ணெய் இல்லா விளக்கிற்குச் சமம்.*

உளப்பிணி ஆகிய சகலவற்றையும் நீக்கித் தன்னைச் சரணாகதியாகப் பற்றிப்பிடித்து வழிபடும் அடியவனின் துன்பங்கள் அனைத்தையும் போக்கி விடுவார்.

சந்நிதி முருகப் பெருமானின் ஆலயத்தின் தெற்குப் பகுதியிலே தென்னை மரச் சோலையின் நடுவே தவத்திரு மயில் வாகனம் சுவாமிகள் ஆனந்தா ஆச்சிரமத்தினைச் சிறப்பாக நடாத்தி வந்தார். இங்கு ஒரு தொண்டனாகப் பணியாற்றிய மோகனதாஸ் சுவாமிகள் இப்பொழுது தனது குருநாதனின் வழியில் நின்று சந்நிதியான் ஆச்சிரமத்தினை மிகச் சிறப்பாக நடாத்தி வருகின்றார்.

"அன்னதானக் கந்தன் சந்நிதியான்" என்ற கூற்றை மறையவிடாமல் சந்நிதியான் ஆச்சிரமம் அன்னதானப் பணியை இன்றும் நிறைவாகச் செய்து வருகிறது. நாள்தோறும் அன்னதானப் பணியை நடாத்தும் நிலையமாகச் சந்நிதியான் ஆச்சிரமம் திகழ்கிறது. சந்நிதியான் ஆச்சிரமம் நிலையான நிலத்தையும் கட்டிடத்தையும் பெற்று இயங்குவதற்கு முருகேசு சுவாமிகளும் பங்களிப்புச் செய்துள்ளார். முருகேசு சுவாமிகளின் குருபூசை தினம் சந்நிதியான் ஆச்சிரமத்தில் வருடந்தோறும் சிறப்பாக நடாத்தப்பட்டு வருகின்றது. நிறை ஞானியாக தவயோகியாக, சித்த புருஷராக, அருளாளராக, நடமாடும் கோயிலாக வாழ்ந்த முருகேசு சுவாமிகள் 17.03.1997இல் முருகனடி சேர்ந்தார். சந்நிதி முருகப்பெருமானின் ஆலயச் சூழலில் காலத்துக்குக் காலம் பல்வேறு சித்தபுருஷர்கள் நடமாடித் திரிந்து தமது அருள் விளையாட்டுக்களைச் செய்துள்ளார்கள். இன்றும் பல சித்தபுருஷர்கள் இங்கே நடமாடித் திரிகின்றார்கள். இவர்களில் மூவரைப் பற்றியே இக் கட்டுரையில் கூறப்பட்டுள்ளது. இங்கே வாழ்ந்த பக்தர்கள், யோகிகள், ஞானிகள், சித்தர்களுடைய வரலாறும் அவர்கள் செய்த அருள் விளையாட்டுக்களும் ஆவணப்படுத்தப் படுதல் மிகவும் அவசியமாகும்.

ஈழமணித் திருநாட்டிலே தனித்துவம் மிக்க ஆலயமாக சந்நிதி முருகன் ஆலயம் காணப்படுகிறது. இயற்கையான சூழல், பக்தன் இறைவனுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு சொல்லாடல் முறையில் வழிபடும் வழிபாட்டு முறை, கிராமியக் கலைகளான காவடி, கரகம் என்பன விழாக் காலங்களில் சிறப்பாக நடைபெறும் காட்சி, உயர்வு தாழ்வு, பெரியவன் சிறியவன், செல்வந்தன் ஏழை என்ற பாகுபாடு எதுவும் இல்லாமல் அனைவரும் சங்கமிக்கும் இடமே சந்நிதி முருகன் ஆலயம் ஆகும். சந்நிதிக்கு வந்தால் ஞானபண்டிதனின் அருளை பெறலாம். சித்தர்கள் ஞானிகளைச் சந்திக்கலாம், பக்தர்களோடு உறவாடலாம். வாழ்வியல் துன்பங்களிலிருந்து விடுபடலாம். எந்நிதியும் தரும் சந்நிதி வேலவன் தன்னைச் சரண் அடைந்தோருக்கு எல்லாம் தரக் காத்திருக்கிறான். வந்து பாருங்கள்... அவன் வாசலுக்கு...

(தொடரும்...

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

| காசுக்கட்டளை | காசோலை |
|---|---|
| செ. மோகனதாஸ் | செ. மோகனதாஸ் |
| சந்நிதியான் ஆச்சிரமம், | க.இல – 7342444 |
| தொண்டைமானாறு. | இலங்கை வங்கி, |
| தொ.இல – 0213219599, 0212263406 | பருத்தித்துறை. |

*வீழ்வதல்ல தோல்வி, விழுந்த இடத்திலேயே கிடப்பதுதான் தோல்வி.*

# படங்கள் தரும் பதிவுகள்



ஞானச்சுடர் சிறப்புப்பிரதி பெற்றோரிற் சிலர்...



நாம் துன்பப்படுவது நம் செயல்களின் காரணமாகவே. அதற்குக் கடவுள் பொறுப்பல்ல.



ஞானச்சுடர் சிறப்புப்பிரதி பெற்றோரிற் சிலர்...



வாழ்க்கையின் மகிழ்ச்சி பிறரை மகிழ்விப்பதில்த்தான் இருக்கிறது.








கடுமையான போராட்டத்தின் பலனாகக் கிடைக்கும் வெற்றிகளே மதிப்புமிக்கவை.







சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சமுதாயப் பணிகளின் வரிசையில் வறுமைக்கோட்டின்கீழ் கல்வி கற்கும் புதுக்குடியிருப்பு- கைவேலி- 1ம் வட்டாரத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் எட்டுப்பேருக்கான துவிச்சக்கரவண்டிகள் ஆச்சிரம மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டபோது...



ஞானத்தைப் பெற்றவர்கள் ஞானிகளின் நட்பையும் பெறுகின்றனர்.



யாழ் கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய மாணவர்களின் பரிசளிப்பு விழாவிற்கான பரிசுப் பொருட்கள் கையளிக்கப்பட்ட போது...




பார்வைக் குறைபாடுடைய ஒரு மூதாட்டிக்கு மூக்குக் கண்ணாடி வழங்கப்பட்டபோது...

# வட இந்திய யாத்திரை - 05

(தொடர்ச்சி...

– மோகனதாஸ் சுவாமிகள் –

எப்பொழுது “நேபாளம்” போவோம் என்ற எமது எதிர்பார்ப்புக்கு ஏற்றபடி 19.11.2016 சனிக்கிழமை காலை எமது பிரயாணம் நேபாளம் காட்மண்டு நோக்கி ஆரம்பமாயிற்று. அதன் பிரகாரம் மாலை ஐந்து மணியளவில் இந்திய நேபாள எல்லையில் அமைந்துள்ள கடவுச்சீட்டு அலுவலகத்தை அடைந்தோம். நேபாள நாட்டுக்கு பிற மாநிலத்திலிருந்து உட்புகுவோர் அங்கே அமைந்துள்ள கடவுச்சீட்டு அலுவலகத்தில் தத்தமது கடவுச் சீட்டுகளைக் கொடுத்து அங்கே கடமைபுரியும் அலுவலர்கள் கேட்கும் வினாக்களுக்கு எல்லாம் பதிலளித்து அதன்பின் எம்மைப் புகைப்படம் எடுத்தபின்னர் நாம் உட்செல்வதற்குரிய அனுமதியைப் பெற்று எமது பயணம் காட்மண்டுவை நோக்கி ஆரம்பித்தது. அன்று இரவு முழுவதும் எமது பிரயாணம் தொடர்ந்து மறுநாள் முற்பகல் 10 மணியளவில் நாம் காட்மண்டுவில் அமைந்துள்ள பசுபதீஸ்வர ஆலயத்தை அண்டியுள்ள விடுதியில் தங்கினோம்.



பூமி அதிர்ச்சி காரணமாக இடிந்தும் இடியாமலும் இருந்த பகுதியூடாக எமது பிரயாணம் தொடர்ந்தது. அதன் காரணமாக ஒரே புழுதிமயம். பழைய சுண்ணாம்புக்கட்டடங்கள் காரணமாக எல்லா இடமும் தூசி இடிந்த இடிபாடுகளின் மத்தியினூடாக பிரயாணம் செய்யும் வீதி அமைந்திருந்த காரணத்தால் புழுதி படலத்தினூடாகவே எமது பிரயாணம் அமைந்திருந்தது. தொடர்ந்து பிரயாணம் செய்த காரணத்தினால் உடல் அசதியைப் போக்கும் வண்ணம் விடுதியில் தங்கினோம்.

உலகில் நேபாளத்தில் மட்டுமே புனிதமான ருத்திராட்ச மரங்கள் வளர்கின்றன. காலாக்கினி ருத்திரனின் திருக்கண்ணிலிருந்து விழுந்த கண்ணீர்த் துளிகளிலிருந்து இம் மரங்கள் உற்பத்தியாயினவென்றும் இவற்றைப் புனிதமாகப் பேணித் தரிப்பதனால் இம்மை மறுமைப் பேறுகளைப் பெறலாம் என்பதும் ஐதீகம்.

நேபாளத்தில் கண்டகி நதியில் கண்டெடுக்கப்படும் சாளக்கிரமங்கள் வைஷ்ணவர்களாலும் சைவ சமயத்தவர்களாலும் உருவச் சிலைகளுக்குப் பதிலாக வைத்து பூஜை

செய்யப்படுகின்றது. பாகுமதி நதியோரம் அமைந்துள்ள பசுபதிநாதர் ஆலயத்தை அடைந்தோம். மிகப் பிரம்மாண்டமான ஆலயம். பரந்த நிலப்பகுதியில் இவ் ஆலயம் அமைந்துள்ளது. ஆலயத்தைச் சூழ ருத்திராட்சம் மரத்தினை ருத்திராட்சக் காய்களோடு பார்க்கும்பொழுது நம்மை அறியாமலே மனதில் பயபக்தி உருவாகின்றது. ஆலயத்தைச் சூழவுள்ள வர்த்தக நிலையங்களில் ருத்திராட்சக் காய்களை ஒருமுகம், இரு முகம் என ஆறுமுகம்வரை தரம் பிரித்து குவியல் குவியல்களாக வைத்து வியாபாரம் செய்கின்றார்கள்.

காசியை நினைவூட்டும் முகமாக ஆலய சூழல் ஒருபுறம் பாகுமதி நதி ஓடிக்கொண்டிருக்கிறது. நதிக் கரையோரம் அமைத்துள்ள நீண்ட படித்துறையோரம் பல சிறு சிறு ஆலயங்களையும், காவியுடை தரித்த தபோதனர்களையும், நதியின் மறுபக்கம் பல இடங்களில் மயானங்களையும், மயானங்களில் மனித உடல்கள் தீயுடன் சங்கமிக்கும் காட்சிகளையும் காணக்கூடியதாக இருந்தது.

ஆலயத்தின் சிறப்பம்சமாக விளங்குவது ஆலய முன் வாயிலில் அமைக்கப்பட்டிருந்த மிகப் பிரமாண்டமான நந்தியம்பெருமான் ஆகும். வரும் அடியார்கள் அனைவரும் பயபக்தியோடு வணங்கப்பெறும் ஒரு ஆலயமாகவும், ஆலயத்திற்குள்ளேயே படித்துறையோரம் 1008 லிங்கங்களை அமைத்து, வரும் அடியார்கள் நதியில் இறங்கி நீர்கொண்டு அபிஷேகிக்கும் முறையில் அமைத்துள்ளார்கள். நாமும் அச்செயற்பாட்டில் ஈடுபட்டு லிங்க தரிசனத்தை நிறைவேற்றினோம். சிவன் ஆலயம் என்பதை உறுதிப் படுத்துமுகமாக மூலஸ்தானம் உட்பட ஆலய வளாகம் முழுவதும் ஒரே லிங்கமயமாகப் பார்ப்போர் அதிசயிக்கத்தக்க வகையில் அமைந்துள்ளது. பூசை வழிபாட்டை முடித்து எமது குழுவினர் வர்த்தக நிலையங்களில் தத்தமக்கு ஏற்ற வகையில் ருத்திராட்ச மாலை, காய்களை வாங்கிக் கொண்டனர்.



ஆலய வழிபாட்டை முடித்து முன் மண்டபத்தில் அமர்ந்திருந்தபோது என்னோடு இருந்த நித்திய தசீதரன் ஆலயத்திற்கு வந்ததற்கான ஒரு அடையாளமும் கிடைக்கவில்லை என்று என்னோடு உரையாடிக்கொண்டு இருந்த சமயம் ஆலயத்திற்குள் இருந்து வந்த ஒரு காவியுடை தரித்த ஒரு வயோதிபர் அவர் கையில் கொண்டு வந்த ஒரு நூல் காப்பை அவரது கையை நீட்டச்சொல்லி கட்டியது ஒரு மறக்க முடியாத நிகழ்வாக அமைந்துவிட்டது. நித்திய தசீதரனுக்கும் தான் நினைத்து உரையாடிக் கொண்டு இருந்த சமயம் இவ்வகை நிகழ்வு ஒன்று இடம்பெற்றது கண்டு ஒரே ஆச்சரியம். அந்நிகழ்வை நினைத்த வண்ணம் ஆலய வழிபாட்டை முடித்து வெளியில் வந்து வர்த்தகப் பொருட்களை வாங்கும் குழுவினருடன் சேர்ந்து கொண்டோம். (தொடரும்...

*நீ தியாகம் செய்யத் தயாராக இருந்தால்மட்டுமே உலகிலுள்ள மற்றவர்களை வெல்லமுடியும்.*

உ
சிவமயம்

## திருக்கேதீஸ்வரம்
## "திருவாசகம்" ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகளின்
## 30வது குருபூசையும், திருவடி வழிபாடும்

**காலம்:**

2018. 01. 25 வியாழன் காலை 09.00 மணி
(தைத்திங்கள் 12ம் நாள்)

**இடம்:**

"திருவாசகம்" ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகள் தொண்டர் சபையினரின் இந்து கலாசார நிலையம் திருக்கேதீஸ்வரம், மன்னார்.

**தலைமை:**

"திருப்பணித்தவமணி" **திரு சி. தியாகராசா** (STR) அவர்கள்

**பிரதம விருந்தினர்:**

"வைரவச் செல்வர்" வைத்திய கலாநிதி **மு. கதிர்காமநாதன்**
(தலைவர் இந்து ஆலயங்களின் ஒன்றியம், மன்னார்)

**கௌரவ விருந்தினர்:**

**திரு ப. கஜமுகன்**
(தொழிலதிபர், மன்னார்)

**நிகழ்ச்சிகள்**

* நந்திக் கொடியேற்றல்
* மங்கள விளக்கேற்றல்
* இறைவணக்கம்
* தலைமையுரை
* திருவடி வழிபாடும் தீபாராதனையும்
* கௌரவிப்பு
  கௌரவிக்கப்படுபவர்:
  "திருமுறைநெறிச் செல்வர்" **திரு கந்தசாமி நாகரத்தினம்** அவர்கள்
* சிறப்புச் சொற்பொழிவுகள்
* தொகுப்புரை: பேராசிரியர் முனைவர் **க. நாகேஸ்வரன்** அவர்கள்
* நன்றியுரை
* திருவமுது வழங்கல்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**கலாபூஷணம் தம்பு. துரைராசா**
(செயலாளர்)

அன்புடையீர்!

**பணிகள் தொடர உதவிகோரல்**

திருவாசகத்தைத் தனது உயிர் மூச்சாகக்கொண்டு, அருள்மிகு திருக்கேதீச்சரத்திலே ஒரு ஓலைக் குடிலிலே வாழ்ந்துகொண்டு அறப்பணியும், ஆன்மீகப் பணியும் ஆற்றிய மகான் தவத்திரு "திருவாசகம்" ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகளின் நினைவாக தொண்டர்சபை ஒன்றினை உருவாக்கி அதனூடாக 20'-0"x60'-0" அளவான பொதுமண்டபத்துடன் கூடியதும் இணைந்த குளியலறை வசதியுடன் ஐந்து அறைகளைக் கொண்டதுமான இந்து கலாசார நிலையத்தை அமைத்துப் பணியாற்றி வருகின்றோம். இதனை அமைப்பதிலே பாரிய பங்களிப்பினை வழங்கிய இலங்கை அன்பர்களையும் எமது புலம்பெயர் உறவுகளையும் நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

**கீழ்க்காணும் பணிகள் எம்மால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.**

* அண்ணளவாக இரண்டு இலட்சம் ரூபா செலவில் அழகிய பீடத்துடன் மணிவாசகப் பெருமானது பஞ்சலோக சிலை அமைக்கப்பட்டு மாதந்தோறும் நிறைமதி நாளிலே திருவாசக முற்றோதல் இடம்பெறுவதுடன் திருவமுதும் வழங்கப்பட்டு வருகின்றது.

* ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகளினது பிறந்தநாள் விழா, குருபூசை, மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை, ஆன்மீகப் பெருவிழாக்கள் இடம்பெறுகின்றன.

* இவ்வாறான தினங்களிலும், சிவராத்திரி மறுநாள் தீர்த்தத்தின் போதும் ஆலய உற்சவ தீர்த்தத்தின்போதும் திருவமுது சேவை வழங்கப்பட்டு வருகிறது.

* ஆலயத்திற்கு வருகை தரும் அடியார்கள் தங்கிச் செல்வதற்குச் சிறிய நன்கொடை உதவியுடன் இங்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

**எமது மாதாந்த செலவீனங்கள்:**

* பராமரிப்பாளர், சமையல் உதவியாளர் மாதாந்தக் கொடுப்பனவு
* மின்சாரக்கட்டணம், நீர்வரிக் கட்டணம், தொலைபேசிக் கட்டணம்
* கட்டடப் பராமரிப்பு செலவீனங்கள்
* திருவமுது சேவைச் செலவீனம்
* குருபூசைகள், விழாக்கள் தொடர்பான செலவீனம்.

இவற்றுக்கு மாதாந்தம் ரூபா 35,000/- முதல் 40,000/- வரை செலவாகின்றது. மாதாந்த நன்கொடைகள்மூலம் ரூபா 10,000/- முதல் 20,000/- வரை கிடைக்கப் பெறுகிறது. மேலதிகச் செலவீனத்தை ஈடுசெய்வதில் மிகுந்த நெருக்கடிகளை எதிர்கொள்ளுகின்றோம்.

நீண்டகாலத்திற்கு எதுவிதமான தங்குதடையுமின்றி இப்பணிகளை எமது எதிர்காலச் சந்ததியினரும் முன்னெடுத்துச் செல்ல வசதியாக மாதாந்தம் ரூபா 15,000/- முதல் 20,000/- வரை வருமானம் கிடைக்கக்கூடிய வகையில் ஒரு திரட்டிய நிதியை வங்கியிலிட்டுப் பேணலாமெனக் கருதுகின்றோம். தங்களது வள்ளல் கரங்களில் நம்பிக்கை வைத்து இப்பணியில் தங்களது பேருதவியை எதிர்பார்த்து நிற்கின்றோம்.

தொடர்புகளுக்கு:

திருக்கேதீஸ்வரம் ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகள் தொண்டர் சபை
ஹற்றன் நஷனல் வங்கி, பம்பலப்பிட்டி கிளை
கணக்கு இல: 039020050869

*மேன்மையை நாடிச் செல்பவனுக்கு சிறு குறைகளும் இருக்காது.*

# வருந்துகிறோம்



பருத்தித்துறை, தும்பளையைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை பத்மநாதன் அவர்கள் 18.12.2017இல் இறைவன் பதம் அடைந்தார்.

இவர் சந்நிதியான் ஆச்சிரமத்தின் ஆரம்பகாலம் முதலே ஆச்சிரமத்தோடு நெருக்கமாகி- உதவிகள் பல புரிந்து வந்ததுடன், வருடம் தவறாமல் "ஞானச்சுடர் சஞ்சிகை வெளியீட்டு வேளையில் "வெளியீட்டுரையினை"யும் நிகழ்த்தி வந்தவர் என்பதுவும் குறிப்பிடத் தக்கது.

அன்னாரின் மறைவு அவரது குடும்பத்தாருக்கு மட்டுமல் லாமல், ஆச்சிரமத்திற்கும் பேரிழப்பாகும். அவரது ஆத்மா சாந்திபெற நாமும் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

---

# வருந்துகிறோம்

சந்நிதியான் ஆச்சிரமத்துடனும், சைவ கலை பண்பாட்டுப் பேரவையுடனும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த சைவப்புலவர், ஆசிரியர் திரு க. கைலைநாதன் அவர்களின் தந்தையார் "இராசா கந்தசாமி" அவர்கள் 02.12.2017 சனிக்கிழமையன்று இறைபதம் அடைந்தார். துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாருக்கு பேரவை தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

# தைமாத வாராந்த நிகழ்வுகள்

05.01.2018 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

விடயம் :- "மங்கள இசை"

வழங்குபவர்கள் :- மறவனூர் T.M. வாசகர் குழுவினர்

12.01.2018 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்

விடயம் :- "இன்னிசை"

வழங்குபவர் :- நயினை ப. சிவமைந்தன் அவர்கள்

(பக்கவாத்திய சகிதம்)

19.01.2018 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "கந்தபுராணம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை)

26.01.2018 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

## ஞானச்சுடர் தைமாத வெளியீடு

வெளியீட்டுரை :- திரு ஆறு. திருமுருகன் அவர்கள்

(தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம்)

மதிப்பீட்டுரை :- திரு ஆ. சிவநாதன் அவர்கள்

(அதிபர்- புட்டளை மகா வித்தியாலயம்)

241ஆவது மலர்

பதிவு இல. *QD/82/NEWS/2017*

## ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

